௳

கடவுள்துணை.

அகஸ்தியமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

வயித்தியரத்தினச்சுருக்கம்.

௩௱௰

இஃது,

சிதம்பரம்.

கருணானந்தசுவாமிகளால்

பார்வையிட்டப்பட்டு.

சிந்தாத்திரிப்பேட்டை

நாராயணசுவாமிமுதலியா

ரவர்களது

பிரபாகரஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

௲௮௱௮௰௯-[illegible]க்டோபர்-மீ.

S. 97

உ

சிவமயம்.

அகஸ்தியமுனிவரருளிச்செய்த

வயித்தியரத்தினச்சுருக்கம்.

மு ந் நூ ற் ற று ப து,

கா ப் பு,

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்,

பூரணமாய்நிறைந்தகுருமறைதாள்போற்றி
புகலுகிறேன் வயித்தியரத்னச்சுருக்கந்தன்னை
வாரணமாமுகத்தோனைப் பணிந்துவாழ்த்தி
வயித்தியந்தான் முந்நூற்றோடறுபதுக்குள்
காரணமாஞ்செந்தூரம் பற்பம்லேகியங்
கருவானதயிலமொடு கிருதமெண்ணெய்
சூரணமாக்கிராணமொடு கலிக்கமாத்திரை
சுளுவாகநாடிமுதற்சொன்னேம்பாரே

நூ ல்,

நாடிநிதானம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்,

கரிமுகனடியைவாழ்த்திக் கைதனினாடிபார்க்கில்
பெருவிரலங்குலத்திற் பிடித்தடிநடுவேதொட்டால்
ஒருவிரலோடில்வாத முயர்நடுவிரலிற்பித்தந்
திருவிரன்மூன்றிலோடிற் சேத்துமநாடியாமே (க)
ஆகியநாடிமூன்றும் படபடென்றோடிற்சன்னி
வாகினிலன்னங்கோழி மயிலெனநடக்கும்வாதம்
ஏகியவாமையட்டை யிவையெனநடக்கும்பித்தம்
போகியதவளைபாம்பு போலவாஞ்சேத்துமந்தானே. (உ)
சேத்துமமெழுந்திருக்கிற் றித்திப்புநாவிலேறும்
ஏத்தியகசப்புமீறி லெழும்பிடும்பித்தமாகும்
ஊத்தியபுளிப்புமீறில் வந்திடும்வாதமாகும்
சேத்துமந்தண்ணீர்பித்தந் தீக்காற்றுவாதமாமே. (ங)
வாதத்தில்வாதமாகில் வளர்ந்திடுமன்னம்போல
நீதுய்த்தவுடலினேர்ந்து நெகிழ்ச்சியாய்ச்சுருக்கும்வாங்கும்
ஆதுத்துப்பதறுமேனி யசனமுமற்பமாகும்
ஏதுற்றதனத்தின்மின்னே யெண்ணியேயறிந்துசொல்லே (ச)
வாதத்திற்பித்தமாகில் வாயதுகுழறிப்பேசும்
பேதித்துக்குளிருங்காலில் வீக்கமும்பெருகவுண்டாம்

தாதுற்றபுத்திதானுந் தடைபடுந்தடங்கண்மாதே
கோதுற்றவயிறுவிம்மிக் குடறனைப்புரட்டுந்தானே. (௫)

வாதத்திற்சேத்துமமாகில் வலியொடுவீக்கமுண்டாம்
பேதித்துத்தலையிடித்துப் பிணங்கியகுணங்கள்வேறாய்த்
தீதுற்றமெய்வெளுத்துத் திடமுடனசனஞ்செல்லா
பேதித்துநாவுபேசும் பெருகவேவீக்கமுண்டாம். (௬)

பித்தத்திற்பித்தமாகிற் பிதற்றிடுங்கிறுகிறுக்கும்
சத்தியுமதிகமாகுஞ் சரீரத்திலிளைப்புமுண்டாம்
அத்தியாயுலருமேனி யாகமும்வேறதாகும்
வற்றியேவெளுத்துக்காயம் வறண்டுபின்வீக்கமுண்டாம். (௭)

பித்தத்தில்வாதமாகிற் பிடரியுங்காலுங்கையுங்
குத்தத்துப்போலேயாகுங் குறுகிமெய்ப்பதறும்பின்னே
அத்தியாயுலருமேனி யாகருஞ்சுரத்தால்நோவாம்
புத்தியுமடியுமிக்கப் பொறுமைபோய்க்கோபமாமே. (௮)

பித்தத்திற்சேத்துமமாகிற் பிதற்றுவாய்குழறுமிக்கச்
சத்தியும்வாய்நீர்தானுந் தானறியாமலோடும்
சுற்றிடும்பேய்கள்போலச் சுழற்றியேவயிற்றினோவாம்
பித்தமுமெடுத்துக்கொட்டிப் பிடரியில்நோவதாமே. (௯)

வாட்டிடுஞ்சேத்துமத்தில் வந்திடுவாதமாகில்
நாட்டியகால்கள்போல நரம்பெலாம்வலித்துநிற்கும்
கூட்டியபிடரிதானுங் குன்றவேவலிக்குமாகில்
நாட்டியவிழியுமெல்லாம் நாக்குவாய்குழறுந்தானே (௰)

சீர்பெறுசேத்மபித்தந் தின்பதுகசப்புண்டாகும்
பார்பொறுநாவுதன்னிற் பலவிதம்புளிப்பினிப்பாம்
சேர்பதுபேசுமாறுந் திடமில்லைகோழையாகும்
சார்பதுகண்ணும்பீளைச் சாரும்பின்சத்தம்வேறாம். (௰௧)

சேத்துமத்திற்சேத்துமமாகிற்றிமிர்தமாயறியுஞ்சொன்னோம்
ஆத்துமநல்லநல்ல வழிவதுமெய்கண்டாயே
கூற்றன்வந்திடுவதாகுங் குறிவிழிவட்டங்கொள்ளும்
சாத்திரமறிந்துசொன்னோம் யாத்திரைநாடிதானே (௰௨)

நாடிபார்க்குங்காலம்.

காலமேசேத்துமநாடி கட்டுச்சிப்பித்தநாடி
மாலையில்வாதநாடி வகைதப்பிப்பதறிநின்றால்
ஏலவேயிவர்கட்கெல்லா மியம்பினாரிதுதானென்று
நாளஞ்சின்மரணமென்று நன்முனியருளிச்செய்தார் (௰௩)

நாடிஇலக்கணம்.

போற்றியநாடிதானும் போத்துபோற்புறந்துடித்தாற்
சீற்றுவின்னுதலேமிக்கக் கிஞ்சுகமானேகேளாய்
காத்திடுந்திங்களொன்றிற் கருதியேதீராவிட்டால்
மாற்றியமாதம்பத்தின் மரணமென்றுரைக்கலாமே. (௰௪)

குறித்திடுஞ்சேத்துமநாடி குதிரைபோல்திமிர்ந்துநின்றால்
கறுத்திடுவிழியாய்நல்ல காரிகையாளேகேளாய்

மறுத்திவைபேசவேண்டாம் வயதிவைமுடிந்ததென்று
பொருப்பில்லைதிங்களொன்றிற் புகன்றிடுமரணமாமே. (௰௫)

ஆதித்தன்சந்திரன்போ லந்தித்தநாடிதானும்
பேதித்துநிற்குமாகிற் பெருக்கவேகையினூடே
சோதித்துக்கண்டுநாடி சுரங்களிற்புக்குமாகி
வாதத்தில்வாய்வுபீடை வந்துறநிற்குந்தானே. (௰௬)

கடிந்ததோர்நாடிதன்னைக் கருதியேபார்க்கும்போது
விடிந்தபின்சேத்துமநாடி விதறியேதொடர்ந்துநின்றால்
கடிந்ததுபித்தநாடி கட்டுச்சிதுடிக்குமாகில்
மடிந்ததுவாதநாடி மாலையில்மரணந்தானே. (௰எ)

சேத்துமநாடிதானுந் தியங்கியமஞ்ஞைபோல
நாட்டியவட்டைபோல நடுங்கியேபதறிநின்றால்
கூட்டவேவேண்டாமேழு நாளினின்மரணங்கொள்ளும்
நாட்டமாய்முனிவர்சொன்னார் நயம்படக்குறித்துப்பாரே. ()

ஏற்றியதீபந்தன்னி லெரிசுடர்முனையைப்போலத்
தோற்றியநாடிதானுந் துயரறநடக்குமாகில்
கூற்றனுக்கிடமுமில்லை குறைபடாமருந்துசெய்யில்
மாற்றியவாளுடானும் வளர்ந்திடுந்திண்ணந்தானே (௰௯)

வேறு.

கண்ணும்பல்லுந்தான்கறுத்துக் கருதுமூச்சுவாய்திறந்து
உண்ணுவயிற்றிற்சேத்துமமு மோடிமிகவேதானடந்தாற்
பண்ணும்மருந்துபலியாது பண்பாய்ச்சுவாசமேல்வாங்கு
மண்ணும்விண்ணுந்தானறிய மரணமாவார்கண்டீரே. (௨௰)

வேறு.

இடைதொடைமார்பின்கீழே யெறிபடப்பதறியோடின்
முடிகிடவீங்குமாகின் மூவரிலொருவரோடில்
படரவேதாகமிஞ்சிப் பஞ்சிடுங்கண்ணும்வாயும்
அடரவிக்குணங்கள்கண்டா லறிந்துகொள்மரணமென்றே. ()

(இஃதறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

எடுக்கும்படுக்குமெழுந்திருக்கு மிளைத்தேமூச்சுதனைவாங்கும்
வடுக்கணைத்தவிழிபிரண்டு மலரவிழிக்கும்வழிபார்க்குந்
தொடுக்குந்தொடுத்தசேத்துமமுந்தொண்டைதன்னையடைப்பிக்கு
மடுத்துவருவதிதுகண்டா லறிவீர்மரணநிச்சயமே. (௨௨)

(இதுவும்-அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.)

ஊசிபோன்முகமுநீண்டு உடபெலாம்நரம்புதோன்றிப்
பாசிபோற்கண்பஞ்சிட்டுப் பர்ந்திருண்மூடுமாகில்
பேசுநாவறண்டுபேசிப் பித்தத்திதற்றுமாகில்
காசினியறியச்சொன்னோங் கண்டுகொண்மரணமென்றே. (௨௩)

நாடியான்முன்னோர்சொன்ன நற்குறிக்குணங்களாலு
நீடியவிழியினாலு நின்றநாட்குறிப்பினாலும்
வாடியமேனியாலு மலரொடுநீரினாலுஞ்
சூடியவியாதிதன்னைச் சுகம்பெறவறிந்துசொல்லே. (௨௪)

சுகம்பெறவங்கமெல்லாஞ் சுருங்கியகுணங்களாய்ந்து
முகங்குறிநாடுமெழுக்குச் செவிநுதனயனநாடி
அகந்துடியடக்குநாடி யதுகிசைவிடுகிநாடி
உகந்துடியுந்திநாடி யுண்மையாய்நடைகள்பாரே. (உ௫)
பார்மனக்கவலையற்றுப் பலபலவிசாரம்விட்டுத்
தேர்மனந்தெளிந்துநீயுஞ் செய்குணவழியிதென்று
ஊரகமுந்திதன்னி லொளிபலவியாதிசெய்யும்
தீபனவுண்டியாலே சேர்ந்திடுநோய்கடானே. (உ௬)
சொல்லியவுந்திதன்னிற் சுழித்ததோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடி யெழுபத்திராயிரத்தில்
வல்லவர்புகலுநாடி பத்ததிலேழுநீக்கி
நல்லதோர்நாடிமூன்று நயந்துநீயறிந்துபாரே (உ௭)
தான்மிகக்குளிர்ச்சிகொள்ளி தயங்கியநாடிவாதம்
மீன்முகில்குழலாய்நேய்பா விறைச்சிகளுண்டால்வாதந்
தீன்மிகவருமேகோழி தின்னவர்நாடிபித்தம்
வானநற்கனிகடன்னை வாங்கினல்வாதமாமே. (உ௮)
வாதத்திவிளநீர்பின்னை வாங்கினுனடிவாதம்
போதவேகோபமுள்ளே பொருமினுனடிபித்தம்
கோதைசேர்குழலார்தன்னைக் கூடினுனடிபித்தம்
தீதிலாமுனிவர்சொன்னர் திறமுடனறிந்துதானே (உ௯)

ஸ்திரீபுருடர்களுக்குநாடிபார்க்கும்வகை,

தானெனவுலகத்துள்ளே தயங்கியநாடிபார்க்கில்
வானெனுமின்னேகேளாய் வரும்புலன்சொல்லக்கேளு
நானெனும்புருடற்கெல்லா நாடிதான்வலக்கையாகும்
தேனெனுமடவார்க்கெல்லாந் திடம்பெறவிடக்கைசித்தே. (௩௰)

நாடிபார்க்கும்-மாதவனை,

சித்திரைவைகாசிக்குச் செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி யைப்பசிகார்த்திகைக்கு
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதையுமாசி
வித்தகன்கதிரோன்மேற்கில் விழுகின்றநேரந்தானே. (௩௧)
தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும்
மானமாம்புரட்டாசிக்கு மற்றைராத்திரியிற்பார்க்க
தேனென்றுமூன்றுநாடித் தெளிவாகக்காணுமென்று
கானமாமுனிவர்சொன்ன கருத்தைநீகண்டுபாரே. (௩உ)

நாடிநிதானம்-முற்றும்.

(*—(*)—(*)—*)

சித்தாநந்தவைரவம்

இஃதெண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாரப்பாபுலத்தியனே சித்தானந்தம் பரிவானவைரவந்தான் சொல்லக்கேளு, சேரப்பாதிரிகடுகு * சிவப்புநாவிதிறமான* வெரிச்சலொடு * பொரிச்சலேழும், நீரப்பாசமன்கூட்டிப் பழத்தின்

சாற்றால்நிசமாகநாற்சாமமரைத்துக்கொண்டு, தாரப்பாகுன்றிபோ
னிழலுலர்த்தி தப்பாமற்செப்பில்வைத்துச்சொல்லக்கேளே (௫௫)

* சிவப்பு லிங்கம் *எரிச்சல்பெருங்காயம்

* பொரிச்சல்-வெண்காரம்,

கேளப்பா விஞ்சிநீருள்ளித்தயிலங் கெடியான மூலைப்பாலிற் கொடுத்தாயானால், நாளப்பாசன்னிவகையெல்லாம் போகு நலமானதேன் கூட்டிக்கொடுத்தாயானால், தாளப்பா தோஷமென்றதெல்லாம்போகுந் தப்பாதுகண்ணிலிடத்தீருந்தீரும், தேளப்பாரசானந்தவைரவந்தான் செப்புகிறேன்* சிவப்புநாற்*பொரிதானெட்டே, ()

* சிவப்பு லிங்கம் * பொரி.வெண்காரம்.

இரசானந்தவயிரவம்

எட்டப்பாநாவியீராறுமாகு மிதமானதிப்பிலியும் பன்னிரண்டு, தட்டப்பாவிஞ்சிரசந்தன்னாலாட்டித் தளமாகநாற்சாம மரைத்துக்கொண்டு, விட்டப்பாமிளகுபோனிழலுலர்த்தி விருதானசெப்பில்வைத்துச்சொல்லக்கேளு, அட்டப்பாவநுபானமறிந்துபோடுஅப்பனேசன்னியென்ற மூலம்போமே, (௫௫)

வாதராக்ஷசன்

போமப்பாவாதராக்ஷசனைக்கேளுபுதுமையாம் * வேந்தனொடு * நாற்றங்காந்தனு, சேமப்பாவப்பிரகந்தாம்பிரவற்பம் திறமாகவஞ்சுவிதம் சமனாய்க்கூட்டிச், சாமப்பாவெள்ளைச்சாரணைபின் சாற்றால் தளமாகநாற்சாம மரைத்தபின்பு, வேமப்பாசிந்தியிடகியாழந்தன்னால் வெகுசுருக்காய்நாற்சாமமரைத்திடாயே (௫௬)

* வேந்தன்-ரசம் * நாற்றம்-கந்தகம்

அரைத்திடுவாய்கொடிவேலிக் கியாழந்தன்னால்அருந்துளசிச்சாறு * திரிபலைக்கியாழம், அரைத்திடுவாய்வெவ்வேறேசாமம்ரண்டுஅழகாகமாத்தையாயுருட்டிக்கொண்டு, அரைத்திடுவாய்சாரணையினிலையரைத்து அன்பாகமருந்தை யுள்ளேவைத்துமூடி, அரைத்திட்டவிலைகருகப்புடத்தைப்போடு ஆறினபின்னெடுத்ததனாலரைக்கக்கேளே (௫௭)

* திரிபலை-கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிக்காய்.

கேளப்பாசித்திரமூலத்தின்கியாழம்கிருபையாய்நாற்சாமமரைத்துக்கொண்டு, நாளப்பாமும்மூன்றுவராகன்வீதம்நலமாகவேயுருட்டிக்கட்டிக்கொண்டு, தாளப்பாநிழலுலர்த்தி வைத்துக்கொண்டுதளமானசன்னிவகைதோஷமெல்லாம், வேளப்பாவனுபானமறிந்துபோடு வெகுசுருக்காய்வாதமெல்லாம்விழலாய்ப்போமே. (௫௮)

சுயமக்கினி.

போமப்பாசுயமக்கினிசொல்லக்கேளு புகழானரசமூன்று*நாற்றம்ரண்டு, காமப்பாகாந்தசெந்தூரம்நாலுகலங்காதே*சிலையிரண்டுசிவப்பிரண்டு, தாமப்பா வெழுகுபொடிபலந்தானொன்றுதவறாமல்*குமரிச்சாறரைப்புக்கேளு, ஆமப்பா பட்சமொன்றுவரைத்துருட்டு அப்பனே யிஞ்சிரசந்திரிகடுகுதூளே. (௫௯)

* நாற்றம்-கந்தம்* சிலை-மனோசிலை* சிவப்புலிங்கம்.

* குமரி-சோற்றுக்கற்றாழை.

தூளிலே தேன்கூட்டிப்பணவிடைதான்போட்டுத்தொடர்ந்து வாரமண்டலந்தான்கொண்டாயானால்,நாளிலேயக்கினியாமந்தந்தீரும் நாடாது பீலிகையுங்குன்மவாய்வும்; தேளிலே வாயுவென்ற தெல்லாந்தீருந்திறமானகவுசியொடுபாண்டுதீரும், சூளிலேசுரமெல்லாஞ்சுருக்காய்த்தீரும், சுகமாகும்பத்தியந்தான் புளிகசப்புத்தள்ளே. (சல)

இதுவுமொருவகை.

தள்ளவேயின்னமொருசெய்திகேளு தயவானவேந்தனென்று நாற்றம்ரண்டு; விள்ளவேஅயப்பொடிதானுலுங்கூட்டிவிருதானகுமரிச்சாரதனலாட்டிப், பள்ளவேநாற்சாமமரைத்துருட்டிப்பாங்கானவெருக்கிலையாற் சுற்றிக்கட்டிக், கள்ளவே பாண்டத்தில்பக்ஷம் வைத்துக் கலங்காதேபொடிசெய்து திரிகிற்கொள்ளே. (சக)

கொள்ளடாதேன்கூட்டிமண்டலந்தான்கொடிதானகுன்மமெட்டும்பீலிகையுந்தீருந் தள்ளடாபாண்டுவகையெல்லாந்தீருந் தளமானவக்கினியாமந்தந்தீரும், நள்ளடா விஞ்சிரசந்தேனுங்கூட்டிநலமானமண்டலந்தான்கொண்டாயானல், விள்ளடாசுரமென்றதறுபானன்கும் விட்டுவிட்டுக்கடல்புக்கும் விருதுப்போடே. (சஉ)

கபாடமாத்திரை,

போடவேகபாடமாத்திரைதான்கேளு புகழானசாதிக்காய்ப்பத்திரிக்காயம்,நாடவேசிரகமும்விடையங்கிராம்புநலமானவபினி*சடைவன்னிக்கற்பந்,தேடவேவெந்தயமுங்கழற்சிவித்து திறமானகுரோசாணிபதினென்றுந்தான், ஆடவேசமந்தூக்கிகல்வத்திட்டுஅப்பனே*யானந்தமூலிச்சாறே. (சஙு)

* சடைவன்னிகற்பகம் - சடைக்கஞ்சாஆனந்த-மூலிகஞ்சா

சாற்றாலேநாற்சாமமறைத்துக்கொண்டு சாதகமாயிலந்தைவிரைப்பிரமாணந்தான், காத்தலே மேதியென்ற தயிர்நாண்மூன்று கசக்காதே*மதுவிலிடுமூன்றுநாள்தான், வார்த்தாலேவாழையிடபூவின்சாற்றில்வகையானதனிச்சாற்றி விட்டாயானல், வேத்தாலேயிரத்தமூலஞ்சிழ்க்கிராணி விதமானசலக்கிராணி தானுமாமே. ()

*மது-தேன்

ஆமப்பாசதக்கிராணி வாய்வுக்கிராணி அப்பனேருசிகா கிராணந்தீரும், போமப்பாசோறுசோறுக்கழிகிராணி பொலிவானநீரதாக்கிராணிதீரும்,நாமப்பாவயிற்றிலுள்ளகடுப்புந்தீரும் நலமானபாண்டுநோய்க்கிராணிதீரும், தாமப்பா வதிசாரக்கடுப்புந்தீருந்தப்பாதுபுளிக்கூட்டிப்பத்தியம்போடே. (சஞு)

பூபதிகுளிகை

போடப்பாசட்டலத்துண் ணேய்கள்போகப் பூபதிதன்மருந்தொன்றுசொல்லக்கேளு, சாடப்பாதங்கமொடுவெள்ளிநாகந் தளமானலோகமொடுமுத்திரத்தினம், நாடப்பாசூதமொடு கெந்திலிங்

கம் நலமானசிலையொடுதார்சிங்கிளுவி, ஆடப்பா வினையெல்லாம்
பழச்சாற்றுலே ஆட்டியேநாற்சாமம்வில்லைசெய்யே. (௪௬)

செய்யப்பாரவியுலர்த்தியகலில்வைத்துத்திறமாகமேல்மூடிச்
சீலைசெய்து, வையப்பாமுப்புடத்தில்சிவந்துபோகும் வளமாகவெ
டைக்கெடைதான்லிங்கங்கூட்டி, மெய்யப்பாமுலைப்பாலி னுன்கே
சாமம், விடாமலரைவிரனீளவிண்டைசெய்து, கையப்பாநிழலுலர்
த்திச்செப்பில்வைத்துக்கலங்காதேவைரவற்குப்பூசைபண்ணே. ()

பண்ணியேபூபதியைமுலைப்பாலுக்குப் பரிவாக.வரிசியெடை
கொடுத்தாற்கேளு, சண்ணியேசன்னிபதின் மூன்றுந்தீரும் தப்பா
துதோஷமென்றதேழுந்தீரும், கண்ணித்திரிதோஷஞ்சிங்கிலிதமெ
ல்லாங் காணுதுகடல்புக்குங்கருதிப்பாரு,விண்ணியே சிரசினின்ற
தோஷமெல்லாம்வெகுசுருக்காய்த்திருமடாவிளாந்துபாரோ.(௪௮)

பாரப்பாபூபதியை யிஞ்சிச்சாற்றிற் பரிவான தேன்கூட்டிக்
கொடுத்தாற்கேளு, சாரப்பாசமமாகப்போனுலுந்தான் சாதுரியப்
பிராணன்வந்துசற்றேபேசும், ஆரப்பா பிரமலபி யவ்வளவேயாயி
ன் ஆசித்துப்பேசிவிட்டுமரணமாவான்,தாரப்பாபூபதியைச்சொன்
னேன்சொன்னேன் சாதித்துவயித்தியஞ்செய்தருமமாமே (௪௯)

இரசசிந்தாமணி,

ஆமப்பாரசசிந்தாமணியைக்கேளுஅப்பனேசூதமொடுசிவந்த
ரத்தம், தாமப்பாதங்கமொடுவெள்ளிமுத்துத்தயவானபவழமொடு
தீட்சணந்தா, நாமப்பாசிலைகெந்தியப்பிரோகம் நலமாகவகைக்குமி
ருகழஞ்சுகூட்டிக்; * காமப்பால்விட்டரைப்பாய் சாமம்நாலு கரு
வானசித்திரமூலக்கியாழந்தானே. (௫௰)

* காமப்பால்-முலைப்பால்

கியாழத்தாலரைத்திடுவாய்சாமம்நாலு கெடிதான வெருக்கம்
பாற்ஜாமம்ரண்டு, வியாயமாஞ்*சோகிதனிலடைத்துக்கொண்டுநில
வரமாய்மூலமென்றசாம்பலுக்குள்,வியாழமாயறையறையாய்வைத்
துமூடி விதமாகவெழுசீலைமண்ணுசெய்து; தியாழமாயிரவிதனிலு
லரப்போட்டுத்திறமாகக்கெசப்புடத்திற்சென்றுவாங்கே (௫௧)

* சோகி-பலகறை,

வாங்கியேயெடைக்கெடைதான்சூதங்கூட்டி மைந்தனேநாபி
முக்காற்கழஞ்சுகூட்டி, ஓங்கியேநாற்சாமந்திரிகடுகுகியாழமுத்தம
னேதிரிபலையின்கியாழந்தன்னுற், றேங்கியேயிருசாம மறைத்தபி
ன்புதிறமாகவெருக்கினிடபட்டைச்சாற்றில், தாங்கியே யிருசாமம
ரைத்துருட்டித் தப்பாமணிழலிலேயுலர்த்திவையே. (௫௨)

வைத்திதனைவைரவற்குப் பூசைபண்ணு வாகாகக்கணபதியை
ப்பூசைபண்ணு, தைத்ததொருமாத்திரைக்குச் செபந்தான்பண்ணு
தப்பாமற்றேவியைத்தான்பூசைபண்ணு, சித்திதருமாத்திரையைய
னுபானத்தில் திறமாகக்குன்றியெடை கொடுத்தாற்கேளு, பற்றிநி
ன்றசன்னிமுதற்ருேஷமெல்லாம் பறக்குமடாசுரமென்றதெல்லாந்
தானே. (௫௩)

தானென்றரசசிந்தாமணியின்பேரைச் சாற்றினுல் யமதூதர்
நடுங்குவார்பார், ஆனென்றேயிருந்தாக்கால் வயித்தியோரே யெய்

துமோமாத்திரைதானியம்பக்கேளு, பானென்றமாத்திரைகள்பண்பாய்ச்செய்து பரிவானவுலகத்தில்வயித்தியஞ்செய்ய, தேனென்ற வயித்தியர்க்குச்சொன்னேனிந்நூல்திறமானவாதி யென்றுற்செய்வான்பாரே. (௫௪)

கோரோசனக்குளிகை,

பாரப்பாகோரோசனைக் குளிகைகேளும் பாங்காகக்கோரோசனைகுங்குமப்பூ, சாரப்பாகர்ப்பூரம்ரசசெந்தூரஞ்சார்பானபச்சைக்கர்ப்பூரமேலாம், சேரப்பாவப்பிரோகங்கிராம்புகோஷ்டம்திறமானசாதிக்காயக்கிராகாரம், ஆரப்பாவகையொன்றுகழஞ்சுமூன்றுஅப்பனேகல்வத்திற்பொடித்துக்கொள்ளே, (௫௫)

பொடித்திதனையரைப்பதற்குக் கியாழங்கேளு பேரானசந்தனத்தூள்கியாழஞ்செய்து, துடித்திதனைச்சாமநாலரைத்துக்கொண்டு துலங்கவேசண்பகப்பூக்கியாழஞ்செய்து, கடித்திட்டுவிருசாமமரைத்துக்கொண்டு கருவானகுங்குமப்பூக்கியாழஞ்செய்து, துடித்திட்டுவிருசாமமரைத்துக்கொண்டுதுலங்கவேகுன்றிபோ லுண்டைசெய்யே. (௫௬)

உண்டைசெய்து நிழலுலர்த்திச்செப்பில்வைத்து உத்தமனே மூலைப்பாலில்கொடுத்தாயானால், தொண்டையுறுசேத்துமங்கடோண்ணூற்றுறுந் தொலைந்துவிடுஞ்சன்னியெலாஞ்சொல்லாதோடுசுமண்டைகட்டுச்சூலைமுதனீர்த்தோஷங்கள்மபக்கமொடு சேத்துமரம்மாண்டுபோகும், சண்டையிட்டுவந்ததொருவலிப்பிசுவுஞ்சண்ணுண்டுபோகுமடா சொல்லக்கேளே, (௫௭)

பூமணிக்குளிகை.

கேளடாபூமணிதான்சொல்லக்கேளு கிருபையாம்ரோகணியுமிலுப்பைம்பூவும், நாளடாவாளமது ரெட்டிசேர்த்து நலமானமரிச்சாறதனாலாட்டிவேளடாநாற்சாமமரைத்துக்கொண்டுவிதமான தூதளங்காய்ப்போலுருட்டித், தாளடாநிழலுலர்த்திச்செப்பில்வைத்துத்தளமானவிஞ்சிரசந்தேனுங்கூட்டே, (௫௮)

கூட்டியமாத்திரைதானொன்றுதேய்த்துக் குழப்பியேகாலமே கொடுத்தாற்கேளு, நாட்டியதோர்சன்னிசுரமெல்லாந்திரும்நலமானவிடசுரமும்நாடாதோடும், தீட்டியதோருள்ளியென்றதைலத்தாட்டத்திறமானதோஷமெல்லாந் தீருந்தீரும், வாட்டியேயெண்ணெயிலேகொடுத்தாயானால் வாங்கிவிடும்வாயுவெல்லாமாண்டுபோமே

அர்த்தநாரீஸ்வரம்.

போமப்பாஅர்த்தநாரி சூரணந்தான்கேளுபுகழானசூதமொடுநாவிகெந்தி நாமப்பாவெண்காரம்சமனாத்தூக்கி நலமான நொச்சியிலைச்சாற்றினாலே, வேமப்பாவிருசாம மரைத்துக்கொண்டு விதமானகுகையிலிட்டுச்சீலைசெய்து, தரமப்பாமண்செய்து சட்டிக்குள்ளேதயவாகவுப்பையிட்டுக் குகையைவையே (௬௰)

வைததிலேமேலுமந்த வுப்பைக்கொட்டி வாகாமேற் சட்டிகொண்டுமூடி, தைத்ததிலேசீலைசெய் தடுப்பிலேற்றித் தப்பாமற்கமலவன்னி நாலுசாமம், கைத்ததிலேயாறவிட்டெடுத்துக்கொண்டு நலமானசெங்கழுநீர்ச்சாற்றினாலே; பைத்ததிலே நாற்சாமமாட்டிக்கொண்டுபருவமுடனேச்சிரசவிட்டேயாட்டே, (௬௧)

ஆட்டப்பாநாற்சாமம் பாகற்சாற்ருல் அப்பனேநாற்சாமமாட்டிக்கொண்டு, நாட்டப்பா ரவிமுகத்திலுலர்ந்தபின்புநன்ருகக் குழலடைத்துவைத்துக்கொண்டு, மூட்டப்பாபண்வெடைதூள் முன்சாற்றிவிட்டு முறையாகக்கொடுத்திடவே சுரங்கள்தீரும், காட்டப்பாவிருபுறந்தோர்புறந்தானிற்குங்கருமானமுன்சாற்றினசியம்பண்ணே, (சுஉ)

பண்ணப்பா வொருபுறத்திற் சுரந்தானிற்கும்பக்குவமாய்மறுபுறத்தினசியம்பண்ண, தண்ணப்பாவிருபுறமுந்தணிந்துபோகுந் தப்பாது ஆட்டுப்பாற்கஞ்சிகொள்ள, நண்ணப்பாபுலத்தியர்காச்சொன்னேன்கேணீ நாட்டிலுள்ளோ ரிதையறிந்து யார்தான்செய்வார், கண்ணப்பாவொளிப்பில்லை சொல்லிவிட்டேன் கருவானவைத்தியர்க்குக்கருவைக்காணே, (சுங)

சிலோதாரிமணி,

காணப்பாசிலோதாரிமணியைக்கேளு கனத்த * பொரிதிரிகடுகுபடியொவ்வொன்று, நாணப்பாகடனுரையுஞ் சூரைவித்துநலமாக்விந்துப்பு காயமொன்று, மாணப்பாநேர்வாள மிரண்டுங்கூட்டிவகைபத்துமிளநீரிற்சாமமாட்டி, பேணப்பாவிலந்தை வினாப்பிரமாணந்தான் பிசகாமனிழலுலர்த்திச்செப்பில்வையே, (சுச)

* பொரி-வெண்காரம்,

வைத்தப்பா விஞ்சிநீர்தேனுங்கூட்டி வளமானமாத்திரையைக்கொடுத்தாயானல், சத்தப்பாவாயுவொடுவாதமெல்லாஞ்சாந்தமாம்பித்தமெல்லாங்கீழேசாடும், வைத்தப்பாமதுவிலே யிட்டாயானுல்மாந்தமொடுஉப்பிசமும் வாங்கிப்போகும், எய்த்தப்பாநீரடைப்புசதையடைப்புதிரு மிதமானசிலோதாரியென்றுகாணே, (சுரு)

கரிசாலைலேகியம்,

காணப்பாபாண்டுவகை யாவும்போகக்கரிசாலைலேகியந்தான் சொல்லக்கேளு, நானப்பாபொற்கையான் சாறுபடியிரண்டுநலமானநெருஞ்சிரசம்படியிரண்டு, வாணப்பாசிறுகீரைச் சாறுபடியொன்றுவளமானபொடுதலைநீர் படிதானென்று தாணப்பா கீழ்க்காயினெல்லிச்சாறு தருவானசெருப்படிநீர் படிதானென்றே. (சுசு)

ஒன்றப்பாகியாழவகைசொல்லக்கேளு உரமானநாவல்கருங்காலியத்தி, ஒன்றப்பாதென்னம்பூ வகையொன்றுக்கு ஓர்பலந்தான் மஞ்சணன்ருயிடித்துப் போட்டுக். கண்டப்பா தூணிநீரொட்டொன்ருக்கிக்கருவானசாற்றிலுள்ளே கருத்தாய்வைத்துக், கிண்டப்பாசமமாக்கியிறக்கிக்கொண்டுகெணிதமுடன்கருவானசாற்றிற்சேரே,

சேர்க்கவின்னங்கியாழமொன்று சொல்லக்கேளுசெப்புகிறேன்மிளகொடுமிளகுணைமூல, மோர்க்கமாம் அவுரியொடுசிற்ருமுட்டிவளமானபேராமுட்டிவிலாமிச்சோடு.தீர்க்கமாய்ப்பலமூன்றுசிறுத்துக்கொண்டுதிறமாகவிடித்ததனைத்தூணிநீரில், சேர்க்கவேசோடசத்தோடொன்ருய்க்காச்சிசிதருதேமுன்கியாழந்தன்னிற் கூட்டே,

கூட்டுவாய்பனைவெல்லம் பலந்தானெட்டு கூரானகன்னல்வெல்லம்பலந்தானெட்டு, மாட்டுவாயாவின்பாற் படிதானுலுவளமாகக்கரைத்துவிட்டுச் சொல்லக்கேளுகாட்டுவாயடுப்பேற்றிப்பாகுசே

ரிற்கருவானசீரகமுமேலங்கிராம்பு, நீட்டுவாய்சாதிக்காய் சாதிப்பத்திரிநினைவாகவோமங்குரோ சானியாமே, (௬௯)

ஆமப்பாநாகப்பூகர்க்கடகச்சிங்கி அப்பனேகோஷ்டமோடக்கிராகாரம், தாமப்பாமதுரமொடுதாளிசப்பத்திரிதப்பாமற்றிரிகடுகுதிரிபலாதி, நாமப்பாவகையொன்றிற் மலந்தானென்று கலமாகச்சூரணித்துமுன்பாகிற்றூவி, வேமப்பாகிண்டையிலேயாவினெய்தான் விரைவிலரைப்படிவீதம்விட்டுக்கிண்டே, (௭௰)

கிண்டப்பா தேனதிலே படிதான்விட்டுக் கிருபையொடுதிரிலோகச்செந்தூரந்தாள், ரண்டப்பாபலமொன்றுகூடப்போட்டுத்தப்பாமன் *மண்டூரம்பலமொன்றப்பா,மண்டப்பாகிண்டியதைமெழுகாவாங்கி மகத்தானபுன்னைக்காயளவேவீதங்,கொண்டப்பாமண்டலந்தான்சென்றதானற் கூறுகெட்டவெண்பாண்டஞ்சிவக்கலாச்சே, (௭௧)

* மண்டூரம்-பழஞ்செங்கற்சிட்டம்,

ஆச்சப்பாபண்டுவகையாவும்போகுமப்பனே பித்தவெட்டைக்கையாலோய்ச்சல்,காய்ச்சப்பாகாந்த லுடனெறிவுபோகுங்கனமாவாந்தியொடுமயக்கந்தூக்கம், ஓச்சப்பாவீக்கமொடுநீர்ச்சுரப்புமுத்தமனேகிராணியெல்லா மொழிந்துபோகும், நீச்சப்பாவரோசியங்களெல்லாம்போகும் நிசமான * அசுவகெந்தித்தைலமுழ்கே(௭௨)

* அசுவகெந்தி-அமுக்கரு

கண்டாத்திரிலேகியம்.

மூழ்கவேகண்டாத்திரி லேகியஞ்சொல்வேன் மூர்க்கமாயிஞ்சிரசம்படிதானென்று, நீழ்கவேகண்டங்கத்திரியின்சாறு நினைவாகப்படியொன்றுகூடவிட்டுத், தாழ்கவேநெருஞ்சி நீர்ப்படிதானென்று தப்பாமன்மூள்ளங்கிப்படிநீர்விட்டு, வீழ்கவேபழச்சாறு படிதான்விட்டு வியனனவாவின்பாற்படியிரண்டே. (௭௩)

ரண்டானபனைவெல்லம்பலந்தானெட்டு நணுகியதையடுப்பேற்றிபாகுசேரிற், குன்றானதிரிகடுகுசீரகமுமேலங் குலவும்வாய்விளங்கங்கிராம்புதாளிசம், நன்றாகப்பலமொன்றுசூரணித்து நலமானபாகினிலேதூவித்தூவிச், சென்றானபசுநெய்படியரைதான்விட்டுத் திண்ணமொடுகாற்படிதான்றேனும்வாரே. (௭௪)

வார்த்தப்பாகிண்டியதை மெழுகுபோலே வளமானலேகியத்தைப்பதனம்பண்ணு, பார்த்தப்பாபாக்களவுவீதமாகப் பதறாமலிருநேரங்கொள்ளுங்காலங், காத்தப்பாமண்டலந்தான் கொண்டாயானாற்கலங்காதேவாதமொடுவாயுவெல்லாம்,போத்துறுநற்பித்தமொடுவாந்திசூலைப் புகழுடல்வலியிசுவும்பறந்துபோமே. (௭௫)

போமப்பாவரோசிங்க ளன்னதோஷம் பொறுக்காதகுன்மமெட்டும்பொருமல்விக்கல் சாமப்பாபித்தத்தினெரிவிதெல்லாம் சாடிவிடுங்கடுப்புவலிசாந்தமாகும், நாமப்பாபித்தத்தின் கபாலக்குத்தல் நடாதுமயக்கமெலாநடுங்கியோடும், தேமப்பாகுமரியிடைதைலமுழ்கில் திறமானபித்தநோய்த்தீரும்பாரே. (௭௬)

பஞ்சதீபாக்கினிலேகியம்.

பாரப்பாபஞ்சதீபாக்கினியென்னப் பகருகின்றலேகியந்தான் சொல்லக்கேளு,ஆரப்பாதிரிகடுகுமேலஞ்சீரம்அப்பனேவகையொ

ன் றுபலந்தானென்று, பேரப்பாவிளவறுப்பாய்ச்சூரணித்துப்பெரி தானவாவின்பாற்படியிரண்டு, சேரப்பாபனேவெல்லம் பலந்தானெ ட்டுஞ்சிறப்பாகக்கரைத்திதிலேபாகுசெய்யே. (எஎ)

செய்யப்பாசூரணத்தைத் தூவிக்கிண்டு திறமானதேனெய்தா னுரியுழக்கு, தையப்பாவிட்டதிலே கிண்டிக்கிண்டிக் கருவாகமெழு குபதமாகவாங்கி, மையப்பாபாக்களவுமிருநேரந்தான் மைந்தனே மண்டலந்தான்கொண்டாயானல், தையப்பாதிருகின்ற வியாதிகே ளு தருவானவாய்வோடுவாதமாமே. (எஅ)

ஆமப்பாவுஷ்ணங்கள் பித்தவாய்வு அப்பனேசரீரத்தி லுளைவு குத்து, போமப்பாவலிகடுப்புமெரிச்சல்பேதி பொருமலுடன்வாயு வெண்டகிராணிதீரும், வேமப்பாவஸ்திசுரமஸ்திவெட்டை விருந் தானவாந்தியெல்லாம் விழலாய்ப்போகுஞ், சாமப்பாவாக்கினிட ழைதலுள்கு சகலசுரம்விட்டோடுஞ்சாபுபாரே. (எகூ)

கண்டங்கத்திரிலேகியம்.

சார்வானலேகியந்தானென்றுகேளு சாற்றுகிறேன்கண்டங்கத் திரிதூக்கம்பாரு, ஆர்வாகவிடித்ததனைத்தூணிநீரில் அப்பனேயெ ட்டொன்றாய்க்காய்ச்சிவிட்டுச் சேர்வாகப்பனேவெல்லம் பலந்தான் பத்துச்சேர்த்ததிலேபாலபடிதான்பாகுசேரில்,தார்வாகத்திரிகடுகு திரிபலாதி தருவானவாய்விளங்க மோமமாமே. (அ0)

ஓமமோடுகூரோசானிலவங்கப்பட்டை உத்தமனேசீரகமுந்நூ க்குமூலம், நாமமோடத்திப்பிலியுங்கோஷ்டம் நலமானதாளிசமு மக்கிராகாரம்,வாமமொடுவகையொன் றுபலந்தானென் று வளமாக ச் சூரணித்துப்பாகிற்றூவி, சேமமோடாவினெய்ப்படிகால்விட்டுத் திறமானதேனதிலேபடிகால்வாரே. (அக)

வார்த்ததிலேகிண்டியது மெழுகுபோலே வளமானலேகியம் பாக்களவுவீதம், பார்த்ததிலேயிருநேரங்கொண்டாயானற் பறக்கு மடாகழல்வாதம்பாரிசூலே, தேற்றியேகிருமியொடு புழுக்களெல் லாந்தேகத்தைவிட்டோடுங்கர்பம்வாய்வு,சாற்றதிலேயுஷ்ணநோய் பித்தமெல்லாஞ் சாராதுசிந்தாதிலேகியங்கேளே. (அஉ)

சிந்தாதிலேகியம்.

கேளப்பாவாறுதிங்கள்சென்றகாடிகிருபையாய்ப்படிபத்தும்பு ளித்தமோரும், நாளப்பாபடிபத்துக்கூடவிட்டுநலமானபுளியிலேதூ க்கிடித்துப்போட்டுக், கோளப்பாதுருப்பிடித்த விரும்பெடைதான் போட்டுக்கொதிக்கவைத்துஎட்டொன்ருயிடித்துக்கொண்டு, வேள ப்பாகையானீர் படிதானிரண்டு விருதானவிஞ்சிரசம் படிதா னென்றே. (அங)

ஒன்றானபழச்சாறுபடிதானென்றுஉத்தமனேநெருஞ்சிரசம்ப டிதானென்று,சென்றானசிறுகீரைபடிதானென்று செருப்படிதான் படியொன்றுதென்னம்பூநீர், பண்டானபடியொன்று கீழாநெல்லி பதருமற்படியொன்றுகூடச்சேர்த்து, கண்டானவாவின்பால் படி தானுலு கருவானபனேவெல்லம்பலந்தான்பத்தே, (அச)

பத்தாகக்கரைத்துவிட்டுப் பாகுசேரில் பக்குவமாங்கடைச்சர க்குதிரிகடுகுவோமம், நத்தானதிரிபலைகோஷ்டமாஞ்சில் நலமான சீரகம்வால்மிளகுஏலம், கைத் ானகிராம்புதாளிசப்பத்திரி கருவா

னலவுங்கத்தோலானைத்திப்பிலி, ஒத்தாதபலமொன்றுதூக்கிக்கொண்டுஉருவாகஇளவறுப்பாய்ச் சூரணந்தான்செய்யே, (அரு)

செய்யப்பாமுன்பாகிற்றாவிக்கிண்டிச் செயமாகவாவினெய்படிதான்வாரு, கொய்யப்பாதேனதிலேபடிதான்வாரு குழம்பாகலேகியத்தைப்பதனம்பண்ணு, பையப்பாவிருகழஞ்சியிருநேரஙகொள்ளப்புறக்குமடாபாண்டுவகையெல்லாந்திரும் மையப்பாபித்தவெட்டைபித்தவாய்வு மயக்கமோடக்கினியாமந்தந்தானே, (அசு)

மந்தமொடுவெளுப்பானதேக மெல்லாம்வண்டுபோல்கறுக்குமடாமண்டலத்தில்,அந்தமா மகோதரம்பீலிகை யாம்வாழ்வுஅப்பனேசோகையொடுகிராணிமூலம், பொந்தமரமுடம் பெரிப்பீளைபபோடீளைபொருமலுடனுப்பிசங்களிறைச்சல்திரும்,பந்தமாம்பத்தியங்கள்நன்றாய்க்காத்துப் பக்குவமாமண்டலத்தில்சொல்லக்கேளே

மகாவில்வாதிலேகியம்.

சொல்லக்கேள்புலத்தியனேயின்னமொன்று சுருக்காகநோய்க்கெல்லாமகாவில்வாதி, வல்லக்கேள்வில்வத்தின் மூலமப்பாவளமாகப்பலம்நூறுவெட்டிவந்து, நல்லக்கேள்விலாமிச்சைவாகைபர்திரிநலமாகநன்னாரிபருவிளாவும், அல்லக்கேள்சிற்றாமல்லிபேராமல்லிஅழகானசிறுவிளாவேருமாமே. (அஅ)

ஆமப்பாசிறுவாகைமுன்னையோடுஅப்பனேமுசுமுசுக்கைகொடுவேலிதேற்றான், நாமப்பாவகையொன்று பலமூன்றாகும் நலமாகவிடித்தேயிருதூணிநீரில், வேமப்பாவெட்டெடொன்றாய் வடித்துக்கொண்டுவெருளாதே கொம்மட்டிப்பழச்சாறிஞ்சி, காம்பப்பாசாறுபடியொன்றுவிட்டுக் கலங்காதேசர்க்கரைசேர்நாலுமாமே. (அகூ)

ஆமப்பாவாவின்பால்படிதான்ரண்டு அப்பனேகண்டத்தெல்லாம்பாகுசேரில், போமப்பாதிரிகடுகுதிரிபலாதிபுகழான லவுங்கமோடேலங்கோஷ்டம்,நாமப்பாமதுரகெந்தஞ்சீரம்ரண்டு நலமானவிளங்கமொடுசகஸ்திரபேதி, வாமப்பாதளிசம்செண்பகப்பூஅக்கிராகாரம்வளமானமல்லிவிளாவரிசிதேக்கே. (கூ0)

தேக்கானமுந்திரிகைபேரீச்சுவில்வந் திறமானவாலுளுவையாஞ்சில்யிறுநாகம், பாங்கானநாகணமூம் பருத்திவித்தும்பகருவே * னிம்பவித்திலுப்பைப்பூவு, தூக்கானவகையொன்று பலமொன்றாகச்சூரணித்துப்பாகிலேதூவிக்கிண்டி, நீக்கானதேனதிலேபடியளாதான்விட்டு நினைவாகவாவினெய்ப்படியளாதான்வாரோ (கூக)

* நிம்பவித்து-வேப்பங்கொட்டை,

வார்த்தப்பாமெழுகுபோல்கிண்டிக்கிண்டிவள்வானலேகியத்தைப்பதனம்பண்ணு, கோத்தப்பாலேகியத்தைப்புன்னைக்காயளவுகொண்டுவர விருநேரந்திரும்நோய்கள், சாற்றப்பாசுவாசமுடன்ரோகியங்கள் தவறாதேவீக்க மொடுசத்தியெரிப்பாண்டு, காத்தப்பாவிஷபாண்டுவயிற்றெரிச்சல்கனமானவுப்பிசஙகள் கிராணிபோமே, ()

போமப்பாகைகாலெரிவுகாந்தல் புகலும்வெள்ளோக்காளமன்னதோஷம், நாமப்பாசூலையொடுசயந்தானெட்டுநலமானசுரங்களறுபத்துநாலும், தாமப்பாபித்தமென்றநாற்பத்துந்தான் தளமானவஸ்திசுரமருந்திடெல்லாம், ஆமப்பாவதிசாரமுள்ளில்ரோகல்அருளானலோதமவைத்துக்கொள்ளுக்கொள்ளே (கூரு)

கூழ்மாண்டலேகியம்,

கொள்ளவேகூழ்மாண்டலேகியந்தான் குணமானகூழ்ப்பாண்டிச்சாறுபடிநாலு, விள்ளவேதாழையிடவிழுதின்சாறு விருதானபடியொன்றுதென்னம்பூவொன்று, தள்ளவேபழச்சாறுபடிதானொன்றுதளமானவாவின்பால்படிதான்ரண்டு, பள்ளவேசர்க்கரைதான்பலமோபத்துபதருமற்கரைத்தனைப்பாகுசேரே. (௬௪)

சேருமேசீரகமுமல்லிகோஷ்டம் திறமானமிளகுமாசக்காயேலம், காருமேசாதிக்காய்சாதிப்பத்திரி கருவானமதுரமொடுதாளிசந்தான், வாருமேஒருவகைக்குப்பலமொன்றாகவகையாகச் சூரணித்துப்பாகிற்றூவி, நேருமேதேனெய்படியரைதான்விட்டுநினைவாகக்கூழ்போலேகிண்டிவாங்கே. (௬௫)

வாங்கியேபுன்னைக்காயளவுவீதம் வளமானலேகியத்தைக்கொண்டாயானல், நீங்குமோகாமாலைசோகையெல்லாம் நீங்காதவஸ்திசுரமஸ்திவெட்டை, தாங்கியதோர்பிரமியங்கள் வெள்ளைவீழ்தல்தளமாகும்தேகபுஷ்டிவிந்துவூறும். பாங்கியேயூஷ்ணநோய் நீர்ச்சுருக்கும் பறக்கும்புளிபுகையிலைநீதள்ளிக்கொள்ளே. (௬௬)

சரபங்கவில்வாதிலேகியம்.

கொள்ளவேயின்னமொன்று சொல்லக்கேளுகுணமானசபரங்கவில்வாதிலேகியம்,விள்ளவேவில்வவேர்முட்காவேர்விருதானசங்கவேர்வகைக்குத்தூக்கு, தெள்ளவேசிற்றாமல்லி சிற்றாமுட்டிதிறமானபேர்மல்லி*கூந்தல்முள்ளி, நள்ளவே சாரணைவேர் கண்டங்காலிநவமான விலாமிங்தில்தானே. (௬௭)

* கூந்தல்-முதியார்கூந்தல்

தானென்றகொடிவேலி பொன்முசுட்டை தளமான; நன்னாரிசிறுதேக்கப்பா, வாவென்றமூலிவகைபதின்மூன்றுந்தான் வளமானபலமஞ்சு இடித்துநைய, வேனென்றவாற்றுநீர் தூணிவிட்டு விளங்கவேயெட்டொன்றாயநிறுத்திக்கொண்டு, காவென்றகன்னல்வெல்லாஞ்சேர்தனுலுகருவானவாவின்பால்படியிரண்டுசேரே (௬௮)

சேர்த்தப்பாகரைத்ததிலேபாகுசெய்து திறமானதிரிகடுகு திரிபலாதி, வார்த்ததிலே கிராமம்போல் மிருசிரகந்தாள் வளமானகோஷ்டந்தாளீசப்பத்திரி, தாத்ததிலேயோமம் ரண்டரைத்தைரண்டு தளமான கொத்தமல்லி லவங்கப்பட்டை, ஆர்த்திலேயக்கிராசுராமாத்திப்பிலி அப்பனேவால்மிளகு சாதிக்காயாமே, (௬௯)

ஆமப்பாவகையென்று பலமொன்றாக அப்பனேயிளவறுப்பாய் சூரணித்துச், சேமப்பாபாகிலேதூவிக்கிறண்டித்திறமானதேன்படிநெய்யரைதான்விட்டு, நாமப்பாகுழம்புபோல்வாங்கிவைத்துநலமாகங்கழஞ்சிவிறையிருநேரங்கொள்ள, தாமப்பாபித்தவெட்டைபாண்டுஆறுந் தவறுண்டுபோகுமடாசயமெட்டுந்தானே. (௭௰)

தானென்றகுன்மமெட்டுங் கிராணியாறுந் தடமானவாய்கசபபுவெள்ளோக்காளங், தேனென்றவாயூற லக்கினிதங் திறமானசூலையொடுகைகான்மாந்தல், பானென்றதுபித்தமதுநாற்பதுந்தான்பறக்குமட்டாமண்டலத்தில்பரிந்துகொள்ளு, வேனென்றபத்தியந்தான்புளிகசப்பு விளங்கியதோர்புகையோடுபெண்ணுந்தள்ளே- (௭௰௧)

தள்ளப்பாதிரிலோகம்வைத்துக்கொள்ளு தளமான வாலரசச்
செந்தூரந்தான், கொள்ளப்பாலோகசெந்தூரந்தானுங் குறையாம
ற்றணவெடைதான்வைத்துக்கொள்ளு,தள்ளப்பாபித்தமென்ற தெ
ல்லாம்போகுந் தருவான்சேத்துமங்கள்தொண்ணூற்றாறும்,விள்ள
ப்பாகடல்புகருங்கண்டுகொள்ளு விருதாக வினனமொரு சேதி
கேளே. (௱௨)

கண்டங்கத்திரிலேகியம்,

கேளப்பாமகாகண்டங் கத்திரியான கொடிதானலேகியந்தான்
சொல்லகேளு, நாளப்பாவாற்றுமுள்ளிபலந்தானாறுநலமானகரி
முள்ளியதற்குப்பாதி. தாளப்பாசிற்றுமுட்டிபேராமுட்டிதளமான
மிளகருணைகொடிவேலிகளாவும், ஆளப்பாவாதண்டைச்சிறுகாஞ்
சோரி அப்பனேவிலாமிச்சைமுட்காவேளையாமே. (௱௩)

ஆமப்பாகோரையுடனுத்தாமணியும் அப்பனேகழற்கொடியு
மாவிலிங்கம், தாமப்பாவகைகயொன்றுபலமொன்றாகத் தவறுமலி
டித்தேயிருதூணிநீரில், வேமப்பாவொட்டொன்று யிருத்துவாங்கி
விருதானகொம்மட்டிப் பழநற்சாறு, தாமப்பாபடியளையுங் கூடவி
ட்டுத்தளமாவாவின்பால்படித்தான்ரண்டே. (௱௪)

ரெண்டானசர்க்கரைதான்பலமூவைந்துநினைவாகக்கரைத்ததி
லோபாகுசேரில், கண்டானகடைச்சரக்கு சொல்லக்கேளுகருவா
னதிரிகடுகுதிரிலாதி, நன்றானசிங்கியிருசீரகந்தான் நலமானவரத்
தையக்கிரலவுங்கப்பட்டடை, பின்றுதலவங்கஞ்சாதிக்காய்பத்திரி
பேரரத்தைலவங்கப் பத்திரியுங்கூட்டே (௱௫)

கூட்டுவாய்வகைகயொன்று பலமொன்றாகக்கூசாமலிளவறு
ப்பாய்க்கூரணித்து நாட்டுவாயபாகிலேதூவிக்கிண்டி நலமாகத்தே
ன்படிநெய்யைதானவிட்டுகாச்டுவாய்மெழுகுபோல்கிண்டிக்கிண்டி
க்கசகாமல்பீங்கானில்வழித்துவைத்துசீட்டுவாய்லேகியந்தான்புன்
னைக்காய்வீதம திறமாகமண்டலத்தில் தீருநோய்கேள் (௰௬)

கேளுதான்சயமெட்டும் குன்மமெட்டும் செடியானவாதமெ
ன்றதெண்பதும்போம், நாளுதானிரைப்பீளை விழிநீர்கோவை நா
டாதுஇசிவுமுதல்கழல்வாதங்கள், காளுதான்கொப்பவெட்டைகெ
ர்ப்பசூலை தவறுண்டுபோகுமது புழுக்களெல்லாம், ஆளுதான்தா
ளகமும்லோகங்கூட்டி அடைவாகக்கொண்டுவரத்தீரும்பாரே(௱௭

கபாடலேகியம்

பாருமேகபாடலே கியத்தைச்சொல்வேன் பண்பான நாவ
லொடுவரசுவத்தி, சேருமேகருங்காலியொதியம்பட்டைதிறமாகப்
பலம்பத்துநிறுத்துக்கொண்டு. சாருமேயிடித்துவையத்தூணிநீரில்
தளமாகவடுப்பேற்றி யொட்டொன்றாக்கி, வாருமேபனைவெல்லம்
பலந்தான்பத்து வளமாகக்கரைத்ததனிற்பாகுசெய்யே (௱௮)

பாகிலேதூவுதற்கு மருந்துகேளு பதறுமல்கஞ்சாவைச்சுத்தி
செய்து, பாகிலேபலமொன்றுதூக்கிக்கொண்டுபாங்கானமிளகுசுக்
குசீரகமுங்கூட, பாகிலேயோமமொடுகுரோணியோமம்பருவமாய்
ச்சிங்கிகாட்டாத்திப்பூவும், பாகிலேவால்மிளகுசிறுநாகப்பூபக்குவ
மாமல்லியோடேலமாகும், (௱௯)

ஆகுமேகிராம்புடனே சாதிப்பத்திரி அடைவான சாதிக்காய்
விடையந்திப்பிலி நாடிமேவகைகயொன் றுபலமொன்றாக நலமாகவி

ளவறுப்பாய்ச்சூரணித்து-வேகமேபாகிலேதூவியேதான்வெகுசுருக்காய்த்தேனெய்யும்விட்டுக்கிண்டி, தாகுமேபீங்கானில்பதனம் பண்ணித்தப்பாமல்மண்டலந்தான் பாக்களவுகொள்ளே. (௱௰)

அளவாகக்கொண்டுவரத் தீரும்நோய்கள் அதிகமுள்ளசூசிகாகிராணிவாய்வு, பளுவானகடுப்புமூதற்பாண்டுகிராணிபாங்கானபேதியோடுஷ்ணவாய்வு, களவாகமூலத்தின் கிராணிவாய்வுகண்காணுதோடுமதுமற்றவாய்வு, வளமாகிக்கிராணியெல்லாம்தீரும்தீரும்மார்க்கமுடனின்னமொரு வரிசைபாரே, (௱௰௧)

திப்பிலிரசாயனம்.

பாருமேதிப்பிலி ரசாயனஞ்சொல்வேன்பகருகின்ற திப்பிலியும்பலந்தான்பத்து, சேருமேமிளகுமஞ்சு சுக்குமஞ்சுதிறமானவிருசிரமோமம்ரண்டு,ஆருமேயரத்தைரண்டுதாளிசப்பத்திரி அடைவானலவங்கப்பத்திரியும்பட்டை, காருமேதிரிபலைலவங்கமேலங் கமானகொடிவேலிபல மொன்று தூக்கே. (௱௰௨)

தூக்கியேயிளவறுப்பாய் சூரணித்துச் சுகமானசர்க்கரைதான் சமனாய்க்கூட்டித், தாக்கியேதேன்விட்டுப்பிசைந்துகொண்டுதப்பாமல்வெறுகடிதான் கொள்ளும்போது, தேக்கியேயிளைப்போடேயீளைகாசம்திறமான சேத்துமநோய் தொண்ணூற்றாறும், நீக்கியேயுதரத்தில்வாயுவெல்லாம் நீக்கிவிடுமண்டலத்தில்நினைவாய்ப்பாரோ,

மஸ்துமிரசாயனம்.

பார்த்திடுவாய்புலத்தியனே மேகவகைதீரப் பண்பானமஸ்துமிரசாயனஞ்சொல்வேன், தேர்த்திடுவாய்சீனமூத லமுக்சுருவேர்திறமானவகையொன்று பலம்பத்தாகும், சாற்றிடுவாய்நிலப்பனைவேர்பலந்தானைந்துதளமானதண்ணிமிட்டான்பலந்தான்ரண்டுஆற்றிடுவாய்நன்னாரிசங்குமூலம் அன்பானதிரிகடுகுதிரிபலையுமாமே.)

ஆமப்பாலவங்கத்தோல் லவங்கப்பத்திரி அப்பனேசிறுநாகம் வாய்விளங்கம், மோமப்பாமல்லியிருசீரமோமம்புகழானகுரோசாணிஅரத்தைகெந்தம், நாமப்பா சிறுதேக்கு கண்டங்காலி நலமானகொடிவேலிவிலாமிச்சை மூலம், தாமப்பா தக்கோலம்வால்மிளகினோடுதளமானமுந்திரிகைபேரிச்சுங்கூட்டே. (௱௰௫)

கூட்டப்பாவெட்பாலைதாமரைக்கிழங்கு குலமானசாதிக்காய்கிராம்புபத்திரி, நாட்டப்பாகருவேம்பி னிலைவகைக்கு நலமாகப்பலமொன்றுநிறுத்துக்கொண்டு, காட்டப்பா விளவறுப்பாய்ச் சூரணித்துக்கருவானகுங்குமப்பூ கோரோசனைகர்ப்பூரம், வாட்டப்பாகழஞ்சுநிறைகூடச்சேர்த்துவளமானசர்க்கரைசேர்நாலுவாங்கே, ()

வாங்கியேயாவின்பால் படித ஞாலுவளமானசர்க்கரையைக்கரைத்துக்கொண்டு, பாங்கியேபாகுபதமாகும்போது பதமூதேசூரணத்தைக்காய்ச்சிக்கொண்டு, தேங்கியேதேன்படிதா னென்றுவாருதிறமானவாவினெய்யரைதானப்பா, வாங்கியேமெழுகுபோல்கிண்டிக்கிண்டிவளமானபீங்கானில்பதனம்பண்ணே, (௱௰௭)

பண்ணப்பாவிருநேரம்பாக்களவு கொள்ளப்பரிவுடனேதீருகின்றவியாதிகேளு, புண்ணப்பாகிரந்தியொடு சூலைதீரும்புதுமையாங்கண்டத்தில்மாலைதீரும் நண்ணப்பாவாய்வோடு வாதமெல்லாம்

நாடாதுபிரமியங்கள்லிங்கப்புற்று,தண்ணப்பாசேத்துமநோய்தொ
ண்ணூற்றாறுந்தவறுண்டுபோகுமடா பத்தியங்காரே. (௱௰௮)

சவுபாக்கியசுண்டி,

காரப்பாவுலகத்தோர் நோய்களெல்லாங் கலங்குமடா சவுபா
க்கியசுண்டியென்றால், நேரப்பாசுக்கதுதான் பலந்தானெட்டுநினை
வாகமேற்றோலைச்சீவிப்போட்டு, சாரப்பாமொச்சைவிரைப்பிரமா
ணந்தான் தளமாகவேநறுக்கிப்புதுசட்டிக்குட்,சேரப்பாசெம்முள்
ளிச்செந்திராயும் திறமானமுருக்கிலையுங்கரிசாலையாமே, (௱௰௯)

ஆமப்பாசிறுசெருப்பு காற்றிவாட்டி அப்பனேசாறுவகைபடி
கால்வீதம், நாமப்பாபுதுசட்டிச்சுக்கில்விட்டு நலமாகவெவ்வேறே
ரவியுலர்த்தித்,தாமப்பாவிடித்துநன்றாய்ச் சூரணித்துதளமாகவடி
கொண்டேயப்பால்வைத்து, போமப்பாதக்கோலம்வாலுளுவைவி
த்துபுகழானகூகைநீறு*கரியபோளங்கூட்டே, (௱௨௰)

* கரியல்பாளம்-கறுப்புக்குங்கிலியம்,

கூட்டப்பாவாய்விளங்கந்தான்றிக்காய் நெல்லி கூறானதிப்பிலி
யுந்திப்பிலிமூலம்,நாட்டப்பாவகையொன்றுபடலந்தான்வாங்கிநல
மாகவிளவறுப்பாய்ச்சூரணித்துக் கூட்டப்பாவமுக்கிரா பொன்மு
சுக்கை குருவானகண்டங் கத்திரிநன்னாரி, நீட்டப்பா நிலப்பனையும்
வகையொன்றுக்கு நினைவாகப்பலமிரண்டு நிறுத்துக்கொள்ளே. ()

கொள்ளப்பாசுத்திசெய்திடித்துத்தூளாய்க்குணமாகவடி கொ
ண்டுவைத்துக்கொண்டு,விள்ளப்பாமூவகைத்தூளொன்றாய்க்கூட்டி
விளங்கவேசர்க்கரையைச்சமனாய்வாங்கி, நள்ளப்பாவாவின்பால்ப
டியிரண்டில்நலமாகச்சர்க்கரையைகரைத்துக்கொண்டு, அள்ளப்பா
வடுப்பேற்றிப்பாகதனால்அப்பனேமூன்றூளைக்கொட்டிக்கிண்டே.()

கிண்டப்பாதூளாகநன்றாய்க்கிண்டிக் கிருபையாய்ப்புதுக்கல
சந்தனிலடைத்து, நண்டப்பாவெருகடிதா னிருநேரங்கொள்ளநல
மாகத்தீருநோய்கவிலக்கேளு, கண்டப்பாகிராணிவகையெல்லாந்தீ
ரும்கருவானபிரமியங்கள்சூசிகாவாய்வு, கண்டப்பர்வாதமொடுபித்
தமெல்லாங் கண்காணாதோடுமடா கண்டுகொள்ளே. (௱௨௩)

கொள்ளவேயந்திரமாம் வாய்வுதீரும் கூறான மேகவகைவாத
சூலை, கொள்ளவேயக்கினியா மந்தந்தீரும் கூர்ப்பான வாயூறல்வா
ய்கசப்பு, கொள்ளவேவயிற்றிலுள்ளவியாதியெல்லாம்குடிபோகும்
சவுபாக்கியசுண்டிகண்டால், கொள்ளவே புளிகசப்பும் பத்தியந்தா
ன்கூறானபுகையோடு பெண்ணுந் தள்ளே. (௱௨௪)

அக்கினிசூரணம்.

தள்ளப்பா வக்கினியாஞ் சூரணத்தைச்சொல்வேன் தளமான
கொடிவேலிதிரிகடுகு வோமம், விள்ளப்பாசிறுதேக்கு யானைதிப்பி
லியுங்கோஷ்டம் விளங்கியதோரிரண்டுப்புவகையொன்று பலந்தா
ன்,நள்ளப்பாகாயங்கால் வசம்புகால்தான் நலமானகடுகுபொடிய
ாப்பல்தான் கூட்டித், தெள்ளப்பாவிளவறுப்பாய்ச்சூரணித்துத்
திறமானசீனிசமன் கூட்டிக்கொள்ளே. (௱௨௫)

திரிராக்ஷதசூரணம்.

கொள்ளவேவெருகடித்தூள் வெந்நீரிற்கொள்ளக்கூரானகிரா
ணிவகையுதிரவாய்வு, பள்ளவே முகவாய்வாதமெல்லாம்பறக்கும
துதிரிராக்ஷதசூரணங்கேள், தள்ளவேமுந்திரிகைப்பேரீச்சம்பழங்

தான் தளவானவதிமதுரம் முட்காவேளை, நள்ளவேநெற்பொரியு*
முத்தகாசு நலமானவேலமொடு கிராம்புகூட்டே. (௩௨௬)

* முத்தகாசு-கோரைக்கிழங்கு.

கூட்டுவாய்கொத்தமல்லி மிளகுவேலி கூருணதிப்பிலியுங் கூ
கைநீரும்; நாட்டுவாய்சாதிக்காய்சாதிப்பத்திரிகூடநலமானவால்மி
ள்குலவங்கப்பத்திரி, ஆட்டுவாய்வகையொன்றுபலமொன்ருகஅப்
பனேசூர்ணித்துச்சர்க்கரையைக்கூட்டி,வேட்டுவாய்வெருகடிதான்
தேனிற்கொள்ள வெகுசுருக்காய்ச்சொல்லுகிறேன் விளம்பக்கே
ளே. (௩௨௭)

கேளப்பாவந்திரவாய்வு பாண்டுரோகம் கெடியானதாபசுரம
யக்கம்தூக்கம், வாளப்பாபித்தவகைகாற்பதுந்தான்வளமானவரோ
சிகங்களன்னத்தோஷம்,நாளப்பாவுஷ்ணநோய் சேத்துமங்கள்நல
மானவக்கினியாழந்தவாய்வு தாளப்பாகையெரிவு காந்தலெல்லாம்
தவறுண்டுபோகுமடாநெய்யிற்கொள்ளே. (௩௨௮)

அசுவகெந்தி சூரணம்.

கொள்ளவே யசுவகெந்திசூரணங்கேள்குணமானலவங்கமொ
ன்றுநகப்பூண்டு, தள்ளவேயேலம்நால் மிளகோரெட்டுதளமானதி
ப்பிலியீரெட்டுசுக்கு, விள்ளவே முப்பத்திரண்டுங்கூட்டி விசையா
னவசுவகெந்தியறுபத்துநாலு, நள்ளவேசுத்திசெய்துலர்த்திக்கொ
ண்டுநலமாகவிளவறுப்பாய்ச்சூரணந்தான்செய்யே (௩௨௯)

செய்யப்பாசமனய்ச்சர்க்கரையைக்கூட்டித் திறமானவாவின்
பால்நெய்யிற்கொள்ள, கையப்பாவெருகடிதான்கொள்ளும்போது
கனமானமேகவகையெல்லாந்தீரும், நெய்யப்பாவஸ்திசுரம் வெட்
டைபோகும் மேலான சுவாசமோடீளைபோகும், தையப்பா மேக
த்தின்பாண்டுபோகும் தளமானவூரலெல்லாஞ்சாராதென்றே. ()

கண்டாத்திரிசூரணம்.

சாரவேகண்டாத்திரி சூரணஞ்செய்வேன் தகுவானவிஞ்சிய
துபலந்தான்புத்து, சேரவேமேற்றோலைப்போக்கிப் போட்டுச்சிறு
கவேநறுக்கியதைப்பழச்சாறாட்டித், தாரவேநாளொன்று ஊறப்
போட்டுத்தவருமல்மறுநாள்தான்ரவியுலர்த்தி,ஆரவேசிரகமும்பல
ந்தானென்று அப்பனேமுன்போலேபழச்சாறாட்டே. (௩௩௧)

ஊட்டியே மறுநாள்தான்காயப்போட்டுஉத்தமனேமிளகொடு
தாளீசப்பத்திரி, நாட்டியேதிப்பிலிபின் மூலங்கிராம்புநலமானகோ
ஷ்டமொடுவாய்விளங்கம், வாட்டியேயிளவறுப்பாய்ச் சூர்ணித்து
வளமானசர்க்கரைதான் சமனய்க்கூட்டி, நீட்டியே வெருகடிதான்
கொண்டாயானல் நீங்கிவிடும்பித்தமுதல் வாய்வுபோமே. (௩௩௨)

போமப்பாவரோசிங்க ளன்னத்தோஷம் புகழானபித்தவெட்
டைபொருமல்விம்மல், நாமப்பாவாயுவொடுவாதமெல்லாம்நாடா
துசூலையெல்லாநளினமாகும், சோமப்பாவயிற்றிலுள்ளவியாதியெ
ல்லாம்திறமாகத்திருமடாபத்தியங்கூர், நாமப்பாவுலகோர்க்கா யிர
ங்கிச்சொன்னேம் நலமானசூரணத்தைநாட்டிப்பாரோ. (௩௩௩)

தாளிசப்பத்திரிச்சூரணம்.

நாட்டியேசொல்லுகிறேன் புலத்தியனேயையா நலமானதா
ளிசப்பத்திரிச்சூரணந்தான்,காட்டியேதாளிசப்பத்திரிபலந்தான்ய

த்துகருவானதிரிகடுகு திரிபலாதி, நீட்டியேகோஷ்டமோ டக்கிரா காரம் நினைவாகவத்திதிப்பிலிசிரகம், கூட்டியேகொத்தமல்லிவாய் விளங்கங் கூருனகிராமம்புயேலஞ் சாதிக்காயே. (௱௩௪)

காயோடுபத்திரியுமாஞ்சில்சோம்பு கருவானவால்மிள்குலவங் கப்பட்டை,தாயோடுவிவைவயெல்லாம் பலமொன்ருகத்தவருமல்சூ ரணித்துவடியேகொண்டு, சேயோடுசர்க்கரைதான்சமனுய்க்கூட்டி த்திறமாகப்பிசைந்துகொண்டு வெருகடிதானேரம், வாயோடுமண் டலந்தான்கொண்டாயானுல்வாங்குமடாக்ஷயகாசமீளைபோமே ()

போமடாவஸ்திசுர மஸ்திவெட்டை பொறுக்காதநீர்த்தாகம்ப ண்ணுநெஞ்சில்,நாமடாபித்தவெட்டைபித்தப்பாண்டுநாடாதுகிரா ணிவகையெல்லாந்தீரும், தாமடாவரோசிகங்களன்னத்தோஷம் த ளராதவிம்மலொடு விக்கல்கக்கல், சாமடாகைகாலிலெரிவுகாந்தல் சாந்தமாம்புளியோடு புகையுந்தள்ளே. (௱௩௬)

பஞ்சதீபாக்கினிச்சூரணம்.

தள்ளவேபஞ்சதீ பாக்கினியென்னுந் தளமானசூரணத்தைச் சொல்லக்கேளு, விள்ளவேதிரிகடுகுகோடேலஞ்சீரகம் விதமாகவ கையொன்றுபலமொன்ருக,நள்ளவேயிளவறுப்பாய்ச்சூரணித்து ந லமாகவடிகொண்டு சர்க்கரைதான்சேர்த்துத்,தள்ளவே தேனெய்யி ல்வெருகடிதான்கொள்ளத் தரமாகத்தீரும்நோய்செப்பக்கேளே.()

செப்புகிறேனுஷ்ணநோய்சூலைவாய்வு சேர்ந்தபித்தவாயுவெ டுசிலேத்மரோகம்,செப்புகிறேன்பொருமலொடுசெரியாமந்தந்தள மானமயக்கமொடு இறுகிறுப்பு, வெப்புகிறேனஸ்திசுர மஸ்திவெட் டை வேருனமூலத்தின்வாய்வுதீரும், நப்புகிறேன்புளிகசப்பு புகை யுந்தள்ளுநலமானகாந்தம்வைத்து நலமாய்க்கொள்ளே. (௱௩௮)

நிலவாகைச்சூரணம்.

நலமாகச்சூரணமொன்று சொல்லக்கேளு நன்றுனநிலவாகை சுக்குங்கூட்டிப்,பிலமாகமிளகுவாய் விளங்கமோமம்பேராகவகைக் குவொருபலமேதூக்கிச், சிலமாகரவிமுகத்திலுலரப்போட்டுச் சித ருமலிடித்துச்சூரணமேசெய்து, தவமாகச்சர்க்கரைதான்சமனுய்க் கூட்டித்தவருமலிருநேரங்கொண்டாற்கேளே. (௱௩௯)

;கேளப்பாவாயுவென்ற தெல்லாம்போகுங்கெடியானபித்தமெ ல்லாங்கீழ்நோக்கிப்போகும், வாளப்பாஉஷ்ணநோயெல்லாந்தீரும் வளமானபொருமலொடு விம்மல்தீரும், நாளப்பாசேத்துமநோயெ ல்லாந்தீரும், நலமானவிக்கலொடுவாந்திதீரும்,தாளப்பாவுடம்பெ ரிவுசுவாசகாசம்தவறுண்டுபோகுமடாசாற்றக்கேளே (௱௪௰)

சாற்றுகிறேனீரருகல் மலபந்தங்கள் தளராதவயிறுவிம்மலிரு மல்தீரும், தேற்றுகிறேன் குன்மமெட்டுமகோதரங்கள் தெளிவான வாயுவெல்லாந்தீரும்தீரும்,ஆற்றுகிறேன்கெர்ப்பவலிகெர்ப்பரோக ம் ஆச்சரியம்புழுக்களெல்லாமகன்றுபோகும், காற்றுகிறேன்வெந் நீரிற்கொண்டாயானுல் கலங்காதேவயிற்றிலுள்ள வியாதிபோமே.

வல்லாரைச்சூரணம்.

போமப்பாசூரணமொன்று சொல்லக்கேளு புதுமையாம்வல் லாரைப்பாலிற்போட்டு, நாமப்பாவவித்துலத்திக் காயப்போட்டு நலமாகச்சூரணித்துப்பலம்பத்தானுல், தாமப்பாகிராம்பேலஞ் சா

திக்காயும்தளமானபத்திரியுமாசக்காயும், தேமப்பாதாளிசப்பத்திரி திரிபலாதிதிறமாகவிளவறுப்பாய்ச்சூரணந்தான்செய்யே (௱௪௨)

செய்யப்பாவகையொன்று பலந்தானென்று திறமாகவிரண்டு மொன்றாய்ச்சேர்த்துக்கொண்டு, பையப்பாசர்க்கரைதான்சமமாய்க்கூட்டித்தவறாமல்வொருகடிதானெய்யிற்கொள்ள, தையப்பாமேகமெல்லாம் தவறுண்டேபோம் சரீரத்தில்சாந்தி யெல்லாம் சாந்தமாகும், கையப்பாபிரமியங்கள் கிரந்தியெல்லாம் கனமானவுஷ்ண நோய்காணாதன்றே. (௱௪௩)

காணாதுநீராருகல்நீரெரிப்பு கண்ணெரிவுகண்புகைச்சல்காணாதோடும், தோணாதேயுடம்பெரிவுமூலச்சூடும் சுறுக்கானநீர்ச்சூடுங் குளிர்ந்துபோகும்,காணாதுமதுமேகந்தந்திமேகம்நாடாதுக்ஷயரோகமினமாகும், கோணாதுதேகமெல்லாங் குளிர்ச்சிகாணும்கொண்டுவாவப்பிரோகம்வைத்துக்கொள்ளே. (௱௪௪)

சஞ்சீவிச் சூரணம்.

கொள்ளவேசஞ்சீவிச்சூரணத்தைச்சொல்வேன் குணமானசிந்திலடித்தண்டுவாங்கி, விள்ளவேமேற்றோலைவாங்கிப்போட்டு வெருளாதேநறுக்கியதையுலரப்போட்டுக், கள்ளவேயிடித்துநன்றாய்ச்சூரணித்துக்கருவாகவடிகொண்டு படித்தூள்வாங்கி, நள்ளவேமூந்நாற்றில்சுத்திசெய்து நலமானபொடிபடிக்கு ஆவின்பாற்படியே()

படியாகவளாப்படிதான் சீனிபோட்டுப்பாங்காகரவியுலர்த்திக் காய்ந்தபின்பு,அடியாகவுரலிலிட்டிடித்துக்கொண்டு அப்பனேசாதிக்காய்சாபத்திரி, கடிபாகவால்மிளகேலங்கிராம்புகசகசாதாளிசமுமாசக்காயும், வடிவாகவிளவறுப்பாய்ச்சூரணித்து வளமாகவகைக்கொருபலந்தான்கூட்டே. (௱௪௬)

கூட்டியேயிரண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு குறையாமலாறுபலஞ்சீனிசேர்த்து, நாட்டியேவெருகடிதானெய்யிற்கொள் ளநலமாகத்தீருநோய் நவிலக்கேளு. தாட்டிகமாமேகநீரிருபதுவும் போகும் தளமானபிரமியங்கள் மேகமெல்லாம், வாட்டியேவற்றியதோர்தேகமெல்லாம்வளமாகுமஸ்திசுரம்வெட்டைபோமே(௱௪௭

போமப்பாமூலத்தின்சூடுபோகும் பொல்லாதபித்தவகையெல்லாம்போகும், நாமப்பாகண்ணெரிவுகைகால்காந்தல் நாடாதுதேகமெல்லாங்குளிர்ச்சியாகும், தாமப்பாவூறலெல்லாம் தவறுண்டேபோம் தளமானகபாலத்தின் ரணங்கள்தீரும், வேமப்பாவாலரசச்செந்தூரந்தான் வெகுசுறுக்காய்ப் பணவெடை யப்பிரோகங் கொள்ளே (௱௪௮)

ஏலாதிசூரணம்

கொள்ளவேயேலாதிச்சூரணங்கேள்குணமான லவங்கமொன்றுமிளகிரண்டு. விள்ளவேநாகம்கால்தாளீசமெட்டுவிதமானகூகைநீறுபதினாறும், நள்ளவேசுக்கதுதான் முப்பத்திரண்டு நலமானவேலமதுவறுபத்துநாலு,கள்ளவேசர்க்கரைதான்சமனாய்க்கூட்டிக்கலந்துபுதுக்கலசமதிற்பதனம்பண்ணே (௱௪௯)

பண்ணவேவெருகடிதா ளிருநேரங்கொள்ளப் பறக்குமடாபித்தமொடுவாதம்வாய்வு, தண்ணவேகிரந்திரணமரிகிரந்திதளமானமேலூறல்சொரிசிரங்குநண்ணவேசிலவிஷங்கணடாதோடும்நலமா

னகுஷ்டமொடு குறைநோய்தீரும் பெண்ணவேபெரும்பாடு வெ
லும்புருக்கிப்பின்பாராதோடுமின்ன மொன்றுகேளே. (௫௰)

அசுவகெந்தி-லராக்ஷதத்தைலம்

ஒன்றானவுலகத்தோர்நோய்கட்கெல்லாம் உரைக்கிறேன்தைல
மொன்றுறுதியாக,நன்றானவசுவகெந்திபலராக்ஷச நாமமதுசொல்
லுகிறேனவிலகக்கேளு, சென்றானவசுவகெந்திபலமூவைந்துசிற்று
முட்டிபதினைந்து வெள்ளெருக்குநாலு, கின்றானநன்னாரிசிந்தில்வி
லாமிச்சுகோரையுடனெய்ச்சட்டி புவரியெண்ணே. (௫௧)

எண்ணவேகாரத்தை துளசிவெட்டி இதமானமூலத்தைபலந்
தானாலு, நண்ணவேயகில்நாலுதேவதார நாலு நலமானகீழ்நாடன்
பலந்தானெட்டுதண்ணவேகொம்பரக்குபலந்தானெட்டுதள்ளிவிட்
டுவகையெல்லாம் பதினைந்தாகும் ஒண்ணவேயிடித்துநன்றாயிருதூ
ணிநீரில்ஒருவிறகாய்த்தீயிட்டுச் சோடசத்தொன்றுக்கே. (௫௨)

ஆக்குவாயெள்ளெண்ணெய்சேர்தானைந்து அதின்பாதிதயிர்த
ண்ணீர்பால்சேரைந்து, தூக்குவாய்கலக்கவகைமருந்துகேளு துடி
யானதிரிகடுகுதிரிபலாதி,மாக்குவாய்கஸ்தூரிமதுரங்கோஷ்டம்மா
ஞ்சிமூச்சிரகமும் பூஞ்சாந்துகெந்தம் பாக்குவாய்மஞ்சள்ரோகணி
செவ்வள்ளி பச்சிலைபூலாவிலங்கிளியூறல்கூட்டே (௫௩)

கூட்டுவாய்சதகுப்பி லவங்கப்பட்டை கூறேலம்வகைக்கரைப்
பலமதாக, ஆட்டுவாயாவின்பால் விட்டுநன்றாய் அப்பனேகியாழ
மெண்ணெய்தனிற்கரைத்து, காட்டுவாயடுப்பேற்றிக் கொதிக்கும்
போதுநலமாகமுன்னரக்குக்கியாழம்விட்டு, மூட்டுவாயடுப்பேற்றி
மூதிராமற்றுன் முன்னவற்குப்பூசித்துவடித்திடாயே. (௫௪)

வடித்திட்டதைலமது முழுகும்போது வாகாகத்தீருகிறவியா
திகேளு, பிடித்திட்டமேகத்தின்சூலைபதினெட்டும் பேரானவாதத்
தின்சூலைதானும், மடித்திட்டவாதசுரம் பித்தசுரவாய்வுமயக்கமொ
டுசிலேத்மசுரமாண்டுபோகும், அடித்திட்டுச்சண்ணுமடாபித்தவெ
ட்டையெல்லாம் அணுகாதேயக்கினியா மந்தந்தானே (௫௫)

மந்தமொடுபாண்டுவகையெல்லாம்போகும்மைந்தனே கண்பு
கைச்சல்கைகால்காந்தல், பெந்தமாமுடம்பெரிவுசுவாசகாசம்பின்
பாராதோடுமடா மேகமெல்லாம்,பந்தமாம்பத்தியங்கள்புளிகசப்பு
பாங்கானபுகையோடு பெண்ணுந்தள்ளு, இந்தவகை யென்னைப்
போலியாருஞ் சொல்வார் இகத்திலுள்ளோர்பிழைக்கவென்றிரங்
கினேனே. (௫௬)

வில்வாதி லேகியம்.

இரங்கியேலேகியமொன்றுசொல்லக்கேளுஇதமானவில்வாதி
யென்றநாமம்,பரங்கியேவில்வம்விலாமிச்சைகோரைபாங்கானசஞ்
சீவிவகையொன்றுக்கு, தாங்கியேகீழ்நாடன்பலந்தானெட்டுதானி
டித்துக்கலவெள்ளநீரிற்போட்டு, அரங்கியேசோடசத்தொன்றாகக்
காய்ச்சிஅப்பனேகொம்பரக்கு சேர்தான்ரண்டே. (௫௭)

ரெண்டானதூணிநீரொட்டொன்றாக்கி நினைவாக எள்ளெண்
ணெய்படிதான்சுத்தி, குன்றானவாவின்பால் படிதானஞ்சுகுலமான
கற்கவகைசொல்லக்கேளு, நன்றானதிரிகடுகு திரிபலாதிநலமானக
ஸ்தூரிமதுரங்கோஷ்டம். கன்றானவிருசீரமாஞ்சில்மஞ்சள் கருது
கெந்தங்கிளியூறல் பூஞ்சாந்தென்னே. (௫௮) ந்

எண்ணவேசெவ்வள்ளிலவங்கப்பட்டை இதமானபச்சையொ டுபூலாவேலம்,பண்ணவேவகையொன்றுபலந்தான்வாங்கிப்பாங்கா னவாவின்பால் விட்டேயாட்டி,மூன்னவேகியாழமெண்ணெய்தனி ற்கனைத்துமோகமாயடுப்பேற்றிக் கமலமாகக்,கன்னவேமுதிராமல் கவளமாகக்கணபதியைப்பூசித்துவடித்திடாயே. (௱௫௯)

வடித்திட்டதைலமது முழுகும்போதுவாகாகத்தீருமிற வியா திகேளு,பிடித்திட்டமேக நீரிருபதும்போம்பேரானபித்தவகைநாற் பதும்போம்,துடித்திட்டகுன்மமெட்டுந்தொலைந்துபோகுந்தொலை யாதசிரசில்நோய்சொல்லாதோடுங், கடித்திட்ட மேகவகைவறட்சி யெல்லாங்கண்காணுதோடுமடாகருதிப்பாரே (௱௬௰)

குமரித்தைலம்

கருதியேநீகேளுபுலத்தியனே யையாகருவானகுமரியிடதைல ஞ்சொல்வேன்விருதானகுமரிச்சாற்ப்படியிரண்டுவெள்ளாவின்பா லதுதான்படியிரண்டு,சருதானஎள்ளெண்ணெய் படியிரண்டு சாற் றுகிறேன்கற்கவகை திரிகடுகுகோஷ்டம்வருவானமாஞ்சிலொடு தி ரிபலையுஞ்சீரம் மதுரமொடுபூஞ்சாந்தோடேலமென்ன. (௱௬௧)

என்னவேபச்சையிலைபூலாமூலம் இதமானலவங்கப்பத் திரியு ம்பட்டை, அன்னதேசெவ்வள்ளியக்கிராகாரம் அருளானகஸ்தூரி லவங்கங்கெந்தந், தின்னவேரோகணியுஞ்செண்பகப்பூயானை திப்பி லியுமந்திஷ்டிசோம்புஞ்மஞ்சள்,பன்னவேவகையொன்றுபலமதை தானவாங்கிப் பரிவானவாவின்பால் படிவிட்டாட்டே. (௱௬௨)

ஆட்டியேகனைத்தெண்ணெச் சாற்றினுள்ளே அப்புனேயடுப் பேற்றிக்கமலமாக,முட்டியேமெழுகுபதமாகவாங்கிமுதிராமல்வடி த்ததனைச் சீசாவில்விட்டு,நாட்டுவாய்தானியத்தில்வைத்துமூடிநல மாகமண்டலங்கால் சென்றபின்பு, தாடடிகமாய்மண்டலந்தான்மு ழுகும்போது சாதகமாய்த்தீரும்நோய் சாற்றக்கேளே (௱௬௩)

கேளடா மேகமென்றதெல்லாம்போகும் கெடியானவஸ்திசு ரம்வெட்டைபோகும், தாளடாபித்தமெல்லாஞ்சாந்தமாகுஞ்சரீ ரத்தில்தறட்சிமுத ஊறல்போகும், வேளடாகுன்மமெட்டும்பாண் டுமாறும்வெளுப்பானதேகமெல்லாம் வண்டுபோலாம் வாளடாவ யித்தியர்க்காய்த்தைலஞ்சொன்னேன் வளமானமனமுடையோய்ம கிழ்ந்துபாரே (௱௬௪)

கொம்பரக்குத்தைலம்.

மகிழவேகொம்பரக்குத்தைலங்கேளுமகத்தானகொம்பரக்கு ப்பலந்தானெட்டு,நெகிழவேதூணிநீ ரெட்டொன்றாக்கி நிசமான தாளிக்குள்வடித்துவிட்டுத்,தகழவேஎள்ளெண்ணெய்சேர்தானஞ் சுதயிர்தண்ணீர்சேரிரண்டு பால்சேரஞ்சு,நிகழவேகாடியதுசேர்தா ன்ரண்டுநிசமாகக்கற்கவகைசொல்லக்கேளே. (௱௬௫)

கேளப்பாசதகுப்பை கடுகுரோணி கிளியூறல் பூஞ்சாந்துப்ச் சைப்பூலா,நாளப்பாசெவ்வள்ளிலங்கப்பத்திரி நலமான லவங்கத் தோல்மாஞ்சில்கோஷ்டம்,தாளப்பாகஸ்தூரிமதுரங்கெந்தந்தயவா கவிருசீரம்விருகு வேலம் ஆளப்பாவகையொன்றுகழஞ்சிரண்டுஅ ப்பனே ஆவின்பால்விட்டிட்டாட்டே (௱௬௬)

ஆட்டுவாயெண்ணெய்க்குட் கரைத்துவிட்டு அடுப்பேற்றிமெழுகுபதமானவாறே, நாட்டிவேவடித்ததனைமுழுகும்போதுநலமாகத்திருகிறவியாதிகேளு, தாட்டியமாம் பித்தவெட்டை யஸ்திசுரம்போம் தலைமயக்கம்வாயூறல்சாந்தமாகும்,வாட்டியதோர்சீதசுரமாண்டுபோகும் வயிற்றியதோர்தேகமெல்லாமூறும் பாரே. (௱௬௭)

ஊறுமேகன வெட்டைகனசுரங்கள் உத்தமனேகணப்பாண்டுவெளுத்ததேகங், தேருமதேகத்தில்வலிகடுப்புந் திறமான சூலைமெல்லாந்தீரும். காறுமேகற்றுழைபுறங்கைவீசி நலமானதழுதளையுநாடாதோடும், சீறுமேகாசமெல்லாந் தீர்ந்துபோகுந்திறமானவொன்றைவிட்டொருநாளென்னே. (௱௬௮)

மிருகாமலத் தைலம்

என்னவேபத்தியந்தான் புளிகசப்பு இதமானபுகையோடுபெண்ணுமாகா, தன்னவேதைலமொன்று சொல்லக்கேளுதனமானமிருகாமலத்தைலஞ்சொல்வேன்' நன்னவேமிருகாமழச் சாறுபடிரண்டு நலமானகாணிச்சாறுபடியிரண்டு பன்னவேகுமரிச்சாறுபடியிரண்டு,பாங்கானசெவ்விளநீரபடிதானெட்டே. (௱௬௯)

படியானசிறுகீரை சாறுபடிரண்டு பழுதில்லா வாவின்படிதான்ரண்டு;செடியானயெள்ளெண்ணெய்படிதான்மூன்றுசேர்க்கவிதிற்கற்கவகை மருந்துகேளும், கொடியானமதுரமொடு கோஷ்டமேலங்.குரோசானிபச்சையிலைப் பூலாமூலம், கடியானகஸ்தூரிமாஞ்சில்சீரங் கருவானபத்திரியும் சாதிக்காய்கூட்டே. (௱௭௰)

கூட்டுவாய்லவங்கப்பத்திரியும்பட்டை கெர்டிதானதிரிகடுகுதிரிபலாதி, நாட்டுவாய்பூஞ்சாந்துசோம்புவால்மிளகு நலமானவகையொன்றுகழஞ்சுமூன்று, ஆட்டுவாயாவின்பால்விட்டுநன்றாய்அப்பனேசாறெண்ணெய்தனிற்கரைத்து,மூட்டுவாயடுப்பேற்றிக்கமலமாகழுதிராமல்கணபதிக்குப்பூசைபண்ணே. (௱௭௧)

பண்ணியேமெழுகுபதந்தனில்வடித்துப்பாங்கீாக முழுகிவரத்திருநோய்கேள், கண்ணிலேகாசமோடந்திமாலை கருவீானநேத்திரநோய்தொண்ணூற்றாறு, மண்ணிலேபித்தவெட்டைபித்தவாய்வுமயக்கமுடனஸ்திவெட்டைமாண்டுபோகும், தண்ணிலேயுடம்பெரிவுகைகால்காந்தல் தளமானவுஷ்ணநோய்சாராதென்னே, (௱௭௨)

சந்தனாதித்தைலம்.

சாரவேசந்தனாதித்தைலஞ்சொல்வேன்சார்பானபுலத்தியனேசொல்லக்கேளு, சேரவேமலர்கா வின்சந்தனத்தூள் செப்புகிறேனடையொன்றுதூக்கியேதான்,வாரவேவிலாமிச்சைவெட்டிகோரைவகையுடன்சீந்திலொடுசிற்றாமுட்டி,காரவேபேராமுட்டிபேராமல்லி கருவானசிற்றாமல்லியசுவமாமே, (௱௭௩)

ஆமப்பாநன்னாரி பற்படாகந்தான் அப்பனேவகையொன்றுபலந்தாநாலு, போமப்பாவிருதூணிவெள்ளநீரில்பொடியாகவிடித்திடித்தடுப்பிலேற்றி, நாமப்பாசோடசத்தொன்றாகக் காய்ச்சி நலமானபாண்டத்தில்வடித்துக்கொண்டு,தாமப்பாசெவ்விளநீர்படியிரண்டுதப்பாமல் காணிச்சாறுபடியிரண்டுவாரே (௱௭௪)

வாரப்பாசிறுகீரைபடிதானொன்று வாகானபொடுதலைச் சாறுபடியொன்று. சேரப்பாவல்லாரை படிதானொன்று திறவின்னிக்கலச்த
றைசமனாயக்கூட்டி, நாமவாயகோடி

றுதான்படிதானென்று, காரப்பாபொற்றலைச்சாறுபடியொன்று க
ருவானநெல்லியின்சாறுபடியொன்று, ஆமப்பாகர்ப்பூரவள்ளிச்சா
று அழகர்க்கூடவிட்டுப்படிதானென்றே. (௱௭௫)

ஒன்றப்பாதாழைவிடவிழுதின்சாறு உத்தமனே யெள்ளெண்
ணெய்ப்படிதான்மூன்று, நன்றப்பா நறுநெய்தான் படிதானென்று
நலமானவாவின்பால் படிதானாலு, குன்றானதயிர்தண்ணீர்ப்படியிர
ண்டு குறையாமல்பாண்டத்திலூற்றிக்கொண்டு, சென்று நீயடுப்பி
லேகொதிக்கவைத்துத் திறமானகடைச்சரக்குச்சொல்லக்கேளே()

கேளப்பாதிரிகடுகுதிரிபலாதி கிருபையாங்கஸ்தூரிமதுரமேல
ம், தாளப்பாபூஞ்சாந்துகிளியூறற்பட்டை தளமானலவங்கப்பத்திரி
யும்பட்டை, நாளப்பாகிராமபுசாதிக்காய்பத்திரிநலமானபச்சையி
லைபூலாமூலம்,ஆளப்பாசெவ்வள்ளி செண்பகப்பூஅப்பனேகெந்த
மோடுசீரம்ரண்டே, (௱௭௭)

ரெண்டானசெங்கழுநீர்கோஷ்டமக்கிரா நிலையானமஞ்சிஷ்டிப
லகைமஞ்சள், செண்டானசந்தனமு முத்தக்காசும்திருக்க னவலம்
புரிக்காயிடம்புரிக்காய், குன்றாமல்வகையொன்றுபல மரைதான்
வாங்கிகுலமானவாவின்பால் விட்டேயாட்டி,வென்றான*மேஷப்பா
ல்ப்படியிரண்டில்கரைத்து விறவேவெண்ணெயிலேவிட்டுக்கேளே()

கேளப்பாவடுப்பேற்றிக்கமலமாகக்கிருபையால் மெழுகுபதந்
தன்னிலேதான், நாளப்பாகணபதிக்குப் பூசைபண்ணி நலமானகம
பளியால்வடித்துக்கொண்டு, தாளப்பாகுங்குமப்பூ கோரோசனையு
தளமானபுழுகதிலேகழஞ்சுவீதம், கேளப்பாபொடித் திட்டுக்கலச
த்துள்ளே குணமாகத்தாளியதில்வைத்துமூடே. (௱௭௯)

மூடியேமண்டலங்கால்சென்றபின்பு முழுகிவரச்சீயக்காயுரை
ப்பதாகும், நாடியேதிருகிறவியாதிகேளு நாடாதுமேகமென்ற திரு
பதுந்தான், சாடியேநீரிழிவுநீரருக்கல் தள்ளுண்டு போகுமடா க்ஷ
யந்தானெட்டும், காடியேகண்ணெரிவுகண்புகைச்சல் கையெரிவுகா
லெரிவுமோடுங்காணே (௱௮௰)

ஓடுமடாபிரமியங்கள்ரணக்கிரந்தி உத்தமனேகற்றாழை நாற்ற
ந்தீரும், சாடுமடாவஸ்திசுரமஸ்திவெட்டை சரீரத்திலமயக்கமெல்
லாஞ் சாந்தமாகும், போடுமடாவிந்திரகண்டிபுண்புரைகள்போகு
ம் புழுவெட்டுகண்டத்தின் புரைகள்போகும், தேடுமடாபெண்மே
லேமோகமெத்தச் சிக்காதேவலையினுள்ளே தெளிந்து நில்லே. ()

தெளிந்துகொண்டுமாயத்திற்சிக்கவேண்டாம் தேகத்திலுள்ள
நோய் சிதறிப்போகும், அளிந்ததொருகுட்டமொடு சொரிசிரங்கு
ம்அப்பனேயுள்ளவெட்டையாறிப்போகும்,நளிந்திந்தத்தயில மது
முழுகும்போது நன்றானபுளியோடுபுகைகசப்பு, வளிந்துமிகவாய்
வென்றபதார்த்தந்தள்ளு வளமாகுன்சரீரமெல்லாமருணமாமே.()

பொன்னாங்காணித்தைலம்.

ஆமப்பாபொன்னாங்காணித்தைலங்கேளு அப்பனேகாணிச்சா
றுபடியிரண்டு, நாமப்பாமாரிச்சாலைபடியொன்றுநலமானநெல்லிக்
காயச்சாறுபடியொன்று,தாமப்பாயெள்ளெண்ணெய்ப்படியிரண்டு
தப்பாமலாவின்பால்படியிரண்டு,வேமப்பாமதுரமதுபலமிரண்டுவி
ருதானமூலைப்பாலாலரைத்துப்போட்டே. (௱ [illegible] ௮)

போட்டப்பாமெழுகுபதந்தனில் வடித்துப் புகழாகமுழுகிவர த்திருநோய்கேள், நீட்டப்பாநேத்திரநோய்தொண் ணூற்றாறும்நிலை மைகெட்ட காசமெல்லாநீங்கிப்போகும்,வாட்டப்பாபித்தமெல்லா ம்வாங்கிப்போகும்வளமாகநேத்திரங்களொளியேமீறும்,நாட்டப்பா ஊஷ்ணநோ எல்லாந்தீரும்நலமாநகீழ்க்காய்நெல்லித்தயிலங்கேளே

கீழ்காய்நெல்லித்தயிலம்.

கேளப்பாகீழ்க்காய்நெல்லித்தானுங்கிருபையாய்த்தூக்கிடித்து த்தூணிநீரில், வாளப்பாவெட்டொன்றாய்வடித்துக்கொண்டுவளமா னவெள்ளெண்ணெய்ப்படியிரண்டு, நாளப்பாயாவின்பால் படியிர ண்டுநலமானசீரகந்தான்பலமிரண்டு, வேளப்பா பாலிலேயரைத்து விட்டுவிருதாகமெழுகுபதம்வடித்துவாங்கே (௱அ௬)

வாங்கியேமுழுகிவரப்பித்தவெட்டைமயக்கமொடு மஞ்சள்கா மாலைதீரும்,தாங்கியேவாந்தியெல்லாந்தவறுண்டேபோம்தலைமயக் கம்மாயூறல்சாந்தமாகும்,தேங்கியேயுட்சுரங்கள்தீர்ந்துபோகும், எ ங்ஙேதிரியாதேமனஞ்சேம்பாதேளிதல்லநோயப்பாவிரங்கிபாரோ

ஆதண்டைத்தயிலம்.

பாரப்பாசிரசிலுள்ள சூலைதீரப் பக்குவமாய்த்தயிலமொன்று சொல்லக்கேளு,நேரப்பாவாதண்டைநொச்சிசங்குநிலைவாகவெரு க்கோடுசிற்றாமுட்டி,ஆரப்பாவகை யொன்றுபலம்பத்தாகும் அப்ப னே தூணிநீரெட்டொன்றாக்கிக், காரப்பாயெருக்கினிடப் பழுப்புச் சாறுகருவானபடியென்றுபழச்சாறென்றே (௱அ௭)

ஒன்றப்பாஎள்ளெண்ணெய்ப் படிதானென்று உத்தமனேவே ப்பெண்ணெய்ப்படி யரைதான்கூட்டி, நன்றப்பாதிரிகடுகுவோமம் பூண்டுநலமான்வசம்பேலமஞ்சள்கூட்டிக், கன்றப்பாவரைத்தெண் ணெய்தனிற்கரைத்து கருவானமெழுகுபதந்தனில்வடித்து,மொன் றப்பாமுழுகிவரத்திருநோய்கள்முதலானசிரசிலுள்ளசூலைபோமே,

சூலைபோம்வாயுவெல்லாஞ்சொல்லாதோடுஞ்சுறுக்கானவாத த்தின்சூலைதீரும், வாலையாந்திமிர்வாதமினைப்புத்தீரும்வயிற்றிலுள் ளவாயுவெல்லாம்வாங்கிப்போகும், சோலைபோஞ்சிறுகடுப்புநேத் திரக்குத்தல் சொறிசிரங்குகரப்பனேடிரணங்கள்தீரும், ஆலப்பாப த்தியந்தான்புளிகசப்பு அப்பனேபுகைவாய்வுபதார்த்தந்தள்ளே ()

பதின்மூன்றுசன்னிக்குத்தயிலம்,

தள்ளவேசன்னியெல்லாங்கட லேபுக்கும்தயவாகத்தயிலமொன் றுசொல்லக்கேளு, நள்ளவேவேப்பெண்ணெய்ப் புங்கனெண்ணெ ய்நலமானபுன்யெண்ணெய்பசுவினெய்யும், கள்ளவேகாட்டினுமண க்கினெண்ணெய்க்கருவாகச்சமன்கூட்டிச்சட்டியிலேவார்த், தள்ள வேமுசுருமுட்டைகாலதாகுமடைவிலேஎண்ணெய்படிகாலதாமே,

காலானபடிவீதஞ்சேர்த்துக்கொண்டு கருவான*குக்குடத்தின் முட்டைபத்து, மாலாகாஞ்சனையுங்கூட விட்டுமயங்காதேகடைமரு ந்துசொல்லக்கேளு,சாலானசாதிலிங்கந்தீமுறுகவேசமர்த்தானகெ ந்திரசம்பாஷாணந்தான், ஆலானநாமியுடன்மிளகுதிப்பிலியும் அ ழகானயானைதிப்பிலியும்போடே. (௱௯௧)

* குக்குடம்-கோழி

போடுவாய்லவங்கமொடு நேர்வாளந்தான் புகழானகழஞ்சுநி றைசமனுக்கூட்டி, நாடுவாய்கொடிவேலிகியாழத்தாலேநலமாகச்த

சாமமொன்றரைத்துக்கொண்டு,சாடுவாயெண்ணெயிலேதான்கரைத்துச்சதுராகக்கொதிக்கையிலேயெருக்கம்பாலும், கோடுவாய்கொடிக்கள்ளிசதுரக்கள்ளி குணமானவிலைக்கள்ளிப்பாலுங்கூட்டே. ()

கூட்டியே திருகள்ளி * நானுங்கள்ளிகூசாதேபடர்ந்திருந்தமுள்ளிக்கள்ளி,சாட்டியேபால்வகைதானுழக்குமாகும்சாதகமாயெண்ணெயுடன்கலந்துகொண்டு, மூட்டியேகமலமாந்தீயிலன்பாய் முதிராமற்கொதிக்கையிலேகஸ்தூரிகேளு;நீட்டியேயஞ்சுபணமுலைப்பாலாலேநீயரைத்துக்கரைத்தெண்ணெய்தன்னில்வாரே (௱௯௩)

* நானுங்கள்ளி-இலைக்கள்ளி,

வார்த்திடுவாய்முலைப்பால்தான்படிகால்வீதம்வளமானதேசிப்பால்படிகாலாமே,சேர்த்திடுவாய்க்காட்டெருமைப்பால் பலந்தான்திரியாமலெண்ணெயிலேவிட்டுக்காய்ச்சி, ஆர்த்திடுவாயாற்றலரிவேலைநால்போடுஅன்பாகவெள்ளுள்ளியரைத்துப்போடு,மூர்த்திடவேமெழுகுபதமானவாரே மூன்னவனைப்பூசித்துவடித்திடாயே,(௱௯௪

வடித்திட்டதயிலமதைப்பானையிலேயூற்றிவா குகோரோசனையுங்கழஞ்சிபொடித்திட்டு, பிடித்திட்டசன்னிவகை பதின்மூன்றுக்கும்போரானகரண்டிநிறை யீந்தாயானால், துடித்திட்டசன்னியெல்லாந்தொலைந்துபோகும் துடியானயிசுவுக்குத் துவளைபோட, நடித்திட்டநரம்பெல்லாமிருதுவாகும் நலமில்லா யிசுவெல்லா நனினமாமே. (௱௯௫)

நிலப்பனைக்கிருதம்

நள்ளவேகிருதமொன்று சொல்லக்கேளு நலமானநிலைப்பனையுமொதியம்பட்டை, விள்ளவேகருங்காலிநாகப்பட்டை விதமான*வேந்தனிடபட்டைதானும், அள்ளவேவகையொன்று பலம்பத்தாகஅப்பனேயிடித்துநன்றாயிருதூணிநீரில், தள்ளவேசோடசத்தொன்றாகக்காய்ச்சித் தளமானவாவின்பால்படிதான்ரண்டே. (௱௯௬)

* வேந்தன்பட்டை-அரசன்பட்டை.

ரெண்டூப்பாயாவின்பால் படிதான்ரெண்டுநினைவாகப்புளியாரைச்சாறுபடியொன்று,விண்டப்பாகோவையிடதண்டுச்சாறு விதமாகப்படியதுதான்கூடவிட்டு, நன்றப்பாபொன்முசுட்டை சிறுகாஞ்சோறி நளமானவிளாம்வித்துகொத்துமல்லி,கன்றப்பாதிரிகடுகுதிரிபலாதி கருவானபேரீச்சு முந்திரிகையாமே. (௱௯௭)

ஆமப்பாகர்க்கடகமாம்பருப்பரத்தை அப்பனே காட்டத்திகிழ்க்காய்நெல்லி, நாமப்பாவதிவிடையம்கூவிளத்தின்பிஞ்சு நலமானவிளாம்பிஞ்சுமாதுளையின்பிஞ்சு; தாமப்பாசந்தனமுஞ்சாத்திரபேதிதளமானபுளிவிரைத்தோல் முத்தக்காசு, வேமப்பாசிறுநாகம்லவங்கப்பட்டைவிதமானகுரோசானியோமங்கூட்டே. (௱௯௮)

கூட்டப்பாமருந்துவெள்ளையமுக்குறுவேர்கூசாதேவகைக்கிரண்டுகழஞ்சுவீதம்,ஆட்டப்பாவாவின்பால்விட்டரைத்து அப்பனே நெய்தனிலேகரைத்துவிட்டு, மூட்டப்பாவடுப்பேற்றிக் கமலமாகமுதிராமல் மெழுகுபதமானபோது, நாட்டப்பாவடிகொண்டுபரணிசெய்து நலமாகவிருநேரங்கழஞ்சுகொள்ளே. (௱௯௯)

கொள்ளவேபெரும்பாண்டு வெலும்புருக்கி கூறுனபிரமியங்கள்கடுப்புமூலம்,விள்ளவேகிராணிவகையெல்லாந்தீரும் விதமான

சுக்கிலந்தானிறுகும்பாரு, தள்ளவேசடம்வெளுப்புகைகால்காந்தல் தளமானகுறியெறிப்பு நீர்க்கடுப்பு,நள்ளவேதீருமடா பத்தியங்கார்நலமாகச்சிராகக்கியாழங்கொள்ளே (உ௱)

பொன்னாங்காணிக்கிருதம்.

கொள்ளவேகிருதமொன்றுசொல்லக்கேளு குறிப்பானகாணிச்சாறுபடிதானென்று, நள்ளவேபொற்கையான்சாறுபடியொன்று நலமானபழச்சாறு படியனைதான்விட்டு, விள்ளவேயாவினெய்ப்படிதானென்று விருதானவாவின்பால் படிதானென்று, தெள்ளவேமதுரமொடு பலந்தானிரண்டு தெளிவான யாவின்பால் விட்டிட்டாட்டே. (உ௱க)

ஆட்டியேநெய்க்குள்ளே கரைத்துவிட்டு அடுப்பேற்றிமெழுகுபதமானவாறே,நீட்டியேசாதிக்காய்சாதிப்பத்திரிநினைவாகக்கோரோசனையுங்கற்கண்டப்பா,நாட்டியேகழஞ்சுநிறைபொடித்துப்போட்டு நலமாகக்கிண்டிவைத்துக் கரண்டிவீதம், மூட்டியேயிருநேரங்கொண்டாயானால் முக்கியமாய்த்தீருமடாமூலச்சூடே ()

சூட்டுடனேயூஷ்ணநோயெல்லாந்தீரும்சுகமாகமேலெரிவுகைகால்காந்தல், நாட்டுடனேயுலர்த்துகின்றமேகந்தீரும் நணுகாதுவயிற்றிலுள்ளவெரிகட்கெல்லாம், வாட்டுடனே நேத்திரமெல்லாங்குளிர்ச்சியாக்கும் வளமாகும்வாய்நாற்றம் விட்டுப்போகும், நீட்டுடனேயிருக்கின்றபிரமியந்தான் தீருமடாபுளியாரைக் கிருதங்கேளே. (உ௱௩)

புளியாரைக்கிருதம்.

கேளடாபுளியாரைச்சாறு படியொன்றுகிருபையுள்ளவள்ளிச்சாறுபடிதானென்று, நாளடாகாணிச்சாறு படிதானிரண்டுநலமானசெவ்விளநீர் படிதானிரண்டு தாளடாவாவிநெய்சேர்தானஞ்சுதளமான்கருவாவின் பால்சேரஞ்சு, ஆளடாசிரகமுமாசக்காயும் அப்பனேமதுரமொடுகழஞ்சுநாலே. (உ௱௪)

நாலப்பாவாவின்பால் விட்டேயாட்டி நலமாகநெய்சாற்றிற்கரைத்துவிட்டு, வேலப்பாவடுப்பேற்றிமெழுகதானால்விருதாகவாத்துமேற்பொடிதான்கேளு, காலப்பாபத்திரியுமேலம்ரண்டுகருவாக்கழஞ்சிரண்டுபொடித்துத்தூவி, ஆலப்பாகற்கண்டுபலந்தானென்றுஅப்பனேபொடித்திட்டுக்கரண்டிநிறையாமே. (உ௱௫)

ஆமப்பாவிருநேரமண்டலங்கொள் அப்பனேபித்தவெட்டைபித்தவாய்வு, தாமப்பாவெரிச்சலொடுநீர்ச்சுருக்குத் தளமானமயக்கமெல்லாந்தவறிப்போகும்,நாமப்பாவாயூறலரோசிகங்கள் நாடாதுபித்தமெல்லாநடுங்கியோடும், போமப்பாவாந்திமுதல் சரீரமூறும்புதிதாகவின்னமொரு கிருதங்கேளே. (உ௱௬)

வல்லாரைக்கிருதம்

கேளப்பாவல்லாரை கிருதஞ்சொல்வேன் கெடியானவல்லாரைச்சாறுபடியொன்று, தாளப்பாகாணிச்சாறுபடிதானென்றுதளமானபொடுதலைச்சாறுபடியொன்று, நாளப்பாபழச்சாறுபடியனைதான்விட்டு நலமானவாவினெய்ப்படிதானிரண்டு, ஆளப்பாவாவின்பால்படிதானிரண்டு அப்பனேகற்கவகை சாதிக்காயே (உ௱௭)

காயோடுபத்திரியுமாசக்காயும் கருவானசிங்கியொடுகொட்டாதிப்பிலி தாயோடுமிளகேலங்கிராம்பகளாமானமதுரமொடுவகையொ

ன்றுக்குப், பாயோடமிருகழஞ்சுனிறைதான் தூக்கிப்பருவமாயாவி ன்பால் விட்டேயாட்டி, வாயோடுகைாத்துவிட்டடுப்பிலேற்றிவள மாகமெழுகுபதந்தனில்வடித்தே (உாஅ)

வடித்திட்டுச்சீனிரண்டு பலந்தான்தூக்கி வாகாகப்போட்டதி லேகிண்டிக்கிண்டிக்கடித்திட்டுக்கரண்டிநிறைகொண்டாயானல்கல ங்காதே மண்டலத்தில்திருநோய்கள், தடித்திட்டமேகவகையெல் லாந்திரும் தளமானகுளிர்ச்சியாஞ் சரீரமெல்லாம், வெடித்திட்ட ரணங்கிரந்திவிழலாய்ப்போகும் விருதானபிரமியமும்விட்டுப்போ ச்சே. (உாகூ)

போச்சப்பாரசபஸ்பம் வைத்துக்கொள்ளு புகழானமேகவ கைசூலேபோகும், காச்சப்பாகுஷ்டமொடுசொறிசிரங்கு கருவான *சிங்நுவைநோய்காணுதோடும, வீச்சப்பாகிரந்தியொடுயோனிபுற் றுவிதமானபுண்புரைகள் விழலாய்ப்போகும், மாச்சப்பாநீருகில் குறியெரிப்பு மைந்தனேயஸ்திரணமாறிப்போமே. (உாயி)

* சிங்நுவை - நாக்கு

கூழ்பாண்டக்கிருதம்.

ஆறுமேகூழ்பாண்டக்கிருதங்கேளுஅப்பனேபூசினிக்காய்ச்சா றுபடிரண்டுநாலுமேதாழை ட்டவிருதின்சாறுநன்றாகபடியொன்று தென்னம்பூச்சாறு,காறுமேபடியொன்றுகூடவிட்டுக்கலங்காதேகு மரிச்சாறுபடிதானென்று, சாறுமே செவ்விளநீர் படிதானென்று தளமானவாவின்னெய் படிதான்ரண்டே. (உாயிக)

ரெண்டானகற்கவகைசொல்லக்கேளு நிலேயானசாதிக்காய்சா திப்பத்திரி,பண்டானசாதிக்காய்திரிபலாதிபாங்கானசீரகமு மேலம் வால்மிளகு,குன்றானகாட்டாத்திகர்க்கடகச்சிங்கிகூறானமல்லியொ டுகுரோசாணியோமம், நன்றாகக் கழஞ்சினிறைமூன்றதாகநலமா னவாவின்பால் விட்டிட்டாட்டே. (உாயிஉ)

ஆட்டியேயாவின்பால் படிரண்டுக்குள் அப்பனேகைாத்து வி ட்டடுப்பிலேற்றி, நாட்டியேமெழுகுபதமாகும்போதுநலமாக வடி கொண்டுகலசத்துள்ளே, காட்டியேகற்கண்டுபலந்தான்ரண்டு கரு வாகப்பொடித்திட்டுக்கரண்டிவீதம், மூட்டியேமண்டலங்கால்கொ ண்டாயானல் மூதண்டபிரமியங்கள்மேகம்போமே. (உாயிரு)

போமப்பாவூஷ்ணங்களெரிவுகாந்தல் பொல்லாதநீர்க்குத்துகு றியெரிப்பு,நாமப்பாவஸ்திரணமஸ்திவெட்டைநாடாதுகிராணியெ ல்லாம்களினமாகும்,தாமப்பாவெலும்புருக்கி மாலேயெல்லாற் தவ றுண்டேபோகுமடாபித்தமெல்லாம், ஆமப்பாவப்பிரேகம் போட் டுக்கொள்ளுஅனுகாதுமேகநீரற்றுப்போமே, (உாயிச)

தூதுளேக்கிருதம்,

அற்றுப்போம் தூதுளேக்கிருதங்கேளும்அப்பனே தூதுளேயெ டைதானென்று கற்றுப்போனமுள்ளி கண்டங்கத்திரி கருதுசிறு காஞ்சொறியாடாதோடை, சற்றுப்போம் மிளகு திப்பிலி கடுக்கா ய்சதிரான துரால்பையும் வகையொன்றுக்கு நற்றுப்போம்பலம் நாலுகொண்டிடித்து நலமாகவிருதூணிநீரிலூட்டே (உாயிரு)

ஊட்டியே சோடசத்தன்றாகக்காய்ச்சி உத்தமனே வடித்து வொருபாண்டத்தூற்றி நாட்டியேயாவிநெய்படிதான்ரண்டு நலமா

னவாவின்பால்படிதான்ரண்டு,காட்டியேதிரிகடுகுதிரிபலாதிகருவா னதாளிசங்கோஷ்டமக்கிரா, வாட்டியேவாய்விளங்கஞ்சீரகமுமோ ம்வால் மிளகோடனைத்தைரண்டு மேலந்தானே. (உாயசு)

ஏலமொடுகிராம்புசாதிக்காய்பத்திரிஎடுத்திடுவாய் வகையொ ன்றுகழஞ்சுமூன்று, ஆலமொடுவாவின்பால்விட்டேயாட்டி அப்ப னேநெய்தனிலே கனைத்துவிட்டு, ஞாலமொடுமெழுகுபதமாகுநே ரம்நலமாகவடிகொண்டுகரண்டிவீதம்,காலமேமண்டலந்தான்கொ ண்டாயானால் கருவானக்ஷயமெட்டுங் காணுதன்றே. (உாயஎ)

காணுதேயீளையோடிருமல்காசம் கலங்காதேசேத்துமநோய் தொண்ணூற்றுறும், நாணுமேமேகமெல்லாநாடாதோடும் நலமா னவூஷ்ணநோயெல்லாந்தீரும், ஆணுவேயீளையிளைப்பற்றுப்போகு ம்அப்பனேவாயுவென்றதெல்லாந்தீரும், கோணுமேகுண்டலமாம் வாய்வுதீரும் குறிப்பாகவின்னமொருசேதிகேளே. (உாயஅ)

கேளடாகண்டங்கத்திரிக்கிருதஞ்சொல்வேன் கிருபையாங்க ண்டங்கத்திரிதூக்கப்பா, நாளடாசிறுகாஞ்சோரிநலமானதூதுளைச ங்குமூலம்,வாளடாவகையொன்றுபலந் தானஞ்சுவகையாகவடித்தி ருதூணி நீரில், தாளடாசோடசத்தொன்றாகக்காய்ச்சித்தப்பாமல் வடிகொண்டுபாண்டத்திலூற்றே (உாயகூ)

ஊற்றியேயாவினெய்படி தான்ரண்டு உத்தமனேயாவின்பால் படிதான்ரண்டுதோற்றியேகற்கவகைசொல்லக்கேளுதலமானதிரிகடு குதிரிபலாதி,ஏற்றியேயேலமோடக்கிராகாரம்இதமானகிராம்புசா திக்காய்பத்திரி, ஆற்றியேதாளிசம்லவங்கப்பட்டைஅரத்தைரண்டு சீரம்ரண்டோமமாமே (உாஉக)

ஆமப்பாவகையொன்றுகழஞ்சுமூன்று அப்பனேயாவின்பால் விட்டேயாட்டி,நாமப்பாநெய்தனிலேகனைத்துவிட்டுநலமாகமெழு குபதந்தனில்வடித்து, தாமப்பாகரண்டிநிறைகொண்டாயானல்கவ றுண்டேஜயகாசமெல்லாந்தீரும்வேமப்பாவலிப்பிசுவும்வெகுண்டு போகும்விருதானவயிறுவிம் மல்தளரும்பாரோ (உாஉய)

பாரப்பாவிஷக்கடிகளெலிகடிகள்தீரும்பதறுகின்றவலிப்பெல் லாம்பறந்துபோகும்.நேரப்பாகுன்மமெட்டுநீங்கிப்போகும்நிலையா னமந்தாரகாச நீங்கும்வாரப்பா சேத்துமநோ யெல்லாந்தீரும்வள மானவாய்வெல்லாம்மாண்டுபோகும், ஆரப்பாதாள கத்தின்பற்பங் கூட்டிஅப்பனேமண்டலங்கொள் ளகன்றுபோமே. (உஉஉ)

கணத்தெண்ணெய்.

போமப்பா கணத்தெண்ணெய்சொல்லக் கேளுபுகல்முத்துக் கொட்டையெண்ணெய்படிகானென்றே, நாமப்பாவகையான்சாறு காணிச்சாறுநலமானகுமறிச்சாறீருள்ளிச்சாறு வேமப்பாகோவை ச்சாறுபுளியனைச்சாறுவிதமானகற்பூரவள்ளிச்சாறுதாமப்பாவகை யொன்றுசாறுபடிகாலால்தப்பாமல் லெண்ணெய்யிலேகூடவாரே.

வார்தப்பாசாதிக்காய்சாதிபத்திரிமைந்தனேமாசக்காய்கர்க்கட கச்சிங்கி,ஏத்தப்பாகோஷ்டமோடக்கிராகாரம்இதமானசீரம்ரண்டு வெந்தயந்தான்,காத்தப்பாலவங்கப்பத்திரியும்பட்டைகருவானவெ

ள்ளுள்ளிவகையொன்றுக்குச்,சாத்தப்பாகழஞ்சினிறை வாங்கியே தளமானவாவின்பால்விட்டிட்டாட்டே (௨.௨௪)

ஆட்டியேயெண்ணெயிலேகறைத்துவிட்டுஅப்பனேபால்படியாலடுப்பிலேறி, நாட்டியேமெழுகுபதமாகவேதான் நலமாகவடிகொண்டுகலசத்துள்ளே.கூட்டியேகோரோசனேகுங்குமப்பூ குணமானசாதிக்காய்கழஞ்சுவீதம்,ஆட்டியேபொடித்திட்டுக்கழஞ்சுநிறையாகஅப்பனேகொடுத்துவரச்சொல்லக்கேளே (௨௨௫)

கேளடாகணவெட்டைகண்சுரங்கள் கெடியானமாந்தமோடுப்பிசங்கள்,நாளடாவுலர்த்துகின்றரணங்கலெல்லாம்நலமாகவாறுமடாகெர்ப்பவெட்டைதாளடாகணப்பாண்டுவெளுத்ததேகம்தளமானீரிழிவுவிடாதசூடு,வேளடாவுடம்பூறு மூஷ்ணம்போகும்வெகுசுறுக்காயின்னமொருசேதிகேளே. (௨௨௬)

கரப்பா ணெண்ணெய்

சேதியென்றகரப்பானும் ரணத்துக்கெல்லாங் தெளிவானவெண்ணெயொன்றுசொல்லக்கேளு, சாதியென்றபூவரசுசெங்கத்தாரிதளம்பூதகரப்பனுகெண்டங்காலி ,வேதியென்ற நிலவாகைவகையொன்ருக்குவிதமாகபலம்பத்துநறுக்கிக்கொண்டுஆதிஎன்றதூணிநீரெட்டொன்ருக்கி அப்பனேயாமணக்கெண்ணெய்படியொன்றே.

ஒன்றப்பாவெள்ளாட்டின்பால்தானென்றுஉத்தமனேமிளகுகருஞ்சீரகந்தான்,வின்றப்பாகார்கோலம்வெள்ளுள்ளிவசம்பு வேருனசதகுப்பைவலம்புரிக்காய்நன்றப்பாபரங்கியிட பட்டைதானும்நலமாகவகையொன்றுகழஞ்சிரண்டுதன்றப்பா முன்பாலாலரைத்துக்கொண்டுதளமானவெண்ணெயிலேகரைத்துவிட்டே. (௨௨௮)

விட்டப்பாவடிப்பேற்றிமெழுகுபதமானல் வெருளாதேகரண்டிநிரைக்கொடுத்தாயானல், தட்டப்பாசகலகரப்பனும்போகும்தள்மானவரிப்பெல்லாஞ்சாராதோடுங்,கட்டப்பாரணத்தின்மேல் தடவிபோடகசகாமலுதிர்ந்துபோங்கருவாய்க்கேளு, பட்டப்பாபத்தியந்தான்காத்தாயானல் பறக்குமடாகரப்பனேடிரணங்கள்தானே ()

மாந் தெண்ணெய்

தானென்றமாந்தெண்ணெய்சொல்லக் கேளுதயவானவாமணக்கினெண்ணெய்படியொன்று,வானென்றவெள்ளுள்ளிவுசிலின்பட்டைவளமானவறுகுமஞ்சன்வெள்ளைபூண்டுகானென்றவெவ்வேறேநிம்பக்காய்மட்டுகருவாகவரைத்தெண்ணெய்தனிற் கரைத்து, நானென்றபேய்த்தும்மட்டிக்காயப்பா நலமாகப்பாதியதில் நறுக்கிப்போடே, (௨௩௰)

போட்டப்பாவடிப்பேற்றிக்காய்ச்சிவந்தால்பொட்டெனவேயிறக்கியதையிறுத்துக்கொண்டு,நாட்டப்பாமூன்றுநாள்கால்சேர்வீதம்நலமாகக்காலமேகொடுத்தாயானல்,காட்டப்பாமாந்தமெல்லாங்காணுதோடுங்கருவானயிசுவுமுதல்கண்டிப்பாகும், நீட்டப்பாபேய்மாந்தம பெருமலெல்லாம் நிலைகெட்டேயோடுமாமின்னங்கேளே. ()

மேகத்தெண்ணெய்.

கேளப்பாமேம்மென்றதெல்லாந்தீரக் கெடியானவெண்ணெய்யொன்றுசொல்லக்கேளு, நாளப்பா கோவைச்சாற்காணிச்சறுநல

மானவல்லாரைசெருப்படையின்சாறு, வேளப்பா யானையிடநெரு
ஞ்சிச்சாறு வெகுசுருக்காஞ் சிந்தியிட தண்டுச்சாறு,ஆளப்பாவரச
னிடபட்டைச்சாறு அப்பனேவகைக்குப்படியளாயதாமே.(௨௩௨)

ஆமப்பா வாமணக்கினெண்ணெய்ப்படிமுக்கால் அப்பனேஎள்
ளெண்ணெய்ப்படிதான்முக்கால், தாமப்பாசாற்றிலேவிட்டுக்கேளுச
துரானசாதிக்காய்சாதிப்பத்திரி,வாமப்பாமாசக்காய்கற்கடகச்சிங்கி
வளமானசண்பகப்பூகாடடாத்திப்பூ, வேமப்பா சிறுநாகமேலங்கு
ரோசானிவெகுசுறுக்காய் கழஞ்சுரண்டெடைதான்தூக்கே(௨௩௩

தூக்கியேயாவின்பால்விட்டேயாட்டிச்சுறுக்காகவெண்ணெயி
லேகரைத்துவிட்டுத்தாக்கியேசித்திரமூலி வேலின்பட்டைசாதகயா
ம்பலமொன்றுகூடப்போட்டுத்,தேக்கியேபடுப்பேற்றிமெழுகுபதம்
பார்த்துத் திறமாகவடித்ததனைக்கலசத்துள்ளே, ஆக்கியேகற்கண்டு
பலம்ரண்டிட்டு அப்பனேகரண்டிநிறைகொள்ளுகொள்ளே(௨௩௪)

கொள்ளப்பாமண்டலந்தான்கொண்டாயானால்கூறுகெட்டமே
கமெல்லாங்குளிர்ந்துபோகும், தள்ள்ப்பாரணக்கிரந்திலிங்கபுற்றுத
ள்ளுமேயோனிப்புற்றறிகிறந்தி,நல்லப்பாவெடி சிலேமேகஊறல்நல
மானசொறிசிரங்குநாடாதோடுந்,தள்ளப்பா சீழ்ரத்தம் பிரமியங்க
ள்தவறுண்டோபோகும்சார்ந்துபாரே. (௨௩௫)

விழுதிஎண்ணெய்.

பாரப்பாகெர்ப்பநோயெல்லாந்தீரப்பகருகிறேன்விழுதிஎண்ணெ
ய்பண்பாய்க்கேளு,சேரப்பா முத்தெண்ணெய்ப்படிதானொன்றுதிற
மானவாவினெய்படிதானொன்றுதாரப்பாவிழுதிச்சாற்படியொன்று
தளமானதிரிகடுகுவசம்பீருள்ளி, ஆரப்பாகோஷ்டமொடு லவங்க
மேலம்அப்பனேவெள்ளுள்ளிகால்தாமே. (௨௨௬)

ஆமப்பாவாவின்பாலாலரைத்துஅப்பனேநெய்தனிலேகரைத்
துவிட்டுப், போமப்பாவடுப்பேற்றிமெழுகுபதம்பார்த்துப் பொட்
டெனவேயிறுத்தொருகலசத்துள்ளே, நாமப்பா மூன்றுநாள்கால்
சேர்வீதம்நலமாகக்கொண்டுவரவாறுநாள்தான், வேமப்பாபத்திய
ந்தா னுப்பைத்தள்ளுவெகுசுருக்காய்த்தீருமடாகெர்ப்பவாய்வே

கெர்ப்பத்தின்வாய்வெல்லாங்கெதிகெட்டோடும்கிட்டாதுசூதகத்
தின்வலியெல்லாம்போம்நற்புற்றில்புழுக்களெல்லாநழுவிவீழும்நா
டாதுசூலையெல்லாநளினமாகும்,சற்பத்திலிசுவுமுதல்தளர்ந்துபோ
கும்சந்திடுப்பில்லேசூலையெல்லாஞ்சாந்தமாகும்,அற்பமது வல்லவ
டாகெற்பமுண்டாம்ஆச்சரியமின்னமொன்றறைகிறேனே (௨௩௮)

அறைகிறேனல்லெண்ணெய்ப்படிதானொன்றுஅப்பனேயாவினெ
ய்படிதானொன்று,மூறைகிறேன்மூலவேர்பலந்தான்ரண்டுமுனையாக
வாவின்பால்விட்டேயாட்டி,நிறைகிறேன்கரைத்துவிட்டடுப்பிலேற்
றி நினைவாகமெழுகுபதந்தனில்வடித்து,குறைகிறேன்கரண்டிநிறை
கொண்டாயானால்கொடிதானமேகமெல்லாங்கூறிப்போமே. ௨௩௯

கூறிப்போங்குறியெரிப்புலிங்கப்புற்றுகொடிதானகிரந்தியெல்
லாங்குடிபோமப்பா, நாறிப்போமுள்ளமூலைவாய்நாற்றங்கள்நாடா
தேயரிப்பெல்லாநளினமாகும், தேறிப்போஞ்சூலைமுதல்வெடிரண

ங்கள்தீராதகுட்டமெல்லாந்தீர்ந்துபோகும், காறிப்போங்கொதியி ட்டுக்கொண்டாயானால்கடல்புக்கும்வெகுரணங்கள்குன்மந்தானே.

* கலிங்காதிஎண்ணெய்.

குன்மவகைதீருதற்குகலிங்காதி எண்ணெய் குணமாகச்சொல் லுகிறேன்புலத்தியனேகேள், கன்ம மென்றதும்மட்டிக்காய்ச்சாறப் பாகருவாகப்படியிரண்டாவி நீர்தான் தன்மமென்ற படியிரண்டு வெள்ளாட்டு நீர்தான்தப்பாமல்படியொன்று கூட்டிச்சேர்த்து,ப ன்மமென்றவாமணக்கினெண்ணெய்யப்பாபகரா தேபடியிரண்டுகூடவா ரோ (௨௪௧)

* கலிங்கம்-தும்மட்டிக்காய்,

வார்த்தப்பாகடுக்காயுங்கடுகுரோணிவளமானவாய்விளங்கந்தி ரிகடுகுமேலம்,ஏத்தப்பாவிந்துப்புவளையலுப்பு இதமானகல்லுப்பு ச்சவுட்டிலுப்புகாத்தப்பாநவாச்சாரம்மெவாச்சாரகலங் காதேயப் பளாகாரங்கூட்டி, பார்த்தப்பாவால்மிளகுயானைத்திப்பிலியும்பாங் கானவெள்ளுள்ளிப்பருப்புமாமே. (௨௪௨)

ஆமப்பாநிலாவாகைகண்டங்கத்திரி அப்பனே வெள்ளைச்சார ணையின்மூலம், நாமப்பா சத்திரச்சாரணைக்கிழங்கு நலமாகவனைப் பலமாயனைத்துக்கொண்டு, தாமப்பாநொச்சிச்சாறுபசுமஞ்சள்சா றுந் தளமானவிஞ்சிச்சாறு குமரிச்சாறு,வேமப்பாபடியனையாய்க் கூட விட்டு விருதானகடைச்சரக்குக் கழஞ்சுமூன்றே (௨௪௩)

மூன்றப்பாவனைத்தெண்ணெய் தனிற்கரைத்துமுதிராமலடுப் பேற்றி மெழுகுபதமானால், ஏன்றப்பாகலசமதில்வடித்துவைத்தே என்னசொல்வே னாக்கால்சேர் வீதமாகக்,கான்றப்பா கொண்டு வரப்பத்துநாள்தான் கவுசையொடுபீலிகையுங் கரைந்துபோகும், ஆன்றப்பாபெறுவயிறு வாய்வுகட்டி அனுகாதுமகோதரங்களற்று ப்போகும், (௨௪௪)

அற்றுப்போம்வாயுவென்றதிரட்சியெல்லாம்யப்பனேகுணமா குமெட்டுவாய்வு, நற்றுப்போங்கெர்ப்பவலி கெர்ப்பச்சூலை நாடா தெயிசுவுபுழுநழுவிவீழும், கற்றுப்போங்கைகாலில் கட்டுசூலை கட ல் புக்குங்குத்துவலிகாணாதோடும், பற்றுப்போம் வயிற்றிலுள்ளவி யாதியெல்லாம் பறக்குமடாவின்னமொன்றுபகரக்கேளே (௨௪௫)

வாதஎண்ணெய்.

கேளப்பாவேப்பெண்ணெய் புங்கனெண்ணெய் கெடியானவா மணக்கின்புன்னையெண்ணெய்,நாளப்பாவெள்ளெண்ணெயந்துங் கூட்டி நலமாகவகையொன்றுபடியரைதான்சேர்த்துத், தாளப்பா வெள்ளுள்ளிவசம்புகாயம் தளமானதிரிகடுகுவோமங்கிராம்பு ஆள ப்பாசதகுப்பைகடுகுரோணிஅப்பனேசித்திரமூலமாமே, ()

ஆமப்பாவகையொன்று . பலமனைதான்வாங்கி அப்பனேகா டியாலனைத்துப்போட்டு, வேமப்பாகாடிபடிரண்டிலேதான் விரு தாகக்காலதுவிட்டடுப்பிலேற்றிப், போமப்பாமெழுகுபதம்வடித்து க்கொண்டு புகழாகக்கலசமதில்பதனம்பண்ணி, தாமப்பாமேற்பூ பூசிப்பிடித்துக்காய்ச்சத் தவறிபோம்வாதமென்பதுவுந்தானே ()

தானேன்றமேகவகை சூலையெல்லாந் தளமானதிமிர்வாதம்பு றமிசிவுமுதலா, நானென்றயிசுவுமுதம் நடக்குவாதம்நாடாதுசிறு

கடுப்புகளினமாகும், தேனென்றகாசெடைதானுள்ளேதாக்கில்தேகத்தின்வாதமெல்லாந் தெறிபட்டுப்போம், வானென்றதேகவலியெல்லாந்தீரும்வளமாகுந்துவாலையிடவாதம்போமே. (௨௪௮)

சுகசீதபேதியெண்ணெய்.

போமப்பாசுகபேதியெண்ணெயொன்றுபுகலுகிறேன்முத்தெண்ணய்ப்படிதானென்று,காமப்பாகுமரிச்சாறு படிதானென்று கருவானபிரமிச்சாறுபடியரைதானாகும். தாமப்பாமிளகுகளிப்பாக்குகடுக்காய்தவறுமல்கருவேலிபலம்ரண்டப்பா, நாமப்பாபதக்குநீர்தன்னிற்போட்டுநலமாகவெட்டொன்றாய்வடித்துவாங்கே, (௨௪௯)

வாங்கியேயெண்ணெய் தனக்குள்ளேயப்பாவளமாககடுக்காயுங்கடுகுரோணி, தாங்கியேமிளகுடனேயுள்ளிவகையொன்றுதவறுமல்பலமனைதானரைத்துப்போட்டு,எங்கியேயடுப்பேற்றிமெழுகுபதமானால்என்னசொல்வேன்கசலசத்துள்வடித்துவைத்து, ஆங்கியேகால்சேர்தான் கொடுத்தாயானால் அப்பனேசுகசீதபேதியாமே

ஆமப்பாநீர்கட்டுவாய்வுஊதல் அப்பனேவாய்வெல்லாமகன்றுபோகும்,தாமப்பா சரீரமெல்லாங்குளிர்ச்சியாகும் தளராதவயிறுவிம்மல்தளர்ந்துபோகும்,நாமப்பாமூலத்தின்சூடெல்லாம்போம்நாடாதுபித்தமெல்லாங்கீழேசாடும், போமப்பாவிதனைப்போல்பேதியெண்ணெய்பூதலத்தில்சுகபேதியில்லைதானே. (௨௫௧)

பழத்தெண்ணெய்.

தானென்றபழத்தெண்ணெய்சொல்லக்கேளு தவறுமல்பழச்சாறுபடிதானென்றுநானென்றமுத்தெண்ணெய்ப்படிதானென்றுநலமானகுமரிச்சாறு படிதானென்று, வேனென்றகடுக்காய்தான்பலமிரண்டுவிருதாகவரைத்தெண்ணெய் தன்னிற்போட்டுக், கானென்ற வடிப்பேற்றிமெழுகுபதமானால் கண்டப்பா வடிகொண்டு கலசம்வாரே. (௨௫௨)

வார்த்தப்பாகால்சேர்த்தான்கொடுத்தாயானல்வாங்குமடாபித்தமென்றநாற்பதும்போம்,ஏத்தப்பா வெரிவுமுதல்வாந்திதீரும் என்னசொல்வேனுஷ்ணநோ யெல்லாந்தீரும் காத்தப்பாபட்சமொன்றுகொடுத்தாயானல் கருவானநோயெல்லாங்காணுதோடும்,பார்த்தப்பாவயிற்றிலுள்ளவியாதியெல்லாம்பறக்குமடாபித்தநோய்பாருபாரே. (௨௫௩)

வீரபத்திரக்கலிக்கம்.

பாரப்பாவீரபத்திரக்கலிக்கங்கேளுபறக்குமடாபசாசு முதல்சன்னியெல்லாம்,சேரப்பாதிரிகடுகுகடுக்காயிந்து திறமானவாளமொடுகிராம்போடேழும்,வேரப்பாவெந்தாயச்சாறதனாலாட்டிவெகுசுறுக்காய்நால்சாம மரைத்துக்கொண்டு, ஆரப்பாமுன்சாற்றிற்கலிக்கம்போட அப்பனேசன்னிமுதல்தோஷம்போமே. (௨௫௪)

ஆக்கிராணநசியம்.

மோமப்பாவாக்ராணஞ் சொல்லக்கேளுபுகழானசுண்டைவேர்தும்பைமூலம், நாமப்பாவிலுப்பைப்பிண்ணாக்கும்சுட்டு நலமாகமுன்னிரண்டும்ரவியுலர்த்தி, சேமப்பாபொடிசெய்து வடிகொண்டேதான்திறமானகுழலடைத்தாக்கிராணஞ்செய்யத்,தாமப்பாதலையிலுள்ளதோஷமெல்லாம்சண்ணுண்டுபோகுமடாவின்னங்கேளே.

நசியம்.

கேளப்பா விலுப்பையிட பழம்பிண்ணுக்குக் கிரிகையாய்ப் பொடிசெய்து துணியிற்கட்டி, வாளப்பாவாலேயிட வூசிநீரில்மைந்த னேநசியமிடச்சன்னிதோஷம், தாளப்பாபித்தத்தாலெடுத்ததோஷ ம்தளமானகபவாததோஷமெல்லாம், ஆளப்பாபிரமராட்சதன்முத லாய்ஆகாதபசாசுமுதலகன்றுபோமே. (உ௫௬)

கண்டாவிழ்தம்.

போமப்பாகண்டாவிழ்தஞ்சொல்லக்கேளு புதுமையாந்தங்க மொடுவெள்ளிமுத்து, நாமப்பாமதுரமொடுகிராம்புதிப்பிலிநலமா னபவளமோடுருத்திராக்ஷம், தாமப்பாகோஷ்டமோர்டக்கிராகாரம் தளமானகாமப்பூகூவிளத்தின்மூலம், ஆமப்பாகலேக்கொம்புரசசெ ந்தூரம்அப்பனேயாடாதோடைமூலந்தானே (உ௫௭)

தானென்றமூலேப்பாலா லரைத்துக்கொண்டு தப்பாமல்தேன் குத்திநாவிற்போட, நானென்றதோஷமொடு சன்னியெல்லாம்நா டாதுநாவறட்சிநாவழுத்தல், தேனென்றஸ்ரீ சங்கோத்தோஷம்வாங் கிதிறமானவிக்கல்முதல்திருந்தீரும், வானென்றவாதமெல்லாம்வா ங்கிப்போகும்வளமானநாக்கின்முள்ளும்வாங்குந்தானே. (உ௫அ)

சூரணங்களின்சுத்தி

தானென்றசூர்ணத்தின் சுத்திகேளு தப்பாதேசரக்கெல்லாஞ் சூரணித்து, நானென்றவாவின்பாலாற் பிசைந்துநலமானசட்டியி லேபாலேவிட்டு, வானென்றசுத்தசலம்பாதிவிட்டுவளமாக்மேற்சீலே ஏடுகட்டிப், பானென்றசூரணத்தைப்பிட்டுபோல்வைத்துப் பதரு தேவெந்தெடுக்கச்சுத்தியாமே (உ௫௯)

ஆமப்பாரவியுலர்த்திப் பொடிதான்செய்து அப்பனேசமனுய் ச்சர்க்கரையைச்சேர்த்து, நாமப்பா கொண்டுவரத்தோஷம்போச்சு நன்முகச்சுத்திசெய்யச்சூரணந்தான், தாமப்பாரோகத்தைவெல்லா தப்பாதஞமரணவியாதியெல்லாம்பாரிக்கும்பார், வேமப்பாசுத்திசெ ய்துகொண்டாயானல் வெகுசுருக்காய்த் தீருமடாவியாதிகேளு. ()

செந்தூரவைப்புக்குக்குரு.

கேளப்பாசெந்தூரப்பற்பமெல்லாம்கெடியானசிங்கமுப்பூதொ ட்டாலாகும், நாளப்பாவிதைவிட்டால்பற்பமில்லேநன்றுன லோ கமுதல்சிவப்பேருது, வாளப்பாவிதுவல் லோபுடத்துக்காதிவதை யறியான்வைத்தியன்ல்லமாடுமேய்ச்சி, தாளப்பா வைத்தியர்க்கா ய்க்கருவைச்சொன்னேன்தப்பாதுபற்பமுறை செந்தூரந்தானே.

லோகசெந்தூரம்,

தானென்றலோகசெந்தூரங்கேளு தயவானயரப்பொடியில்ந ல்லெண்ணெய்விட்டு, வானென்னாழிகைதான் அறுபதானல்வளமா கவறுத்ததனேப்பிங்காணில்விட்டு, நானென்றபழச்சாறுபிழிந்துவிட் டுநலமாகக்கிண்டிவைத்துநாலாநாளில், தேனென்றேயுருஞ்சியதை க்கழுவிப்போட்டுத்திறமாகரவியுலர்த்திப்பலந்தான்தூக்கே (உ௬உ)

தூக்கியே சுத்தித்தகெந்திகேளு சுகமாகப்பலமொன்றுகூடப் போட்டு, தாக்கியேபழச்சாற்றுல்சாமம்நாலுசரியில்லாப்பொற்றலே யான்சாசம்நாலு, தேக்கியேயரைக்கையிலேமுப்பூவப்பாதிறமாகக்

ழுஞ்சினிறைசேர்த்துப்போட்டு, வாக்கியேயில்லைசெய்துரவியிற்காய்ந்தால், வளமானமுப்பதெருபுடத்திற்போடே (௨௬௩)

போடப்பாமுக்காலும் பொற்கையானல் புகழாகநாற்சாமமாட்டிக்கொண்டு, நாடப்பாயில்லைசெய்துரவியுலர்த்திநலமாக முன்போலேபுடத்தைப்பேரடு,ஆடப்பாவாரினபின் னெடுத்துப்பாருஅப்பனேமுருக்கம்பூப்போலாம்வர்னம்,காட்டப்பாபணவெடைதானனுபானத்தில் கருவாகத்தேன்கூட்டிக்கொள்ளுகொள்ளே. (௨௬௪)

கொள்ளவேபாண்டுவகை யெல்லாந்தீரும் குழிஞானபித்தவெட்டைபித்தவாய்வு, நள்ளவேவாய்வென்றதெல்லாந்தீரும்நாடாதேயரேரசிகங்களன்னத்தோஷம், விள்ளவேமயக்கமொடு வாந்திதீரும்விருதானபித்தமெல்லாம்விழலாய்ப்போகும்,தள்ளவேயிஞ்சியென்றசூரணத்தில் சாப்பிடவேதேன்கூட்டிச்சாரும்பாரே. (௨௬௫)

அயக்காந்தச்செந்தூரம்.

பாரப்பாகாந்தத்தையிப்படியேசெய்யில் பரிவானகாந்தமொடுசிவப்புமெத்த,சாரப்பாவநுபானமறிந்து கொண்டால்தப்பாதுமூலவகையாவுந்தீரும், சேரப்பாபித்தமெல்லாஞ் சிதறிப்போகூம்தேகத்தில்பாண்டுவெல்லாந்தீருந்தீரும், ஆரப்பாதேனிலேகொண்டாயானல் அருணனைப்போல்காந்தியாமறிந்துகொள்ளே. (௨௬௬)

கொள்ளவேஅயக்காந்தச்செந்தூரங்கேளுகுறிப்பானரண்டையுந்தான்சுத்திசெய்து, நள்ளவேசமனுக்ரண்டையுந்தான்கூட்டிநலமர்னசாதிலிங்கஞ்சமனுய்க்கூட்டி, தள்ளவேவெண்காரங்கால்தான்கூட்டித் தயவானரசங்கால்தான்கெந்திசமனப்பா, விள்ளவேசுத்திசெய்துகல்வத்திட்டுவிருதானபழச்சாற்றுற்சாமம்நாலே. (௨௬௭)

நாலாகமுப்பூவும்கழஞ்சிரண்டு நலமானபொற்றலையால்சாமம்நாலு,காலாகவரைத்துபில்லைரவியிற்காய்ந்தால்கருவானவோட்டில்வைத்தோடுமூடிச், சாலாகமுப்பதெருப் புடத்திற்போடுதப்பாதுசெந்தூரமருணன்போலாம்,மாலாகப்பணவெடைதானனுபானத்தில்மைந்தனேகொண்டுவரப்போம்நோய்கேளே. (௨௬௮)

கேளப்பாபண்டாறுங்கிராணியாறும்கிருபையாம்பித்தமதுநாற்பதும்போம், நாளப்பாவாய்வோடுவாதமெல்லாம் நாடாதேயக்கினியாமந்தங்கேளு,சூளப்பாதாதுவெல்லாமுறுக்கத்தேறும்சுகமாகவெளுத்தசடம்வண்டுபோலாம், ஆளப்பாசுயத்தேனிற்கொண்டாயானல்அணுகாதுபாண்டுவென்றரோகம்பாரே. (௨௬௯)

வோமப்பாசூலையொடுவாயுவெல்லாம்பொல்லாதகொர்ப்பநோய்சொல்லாதோடும்,காமப்பாவாந்தியொடுபொருமல்வில்மல்நாடாதவுஷ்ணமாம்வாய்வுதீரும், தாமப்பாசேத்துமங்க ளெல்லாந்தீரும்தலைமயக்கம்வாயுறல்சாந்தமாகும்,க்ஷேமப்பாபத்தியங்கார் பித்தமெல்லாம்வெகுசுருக்காய்த்திருமடாவின்னங்கேளே. (௨௭௰)

திரிலோகச்செந்தூரம்.

கேளப்பாதிரிலோகச்செந்தூரந்தான்கெடியான லோகமோடப்பிரேகங்காந்தல்,நாளப்பாமூன்றையுந்தான்சுத்திசெய்துநலமாகச்சமன்கூட்டிக்கல்வத்திட்டுத், தாளப்பாசுத்தித்தகெந்திசமன்கூட்டித்தப்பாமல்வாலைரசம்பாதிசேர்த்து ஆளப்பாபழச்சாற்றுற்சாமம்நாலு அப்பனேயரைக்கையிலேபூநீறுபோடே. (௨௭௧)

போடப்பாமுக்கழஞ்சுதூக்கியேதான் பொற்றலையால்நாற்சா
மமரைத்துக்கொண்டு, நாடப்பாசெருப்படையால்சாமம்நாலுநன்
றனகுமரிச்சாறுசாமம்நாலு,தேடப்பாபில்லைசெய்துரவியிற்போடு
திறமாகவோட்டில்வைத்தோடுமூடி,ஆடப்பாசிலைசெய்துபுடத்தை
ப்போட்டு ஆறியபின்னேயெடுத்தணக்கக்கேளே. (௨௭௨)

கேளப்பாலிங்கமரைப்பலந்தான்கூட்டிக்கெடியான குமரிச்சா
றுசாமமெட்டு,நாளப்பாவரைத்துபில்லைரவியிற்காய்ந்தால் நன்றாக
மூப்பதெருப்புடத்தைப்போடு, வேளப்பாசெந்தூரமருணன்போ
லாம்வெகுசுருக்காய்ச்சஞ்சீவிசூரணத்தில், தாளப்பாபணவெடை
தானெய்யிற்கொள்ளத்தப்பாதுமேகநீர்தவறிப்போமே. (௨௭௩)

தவறிப்போம்பாண்டுவகையெல்லாந்தீரும் தப்பாதுபித்தமெ
ன்றநாற்பதுப்போம்,தவறிப்போமேகமென்ற விருப்பத்தொன்றும்
சாந்தமாம்வாயுவெல்லாமொழிந்துபோகும், தவறிப்போமுட்சூடு
மிருமலெல்லாஞ்சந்திரன்போல்தேகமெல்லாங்குளிர்ச்சியாகும்,த
வறிப்போம்பித்தத்தின்கோபமெல்லாம்சண்ணுமடாவின்னமொன்
றுசாற்றக்கேளே, (௨௭௪)

பஞ்சலோகச்செந்தூரம்.

கேளடாபஞ்சலோகச்செந்தூரந்தான் கெடியானதங்கமொடு
வெள்ளிசெம்பு,நாளடாகாந்தமோடிரும்பில்வைத்து நலமாகச்சுத்
திசெய்துசமனுக்கூட்டி, வேளடாகெந்தகந்தான்ரட்டிப்பிட்டுவெ
ருளானசூதமரைவீரங்கால்தான்,ஆளடாமுப்பூவின் சுண்ணமொன்
றுஅப்பனேபழச்சற்றால் சாமம்நாலே, (௨௭௫)

நாற்சாமமரைத்துமேயுலரவைத்துநன்றாக வோட்டிலிட்டோ
டுமூடிச்,சிலானசீலைசெய்துமுழப்புடத்திற் சென்றேதாறினபின்
னெடுத்துக்கொண்டு,காலானகரிசலைச்சாற்றிலாட்டிக் கசகாமல்நா
ற்சாமமரைத்துக்கொண்டு, வேலானமுழப்புடத்திற்செந்தூரமாகு
ம்விதமாகச்செருப்படைநாற்சாமமாட்டே. (௨௭௬)

ஆட்டியேமுழப்புடத்திற்செந்தூரந்தான் அருணனைப்போ
னிறமாகுமெடுத்துக்கொண்டு. மூட்டியேதிரிகடுகிற்பணந்தான்கொ
ள்ளமூதண்டதேன்கூட்டி மண்டலந்தான், நாட்டியேவாயுவென்ற
தெண்பதும்போம்நாடாதுபித்தத்தின்மூலந்தீரும், காட்டியேசேத்
துமங்களிருபதும்போம் கருவாகவின்னமொன்றுகருதிக்கேளே. ()

மண்டூரச் செந்தூரம்.

கேளடாவாயிரந்தான்வருஷஞ்சென்று கெடியானசிட்டமது
கொண்டுவந்து,தாளடாவாவினீர்தன்னிலேதான் தளமாகக்காய்ச்
சியேதோய்ச்சுத்தோய்ச்சு, வேளடாபத்துவிசைதோய்ச்செடுத்து
விருதானகல்வத்திற்பொடியாய்ச்செய்து, நாளடாபத்திலொன்று
கெந்திசூதம் நலமானலிங்கப்பூவெண்காரங்கூட்டே, (௨௭௮)

கூட்டியேபழச்சாற்றில்புடந்தான்பத்து கூசாதேகரிச்சாலைப்
புடந்தான்பத்து, ஆட்டியேசெருப்படையின்புடந்தான்பத்து அ
ப்பனேசெம்மைச்சாறுபுடந்தான்பத்து,நீட்டியேயரசனிடபட்டை
ச்சாற்றில்நேராகப்புடமஞ்சிபோட்டெடுத்து, காட்டியேசெந்தூர
ம்பொடிதான்செய்து சனமானபரணிதனிலடைத்துக்கொள்ளே()

கொள்ளவேதிரிகடுகுதேனிலேதான்கூசாதேபணம்ரண்டுகூட்டிக்கொள்ளே,விள்ளவேவிஷப்பாண்டுகாமாலையாறும்விருதானபாண்டுவகைகுடிபோமப்பா,தள்ளவேபித்தமெல்லாங்கிழேசாடும்தளமானசேத்துமநோய்தொண்ணூற்றாறும், கள்ளவே கடல்புக்கிக்காணாதோடும்கண்டாயோவெண்பாண்டங்கரும்பாண்டமாமே ()

ஆமப்பாவரோசிகங்களன்னதோஷம் அகலாதவாந்திவிக்கலகன்றுபோகும்,தாமப்பாவாயுவென்றதெல்லாம்போகும்தலமானநீர்த்தோஷநாடாதோடும், காமப்பாலூறுமடாதேகமின்னும்கலகலெனத்தோமுழுதிறுகிப்போகும், நாமப்பாகண்டபடிசொன்னோமின்னநலமானவப்பிரோகவகைசொல்வேனே (உஅக)

அப்பிரோகச்செந்தூரம்

சொல்லக்கேள் கிஷ்ணவப்பிரோகம்வாங்கி சுருக்காகக்காய்ச்சியேபாலிற்போட்டு, வல்லக்கேள்கழுவியதையெடுத்துக்கொண்டுவாகானநெல்லோடப்பிரோகங்கூட்டிநல்லக்கேள்காடியிலே பிசைந்தாயானால்நலமானவப்பிரோகமிறங்கும்பாரு, வெல்லக்கேள் மறுநாள்தான்றெளிவிறுத்துவிருதானவப்பிரோகம்ரவியிற்போடே (உஅஉ)

போட்டப்பாவுலர்ந்தபின் பெடுத்துக்கொண்டுபுகழானகல்வத்திற்போட்டுநீயும், ஆட்டப்பாபழச்சாற்றால்நாலுசாமம்அப்பனேபத்திலொன்றுகெந்திகூட்டி, நாட்டப்பாபில்லைதட்டிரவிகண்டேதான்நலமாகமுப்பதெருப்புடத்திற்போட்டு, நீட்டப்பாகெந்தியிட்டுப்பழச்சாற்றாலே நேராகநாற்சாமமரைத்துக்காட்டே. (உஅங)

காட்டியேரவிதனிலேகாய்ந்தபின்பு கனமானவோட்டிலிட்டுப்புடத்தைப்போட்டு,ஆட்டியேகல்வத்திற்போட்டுநீயும்அப்பனேகெந்தியிட்டுப்பழச்சாறாட்டிபாட்டியேபத்துவிசைப்புடத்தைப்போடுபாங்காகப்பின்னெடுத்துக்கரிசாலைச்சாற்றில், வாட்டியேபுடம்பத்துப்போட்டெடுத்துவாகானசெருப்படைச்சாற்விட்டிட்டாட்டே

ஆட்டியேயிருசாம மூலரைவைத்து அப்பனே புடம்பத்துபோட்டெடுத்து, நீட்டியேபொடுதலைச்சாறுபுடத்தான்பத்து நேரானபொற்றலையிற்புடந்தானஞ்சு, நாட்டியேசிறுசெருப்படியின்சாற்றாற் நசகாமற்புடமஞ்சுபோட்டெடுத்து,மாட்டியேமிருகம்பூச்சாற்றாலாட்டிமைந்தனேபுடமைந்துபோட்டுக்கொள்ளே. (உஅரு)

கொள்ளப்பாசெந்தூரமருணன்போலாம் கொடிதானவனுபானமறிந்துகொள்ளு, விள்ளப்பாசயமெட்டுமீளையிருமல் விருதானசேத்துமநோய்தொண்ணூற்றாறும், கள்ளப்பாபறந்தோடுங்கடலேபுக்குங்கருவானசஞ்சீவிசூரணத்தில், அள்ளப்பாபணவெடைதான்றேனிற்கொள்ளஅற்றுப்போகாநீரிழிவுமகன்றுபோமே. (உஅசு)

போமப்பாதேகத்துள்மாந்தையெல்லாம் போகுமடாபிரமியநோயிருமலெல்லாம்,சாமப்பாவுட்சூடுள்ளெரிவுதானும்தளமானதேகமெல்லாங்குளிர்ச்சியாகும்,வேமப்பாவிந்தூறும் புஷ்டியாகும்வெகுநாளையெலும்புருக்கிவிழலாய்ப்போகும், காமப்பாகண்குளிருந்தேகமின்னும் கனமானபற்பவகைசொல்லக்கேளே (உஅஎ)

துருசுகுரு

சொல்லக்கேள்புலத்தியனேபற்பத்துக்குச்சுருக்கானகுருவொன்றுசூட்டக்கேளு,வல்லக்கேள் துருசுசுத்திபண்ணிக்கொண்டுவகை

யாகமுப்பூநீர்மூன்றுநாள்தான்,அல்லக்கேள்சாரநீர் மூன்றுநாள்தா
ன்அழகாகரவியுலர்த்திப்பலந்தான்தூக்கு,வல்லக்கேள்வங்கத்தைக்
கடுஞ்சுண்ணமூதிவாகாகவெடைக்கெடைதான்கவசம்போடே ()

இரசபற்பம்

போடப்பாரவியிலேயேழுநாள்தான் புகழாகக்காய்ந்தபின்புசு
ண்ணச்சிலை, நாடப்பாமூன்றுசுத்திகாயவைத்துநவமானகாடையி
லேகுருவுமாகும், பாடப்பாசிமிழுக்குள்பதனம்பண்ணி பறக்கிற
தோர்சூதத்தில்பத்திலொன்று, நீடப்பாவாய்நீராலரைத்துப்பில்லை
நிசமாகரவியுலர்த்தியோட்டில்வையே . (௨௮௯)

வையப்பாமேற்கீழுங்கல்லுச்சுண்ணம்வகையாக நடுவில்முடை
லைவைத்துமூட்டி; செய்யப்பாசீலையதுமூன்றுசெய்து திறமாககுக்
குடத்திற்பற்பமாகும்; மெய்யப்பாரசபறபம்பரணிதனி லடைத்து
விருதானநெய்யதனிற்பணந்தான்கொள்ள,கையப்பாகாலோடுவில
குச்சூலைகண்காணுதோடுமடாவின்னங்கேளே (௨௯௰)

கேளடாசர்வாங்கவாதந்தீரும் கெடியானகுன்மநோயெட்டுந்
தீரும்,பாளடாவிசுவமுதல்பறந்தேபோகும் பறக்குமடாசன்னியெ
ன்றபதின்மூன்றுந்தான், தேளடாகுத்தியதோர்கபாலசூலைதெரிகெ
ட்டேயோடுமடாசிரநோயெல்லாம், வாளடாதேகமது வசித்துப்
போகும் மகத்தானகெர்ப்பநோய்மாறுந்தானே. (௨௯௧)

தாளகபற்பம்.

மாறுமடாவின்னமொன்று சொல்லக்கேளுவகையானதாளகந்
தான்சுத்திசெய்து, வீறுமடாரசபற்பந்துருசுநீறும் விரகாகவாய்நீ
ராலரைத்துக்கொண்டு,சாறுமடாசமந்தானுந் தாளகத்தி லப்பிச் ச
துராகரவியுலர்த்திச்சுண்ணச்சீலை,சீறுமடாமூன்றுசெய்து சுண்ண
த்தில்வைத்துச் சிறப்பாகக்குக்கிடத்தில்சிவன்பேர்லாமே, (௨௯௨)

ஆமப்பாமால்தேவிபற்பந்தன்னை அளவிலொரு பணந்தூக்கி
த்தேனிற்கொள்ள,வேமப்பாக்ஷயமெட்டுமிளைப்போடீளைவிருதான
சிலேஷ்மநோயெல்லாந்தீரும்,சாமப்பாபிரமியநோய்சாராதோடும்
சடத்திலேகெர்ப்பநோய்சாராதோடும், காமப்பாவெலும்புருக்கி ய
ஸ்திரணங்கள் கண்காணுதோடுமடாவின்னங்கேளு (௨௯௩)

வங்கபற்பம்.

கேளடாவங்கத்தைச்சுத்திபண்ணிக்கெடியாகலேசாகத்தகடுத
ட்டித், தாளடாதாளகமும்ரசமுங்கூட்டிச் சமனுகவாய்நீரா லரை
த்துக்கொண்டு, வாளடாவங்கமென்றகட்டிலேதான்வளமாகப் பூ
சியேசமனுய்நீயும், ஆளடாரவிமுகத்திலுலரப்போட்டு அப்பனேசு
ண்ணும்புச்சீலைசுற்றே (௨௯௪)

சுற்றியேசுண்ணும்புக்குள்ளேவைத்துச் சுகமாகமுழப்புடத்தி
ல்நீறிப்போகும், மத்தியேவங்கமென்றபற்பந்தன்னை வரிசையாய்த்
திரிபலாதிசூரணத்தில்குத்தியேபணவெடைதான்தேனிலப்பாகொ
ண்டுவரப்பத்துநாள்நீரும்நோய்கேள், வற்றியேபிரமியங்கள்பிரமே
கங்கள்வளருகின்ற வெலும்புலுருக்கிமாண்டுபோமே (௨௯௫)

மாண்டுபோங்கிரந்தியது நாற்றுப்பத்தும் வறட்சியொடுசொ
றிசிரங்குமாண்டுபோகும், மாண்டுபோமேஊறல் படர்ந்தவூறல் வ
கையான்சிலவிடங்கள்மாறிப்போகும், மாண்டுபோம்பெரும்பாடுவ

யிற்றுக்குத்தல் மகத்தானபுகைச்சல்விழிமாறிப்போகும் மாண்டு போமேகமென்றசூலையெல்லாம் வகையான்நாகத்தின்பற்பங்கேளே

நாகபற்பம்.

கேளப்பாநாகத்தைச்சுத்திபண்ணிக்கெடியாகலேசாகப்பில்லேத ட்டித்தாளப்பாகாளகமும்வங்கபற்பம்சமனுகநாகத்துக்கிடையேதூ க்கி, வாளப்பாவாய்நீராலரைத்துக்கொண்டு வளமாகச் சிலைமேல்பூ சிக்காய்ச்சித், தாளப்பாசுண்ணும்புச்சிலைசுற்றிச் சத்தமாஞ்சுண்ணு ம்புக்குள்ளேவையே. (உ௯எ)

வைத்தப்பாமுழப்புடத்தில்நீறிப்போகும் * வாசுகிதானீறியபி ன்சொல்லக்கேளு, ஊகத்தப்பாதிரிகடுகுதாளிசப்பத்திரி கருவான லவங்கமக்துஞ்சமனுய்க்கூட்டிப்,பைத்தப்பாரவியில்வைத்துச் சூ ரணித்துப்பதருதேவடிகொண்டுவைத்துக்கொண்டே, எத்தப்பாப ணவெடைதான்தேனிற்கொள்ள எழுந்ததொரு சிலேத்துமநோய் தொண்ணூற்றுறே. (உ௯அ)

* வாசுகி-நாகம்.

ஆறுனரோகமெல்லாமற்றுப்போகும் அப்பனேவாதமெனற தெண்பதும்போம்,வீறுனபித்தமதுநாற்பதும்போம் வெகுசுறுக்கா யமேகமொடுசூலைதீரும், நாறுனகுட்டமென்றதெட்டுந்தீரும்கலமா ணக்கிவிஷங்களசாராதோடும், கூறுனகுமியெரிப்புப்பத்துந் தீரும் குன்மமென்றசூலைமுதல்குடிபோம்பாரே. (உ௯௯)

தாம்பிரபற்பம்.

பாரப்பாதாம்பிரபற்பம்பழச்சாறுதன்னில் பதருதே பதினேந் துதரமேசாய்த்து,நேரப்பாலேசாகத்தகடுதட்டி நினைவாக நாகமுந் தாளகமுங்கூட்டிச்சாரப்பாவாய்நீராலரைத்துக் கொண்டுசமனுகத் தாம்பிரந்தனக்குப்பூசி, ஆரப்பாரவியுலர்த்திச்சுண்ணச்சிலை அப்ப னேசுற்றியேசுண்ணத்தில்வையே. (௩௰)

வைத்தப்பாகனபுடமாய்ப்போட்டெடுக்க வாகான்தாம்பிரம்ப ற்பமாகும்-கைத்தப்பாபோகாதுவெகுசுறுக்காம்காணடாவனுப்பா னமறிந்துபோடு-குத்தப்பாகுன்மமெட்டுஞ்சூலைபதினெட்டுங் குடி போகுந்திரிகடுகுதேனிற்கொள்ளச்- சித்தப்பாவீளையோடிருமலெ ல்லாஞ் சிதறிப்போம்வெள்ளியிடபற்பங்கேளே (௩௰க)

வெள்ளிபற்பம்.

கேளப்பாவெள்ளியதுதகடுதட்டிக் கெடியானரசபஸ்பம்வங்க பற்பம், நாளப்பாநாகமொடுமூன்றுநேராய்நலமானவாய்நீராலரை த்துக்கொண்டு, வேளப்பாவெள்ளிக்குச்சமனுய்ப்போடு விருதான ரவியுலர்த்திச்சிலைசெய்து-சூளப்பாசுண்ணும்புக்குள்ளேவைத்துத் துடியாகமுழுப்புடத்தில்தூக்கிவாங்கே. (௩௰உ)

வாங்கியதோர்பற்பத்தைப்பதனம்பண்ணுவகையாகப்பணவெ டைதான்தேனிற்கொள்ளத் - தேங்கியதோர்கல்லடைப்புச்சதைய டைப்புத் தீராதகிரிச்சனங்கள் தீருந்தீரும்- ஏங்கியதோர்காசமோ டிளைப்புத்தீருமிளைக்குமேலிங்கப்புற்றியோனிப்புற்று- பாங்கியேகி ரந்தி யரிமேகமெல்லாம்பறக்குமடாவின்னமொருபற்பங்கேளே.()

தங்கபற்பம்,

கேளப்பாதங்கமொருபலந்தான்வாங்கிக் கிருபையாய்த்தகடுத ட்டிச்சொல்லக்கேளு - நாளப்பாஅழற்சாற்றில்பூங்காவியாற்றிநல மாகத்தகட்டின்மேற்பூசிக்காயச்சித்-தாளப்பாவைந்துதரங்காயச்சி க்கொண்டுதளமாகவங்கபற்பம்நாகபற்பம்- தேளப்பாரசபற்பம்வீர ம்வெள்ளை சேர்சமனுயண்டத்தினீராலாட்டே. (௩௱௪)

ஆட்டியேசமனுக்த்தகட்டிற்பூசி அப்பனேயண்டத்தில்சுண்ண ம்வைத்து-நீட்டியேமேல்மூடிச்சீலைசெய்து நேராகமுழப்புடத்தில் நீறிப்போகும்-காட்டியேகறுத்தக்கால்வீரங்கால்கூட்டிக்கனமானவ ண்டநீர்தன்னாலாட்டிச்-சாட்டியேரவியுலர்த்தியோட்டில்வைத்துச் சாங்கமாய்முழப்புடத்தில்தாக்கிவாங்கே. (௩௱௫)

வாங்கியேயெடுத்துப்பார் வெண்ணீருரும் வளமானதேனெய் சர்க்கரையிற்கொள்ளச்-சாங்கியேசன்னியென்றமூலமெல்லாம்தப் பாதுதோஷமென்றவேழுந்தீரும்நீங்கியேவலிப்பிசிவும்பறந்துபோ கும்நினைவுகெட்டசேத்துமநோய்தொண்ணூற்ருறுமதேங்கியேவா தநோயெண்பதுந்தான்சிதறிப்போம்பித்தமது வொழிந்துபோமே

ஒழிந்துபோம்பித்தவெட்டைகிராணிபெரும்பாடுஒழியாதபிர மியநோயொடுங்கிப்போகும்-ஒழிந்துபோம் குன்மமெட்டும் பாண் டோராறும் உத்தமனேமேகசலக்கழிச்சல்தீரும்-ஒழிந்துபோம்சூ லைமுதலிசுவுரோகம் ஒ கோகோகுட்டமெட்டும் கடலேபுக்கும்- ஒ ழிந்துபோம்கிராந்தியொடுவெடிமேகந்தான்உட்சுரங்கள்நீர்ச்சுறுக் குமோடும்பாரே. (௩௱௭)

வெண்காரஞ்சிலாசத்துகலைக்கொம்புநல்கார்பற்பம்

பாரப்பாவெண்காரஞ்சிலாசத்துதான் பாங்கானகலைக்கொம்பு கல்நாருந்தன்-சேரப்பாசமனுகப்பொடித்துக்கொண்டு சிறப்பானப பருத்திதான்சமூலமெல்லாம்-நேரப்பா சுட்டதனைச்சாம்பலாக்கிநி னைவாகப்படியென்றதளர்ந்துக்கொண்டு வாரப்பாநாலாறுபடிசல ந்தான்வாக்கலக்கியதைமூடிவையே. (௩௱அ)

வைத்தப்பாநாலர்நாள்தெளிவிறுத்துவாகாகமுன்மருந்தில்வி ட்டேயாட்டிற் கைத்தப்பாநால்சாம மரைத்துவில்லைகனமான ரவி யில்வைத்துலரப்போட்டுஒத்தப்பா ஓட்டில்வைத்தோடுமூடியுத்த மனேசீலைகட்டிமுழப்புடத்திற்போட்டு நித்தப்பாநீறியதுவெள்ளை யாகும்நினைவாகப்பின்னும்தநீராலாட்டே (௩௱௯)

ஆட்டையிலேசாரமதுகாசுபோடு அடங்காதுசூடனதுகாசுபோ டுநீட்டையிலேவீரமதுகாசுபோடுநினைவாகப்பூநீறுகாசுபோடுநாட் டையிலேநால்சாமமரைத்துக்கொண்டு நலமாகவில்லைதட்டிரவியுல ர்த்திச்-சூட்டையிலேசுண்ணம்புப்பொடியில்வைத்துச்சுறுக்காகமு ழப்புடத்திற்சூட்டிவாங்கே. (௩௱௰)

வாங்கியேகறுதாக்காலண்டநீரால்வளமாகவரைத்தொருபுடந் தான்போடு-தாங்கியேவெண்மையதுசங்குபோலாம் தள்மானலிங் கமதுசுத்திசெய்து-பாங்கியேபத்தில்பாதிலிங்கம் பச்சையாய்ச்சே ர்த்துநீபொடியாய்ச்செய்து-தேங்கியேயிளநீரிற்பணந்தான்ரண்டுதீ ர்க்கமாய்க்கொண்டுவரப்போம்நோய்கேளே. (௩௱௰௧)

கேளப்பாபெருவயிறுமகோதரங்கள் கிரிச்சனங்கள்கல்லடைப்புசதையடைப்பு நீளப்பாநீரருகனீரெரிவுதானு நீடாதுகவுசையோடுநீராம்பல்தானும்-ஆளப்பாநீர்ச்சுரப்புவுப்பிசங்கள் அணுகாதுவயிற்றிலுள்ளநீர்க்கட்டும்போம்-தேளப்பாநீரருகல்துள்ளிவீழ்தல் தீருமப்பாபவளமதுபற்பங்கேளே. (௩௱௰௨)

பவளபற்பம்.

கேளப்பாபவளமதுபலந்தானென்றுகெடியானபீங்கானில்நறுக்கிப்போடுவேளப்பாபழச்சாறுவிட்டுநீயும்விருதானநாழிகைதானறுபதானல்-நாளப்பாகழுவியதைக்யெடுத்துக்கொண்டுநலமான கர்ப்பூரச்சிலாசத்துதான்-தாளப்பாசமனுகக்கல்வத்திட்டு சார்வானபிரண்டைச்சாறதனலாட்டே. (௩௱௰௩)

ஆட்டியே நால்சாமம்பில்லைதட்டி அப்பனே ரவியுயர்த்தியோட்டில்மூடி- நாட்டியேமுழுப்புடத்தில்நீறும்பாருநன்றுகப்பின்னுமந்தச்சாற்றுலாட்டிக் - காட்டியேரவியுலர்த்திப்புடத்தைப்போடு கருவானபுளியாரைச்சாற்றுலாட்டி- நீட்டியேயிருசாமமரைத்துக்கொண்டு நினைவாகப்புடம்போடப்பற்பமாமே. (௩௱௰௪)

ஆமப்பாபணவெடைதான்வெண்ணேயிலேகொள்ளஅடங்காதமேகமல்லாம கன்றுபோகும்வேமப்பாவெலும்புருக்கியஸ்திவேகம்விருதானமதுமேகமெட்டும்போகும்தாமப்பாதேனிலேகொண்டாயானல்சகலரணமேலூறல்தவறிப்போகும் தாமப்பாவாயுவெல்லாம்கீழேநோக்கும்தப்பாதுமேகத்தின்தினவுபோமே. (௩௱௰௫)

வாதசுரக்கியாழம்.

போமப்பாசுரங்களறுபத்துநாலும் புகழாகவாதசுரமுப்பத்திரண்டு ஆமப்பா பித்தசுரமிருபத்தொன்றும் அளவான தேத்தும நோய்பதினென்றம்பா நாமப்பாவகைமூன்றறுபத்துநாலும் நலமானவாதசுரக்கியழங்கேளு வேமப்பாசிறுதேக்குசுக்குதிப்பிலிவிதமானசெவியமொடுகோஷ்டந்தானே. (௩௱௱௬)

தானென்றதுராலப்பைதிப்பிலிமூலம் தளமானசித்திரமூலஞ்சங்குமூலம்,வேனென்றவெள்ளருகுநிலவேம்போடுவிருதானமுருக்கம்வேர்கழற்சிவேரும், நானென்றகண்டங்கத்திரிபேராமுட்டிகருவானசிற்றரத்தைமாவிலிங்கம்வேரும், தேனென்றசிறுகாஞ்சோரிபேரரத்தைதெளிவானசதகுப்பைவிஷ்ணுகாந்திபாரே, (௩௱௰௭)

பாரப்பாவிந்தவகையிருபத்தொன்றும்பலம்வீதம்தாக்கியேயிடித்துநையச், சேரப்பாவிருபத்தோர்பங்குபண்ணித் திறமாகவொருபங்குசட்டியிலிட்டு,வாரப்பாமூன்றுசேர்சலந்தான்விட்டு'வளமானநாழிகைதான்முப்பதானல், ஆரப்பாவடுப்பேற்றிக்கால்சேரானல்அப்பனேவடிகொண்டுபீங்கானில்வாரே. (௩௱௰௮)

வார்த்தப்பாவாதராட்சதன்குளிகை வளமாகப்பணமொன்றுபொடித்துப்போட்டுத், தேத்தப்பாதெனதிலே கழஞ்சிகுத்தித்திறமாகவிருநேரங்கொடுத்தாயானல்பார்த்தப்பாவாதசுரம்நடுக்குவாதம் பதலுகின்றநாளின்முறைபறந்துபோகும்,காத்தப்பாகடுப்புவலிகடலேபுக்கும் கருவானபித்தநோய்க்கியாழங்கேளே. (௩௱௰௯)

பித்தசுரக்கியாழம்.

கேளப்பா பித்தசுரமிருபத்தொன்றும் கெடியாகத்தீருமடாகி
யாழங்கேளு,நாளப்பாவிலாமிச்சைசிறுகாஞ்சோரி நலமானவில்ல
வேர்பாதிரிவேர்தானும், ஆளப்பாவதிமதுரஞ்செவ்வல்லிகோஷ்ட
ம் அப்பனேநன்னாரிநிலவாவாரை, தேளப்பாசீரகமுங்கொத்துமல்
லி திறமானதும்பைவேர்பேரீச்சங்காயே. (௩௨௰)

காயோடியானைத்திப்பிலியுமப்பா கருவானநெல்லிமுள்ளிசுக்
கோடொக்கப், பாயோடுபதினைந்துபலம்வீதந்தூக்கிப்பக்குவமாயி
டித்துவையப்பங்குகேளு, தாயோடுவிருபத்தோர்பங்குபண்ணித்த
ப்பாமலொருபங்குசட்டியிலிட்டுச், சேயோடுசலமதிலேமூன்றுசே
ர்தான் திறமாகவிட்டதிலேயடுப்பிலேற்றே. (௩௨௧)

ஏற்றப்பாநாழிகைதான்முப்பதானால் என்மகனேகால்சேர்தா
னெடுத்துக்கொண்டு, சேர்த்தப்பாதேன திலேகழஞ்சுகூட்டித்திற
மானகோரோசனைக்குளிகையொன்று, பார்த்தப்பாவிழைத்தகனை
யிருநேரந்தான்பதருமற்கொடுத்துவரப்பித்தசுரமெல்லாம்,காத்தப்
பாகண்காணுதோடிப்போகும்கருவானநாவறட்சி கழன்றுபோமே.

போமப்பாநாக்கிலுள்ளமுள்ளதெல்லாம் பொறுக்காகநீர்த்தா
கம்போகுஞ்சொன்னேன், நாமப்பாவுடம்பெரிவுகாந்தலெல்லாம்
நடுநடுங்கியோடுமடாயூறலெல்லாம்,சேமப்பாசிரசிலுள்ளபித்தமெ
ல்லாம் சீக்கிரத்திலிறங்கியிடுஞ்சிரோபாரம்போம், ஆமப்பாசேத்
துமசுரம்பதினொன்றுந்தான் அப்பனேதீருதற்குக்கியாழங்கேளே.

சேத்துமசுரக்கியாழம்

கேளப்பாசுக்குதிப்பிலிகிராம்புகெடியானதுராலப்பையக்கிரா
காரம்,காளப்பாகருமுள்ளிகடுக்காயோடு கனத்தவாடாதோடைகர்
ப்பூரவள்ளி,நாளப்பாமூந்திரிகைகண்டங்கத்திரிநலமானபதினொன்
றுவகையைக்கேளு,ஆளப்பாபலவீதம்நிறுத்துக்கொண்டுஅப்பனே
யிடித்துவையப்பங்குதேளே. (௩௨௪)

பங்கென்னபதினைந்து பண்ணிக்கொண்டுபக்குவமாயொருபங்
குசட்டியிலிட்டுப், பங்கென்னரண்டுபடிபலந்தான்வாருபதருதேமு
ப்பதுநாழிகையூறினக்கால்,பங்கென்னவடுப்பேற்றிக்கமலமாகப்பத
ருமல்கால்சேர்தானிடிந்துக்கொண்டு,பங்கென்னதேனிலேகழஞ்சு
குத்திப்பாரப்பாசந்திரோதயம்பணந்தான்போடே. (௩௨௫)

போட்டப்பாகோரோசனக்குளிகையொன்று புகழாகக்கலக்கியி
ருநேரங்கொள்ளக்,காட்டப்பாகபமெல்லாங்கீழேசாடுங்கனசேத்து
மசுரங்காணுதோடும், செட்டம்பாவிருமலெல்லாம்க்ஷணத்தில்தீரு
ம்சிறுகடுப்புக்குத்துவலிசேராதோடும், காட்டப்பாவலியிசுவுங்கல
ங்கியோடும்கருவானசேதியொன்றுசொல்லக்கேளே. (௩௨௬)

சன்னிபதின்மூன்றுக்கும்பெயர்.

கேளப்பாரசன்னிவகைபதின்மூன்றுக்கும் கெடியானநாமமது
சொல்லக்கேளு,நாளப்பாதாந்திரி கனந்தகனுமாகும் நலமானசீதா
ங்கமூத்திரதாம், வேளப்பாசித்தவிப்பிரமையோடு விதமானகண்

ட்குபசங்குருனியாசம், ஆளப்பாவிக்கனுதம்பக்கநேத்திரம்அருளா
னரக்தஷ்டிலிருக்கிதாகமாமே. (௫௨௭)

தோஷமேழுக்கும் பெயர்

ஆமப்பாவிரலாபம்பினியாசம் அப்பனேசன்னிவகைபதின்மூ
ன்றுக்கும், வேமம்பாதோஷமென்றதேழுங்கேளு விருதானகிட்ண
தோஷம்ரத்ததோஷம், நாமப்பாநீர்த்தோஷமஸ்திதோஷம் நலமா
னகொடிதோஷம்வலிதோஷந்தான்,சாமப்பாசை யோகத்தோஷத்
தோடுசதுரானதோஷவகையேழுந்தானே, (௫௨௮)

தானென்றசன்னிகைபதின்மூன்றுக்கும்தனமானதோஷவகை
யேழுக்குந்தான். நானென்றமருந்துவகைமுன்னேசொன்னேம்நல
மானசன்னிக்குத்தைலஞ்சொன்னும்,கானென்றமாத்திரையுங்கலிக்
கஞ்சொன்னேங்கருவானவயித்தியததில்மனதையூன்றிவானென்ற
வயித்தியத்தைப்பார்த்தானுகில் மைந்தனேதன்வந்திரிக்கொப்பாம்
பாரெ (௫௨௮)

கெந்திசெந்தூரம்.

பாரப்பாசெந்தூரஞ் சொல்லக்கேளு பண்பான கெந்தியதை
ப்பலந்தான்வாங்கி; நேரப்பாவோட்டிவிட்டிருக்கும்போதுநேரான
ரசம்பலந்தானுலுவிட்டே,சாரப்பாவலுத்தாக்கால்பற்பம்போலாம்
சாதகமாய்ப்புதுச்செங்கல்பாக்குப்போலுடைத்து, வாரப்பாபாண்
டத்தில்போட்டுப்பின்புவளமானகறியுப்புச்சேரதைதான்வாங்கே()

வாங்கியேமுன்பற்பங்கல்லுப்புக்கலந்துவாகாகப்பாண்டத்திற்
றாவிநீயும்,தாங்கியேமேல்பானைகவிழ்த்துமூடித்தப்பாமலெழுசீலை
மண்ணுசெய்து, சாங்கியேகாய வைத்தடுப்பிலேற்றிச் சாதகமாய்க்
கமலகாடாக்கினியினலே, தேங்கியேநாற்சாம மெரியிட்டாக்கால்
திறமாகமேல்தூறில்பற்பமாமே. (௫௫௧)

ஆமப்பாசூதபற்பம் பலந்தானுலு அப்பனேகெந்திபலமதையுங்
கூட்டி, நாமப்பாவரிதாரம்பலந்தான்தூக்கி நலமாகப்பொடிசெய்
துகுப்பியிலேபாதி,வேமப்பாபோட்டதிலேயேழுசீலைசெய்து விரு
தானரவியிலேகாயப்போட்டுத்தாமப்பாதாளிக்குள்நாலுவிரல்மண்
தான் தப்பாமல்பாதிமேல்குப்பிவையே. (௫௫௨)

வைத்தப்பாகழுத்தளவுமணலைக்கொட்டிவாகாகமுத்தீயுஞ்சா
மம்நாலு,கைத்தப்பாவெரியிட்டேயாறிப்பார்த்தால் கசகாதுதேங்
காய்போல்செந்தூரமாகும்,நைத்தப்பாவுடைத்தெடுத்துப் பதனம்
பண்ணு நலமானவியாதியெல்லாநாடாதோடும், மைத்தப்பாசெந்
தூரம் பலந்தானென்று மைந்தனேமுன்பற்பம்பலந்தானலே. ()

நாலானகெந்திபலமதைதான்போட்டு நலமானதாரங்கால்பல
மாகும்,காலானகல்வத்தில்பொடித்துநீயுங்கசகாமல் குப்பிக்குப
பாதிபோட்டுக், சேலானசீலையோரேழுஞ்செய்து திறமானவாய்க்
குச்செங்கல்தேய்த்துப்போட்டு, வாலானசீலையோரேழுஞ்செய்து
மைந்தனேவாலுகையிலடுப்பிலேற்றே. (௫௫௪)

ஏற்றியேநாற்சாமமுத்தீயாற்போட்டு எடுத்துப்பார்செந்தூர

மருணன்போலாம்,பாத்தியேயிப்படியேபத்துமுறைசெய்துபாங்கா னசெந்தூரமெடுத்துக்கொண்டு,தேத்தியேசெந்தூரம்பலந்தானுலு திறமானபற்பமதுபலந்தானுலு, ஆத்தியேகெந்தியதுபலந்தான்ரண் டு அப்பனேதாரமதுபலமரையுமாமே. (௫௫)

ஆமப்பாசிலைகால்தான்தாளகங்கால்தான் அப்பனே கல்வத்திற் பொடித்துக்கொண்டு, நாமப்பாரத்தப்பூச்சாற்றாலே நலமானநாற் சாமமாட்டிக்கொண்டு,தாமப்பபூவரசன்பூநாற்சாமம் தப்பாமல்தக் காளிபழச்சாறுகேளுசாமபபாவிருசாமம்மாட்டிக்கொண்டு சமர்த் தாகப்பொற்கையான்சாறுகேளே. (௫௬)

கேளப்பாசாமம்ரண்டாட்டிக்கொண்டுகெடியானரோக்கதிலேபல மும்போட்டு,நாளப்பாவரைத்துருர்த்திப்பொடியாச்செய்துநலமா னகுப்பியிலேயரைதான்போட்டுவேளப்பாசீலேயோரேழுஞ்செய்து வெகுசுருக்காய்வாங்கிச்செங்கல்தேய்த்துப்போட்டு,ஆளப்பபாவா ய்க்குமந்தச்சீலைசெய்து அப்பனேவாலுகையிலேற்றியாட்டே. ()

ஆட்டப்பாசாமம்நால்தீபமாக அப்பனேசாமம்நல்ாகமலவன் னிமூட்டப்பாகடாக்கியசாமமெட்டுமூதண்டநிருவாணிபூசைசெய் துகாட்டப்பாவாறினபின்னெடுத்துப்பாறு கதிர்போலே செந்தூர ங்கண்கொள்ளாது நீட்டப்பாலோகத்தில்நூற்றுக்கொன்று நீலைக் குமடாவர்னமதுபத்துதானே. (௫௮)

பத்தாகுந்தேகத்தில்குன்றி யெடைதேனில்பக்குவமாய்வருட மொன்றுகொண்டாயானுல்,வித்தாகும்விந்துவதுவதுகீழ்நோக்கா துவிட்டுவிட்டுச்சரீரத்தோர்வாசிகட்டும்,அத்தாகும்ஸ்திரீகளுடன னுப்போகித்தால்அப்பனேநூறுபேர்தோற்றுப்போவார்,சித்தாகுந் தேகமதுசிவந்தமின்னும்செடமிறுகிவயிரம்பாலாகும்போரே.

காலகண்டமேகநாராயண செந்தூரம்.

பாரப்பாகாலகண்டமேகநாராயணன்பரிவானசெந்தூரஞ்சொ ல்லக்கேளு! சேரப்பாரசபற்பம்பலந்தானெட்டுத் திறமானகந்தக மோபலந்தானப்பா,வாரப்பாதாளகமோபலந்தானென்றுவளமான சிலேயரைசெந்தூரமரைதான், ஆரப்பாலிங்கங்கால்வெள்ளிகால்தா னப்பனேவெள்ளீயம்பலந்தானென்றே. (௫௬௰)

ஒன்றானநாகமரைவங்கங்கால்தா னுத்தமனேசெம்பதுவுங்கழ ஞ்சிரண்டு-நன்றானதங்கமதுகழஞ்சுவொன்று நாட்டப்பாநாபியொ ருபலமும்நீதான்-குன்றுமற்பொடிசெயதேயரைப்புகேளு கூறான பொற்கையான்சாமம்நாலு - சென்றானகுமரிப்பூச்சாமம்நாலுசேர் முருக்கம் பூச்சாறுசாமம்ரண்டே. (௬௬௧)

ரண்டானபாதிரிப்பூச்சாறுசாமம் ரண்டாகும் பழச்சாற்றில் செம்பரத்தம்பூபோட்டு வென்றுகவெளுத்தபின்பெறிந்துபோட்டு விருதாகவிருசாமமெடுத்தேயாட்டு,சென்றுக ரவியுலர்த்திப்பொடி தான்செய்துசேரப்பாகுப்பிக்குச்சீலைசெய்து, வின்றப்பாகுப்பிக்கு ப்பாதிபோட்டுவிருதாகவாய் மூடிச்சீலைசெய்யே, (௫௬௨)

செய்தப்பாவாலுகையிலடுப்பிலேற்றித் திறமாகத்தீபாக்கினியெ ட்டுசாமம்செய்தப்பாகமலமோரொட்டுசாமம்தீர்க்கமாய்கடாக்கினி

க்கினிசாமமெட்டு, செய்தப்பாதீயாற்றி யீசானிபத்திற்சேர்கறியும துவோடுபூசைபண்ணு, செயதப்பா குப்பிதனை வாங்கிப்பாரு திற மாகக்கருஞ்சிவப்பாய்ச் செந்தூரமாமே, (௩சஙு)

ஆமப்பா பண வெடைதான் தேனிற் கொள்ள அணுகாது குன்ம மெட்டும் பீலியாறும், போமப்பா பெருவயிரு மகோதர ங்கள் பொல்லாத சதைவிம்மல் நீரருக்கல், காமப்பால் விளைத்த தொரு சோகைப் பாண்டு கனமான நீர்க்குத்தல் காணு தோடும், சாமப்பா வக்கினியா மந்த மெல்லாம் சண்ணுண்டு போகு மடா சேதிகேளே. (௩சச)

ரசலோகச் செந்தூரம்,

சேதியொன்று சொல்லுகிறென்புலத்தியனே ஐயா திறமான ரசலோகச்சேந்தூரந்தான், ஆதியென்றசூதபற்பம் பலந்தான்ரண் டுஅப்பனேலோகமொன்றுகாந்தமரைகூட்டி, வாதியாம்லிங்கமரை வெண்காரமரைதான்வளமாகச்சாரங்கால்நாபிகால்தான்காதியென் றகெந்தியினுற்செந்தூரங்கால் தான் கனமாகப்பொடிசெய்தே யரை ப்புகேளே (௩சரு)

கேளப்பாபழச்சாற்றுற்சாமம்நாலுசெடியாகப்பொற்கையான் சாமம்ரண்டு, நாளப்பாசெருப்புகால் சாமம்ரண்டு நலமானகுமரி ப்பூசாமம்ரண்டு, தாளப்பாசெம்முள்ளிசாமமொன்று தளமகாவே யரைத்து ரவியிற்போட்டு,வேளப்பாசெய்ததனைக்குப்பிக்கேற்றிவி தமானவாய்மூடி வாலுகையில்வையே. (௩சசு)

வைத்தப்பா வடுப்பேற்றியெட்டுசாமம் வாகாகத்தீபாக்கினிக மலங்கேளு, கைத்தப்பா சாமமெட் டெரித்துக் கொண்டு கன மாண காடாக்கினி சாமமெட்டு, வித்தப்பா வாறவிட் டுடைத்து வாங்கு விருதாகச் செங்கல்நிற மாகக்காணும், பைத்தப்பா பொ டி செய்து பணந்தேனி லுண்ணப் பறக்குமடா காமாலே பாண் டுதானே, (௩சஎ)

தானென்றபித்தநோய்தலேகெட்டோடும் தப்பாதுவாதமென் றதெண்பதும்போம்,நானென்றசன்னியெல்லாம்நாடாதோடும்நல மான•வாயுவென்ற தெல்லாந் தீரும், தானென்ற தலேயிலுள்ள வி யாதி யெல்லாம் கடல்புக்குஞ் சூலேபதினெட்டுந் தீரும், மானெ ன்ற தேனிலேபத்து நாள்கொள்ள மதுமேகந் தீருமடா வின்னர் கேளே, (௩சஅ)

ரசகர்ப்பூரபற்பம்,

கேளடாரசகர்ப்பூரங்கேளு கிருபையாய்ச் சுத்தரசஞ் சுத்தி செய்து, நாளடாகல்லுப்பு குகைபோற்பண்ணி நலமானரவியிலே காயப்போட்டு,தேளடாசட்டிக்குளுப்பைப்போட்டுத்திறமானமே ற்சட்டிக்கொண்டுமூடி,தாளடாவெழுசீலேமண்ணுஞ்செய்துதளமா னரவியிலேகாயப்போடே, (௩சகூ)

போட்டப்பாவடுப்பேற்றிக்கமலமாகப்புகழாகநாற்சாமமெரித்தாயானல், நீட்டப்பாதேங்காய்ப்போலிறுகிநிற்கும் நிசமாகவதையெடுத்துத் தூக்கிக்கொண்டு, காட்டப்பாபலநாலு பீங்கானுக்குள் கருவானவெற்றிலையின்சாற்றில்விட்டு, ஆட்டப்பாரவிமுகத்திலுலர்ந்தபின்பு அப்பனேநீயஞ்சுதரம்சாறுவிட்டே. (௱௫௰)

விட்டப்பாரவியிலேயுலர்ந்தபின்பு விருதாகபொடிபண்ணிகுப்பிக்கிட்டு, விட்டப்பாவனாவ சிமட்டம்போட்டு விளக்கியேயெழுசீலமண்ணுஞ்செய்து, விட்டப்பாவாலுகையில் வைத்துநன்றாய்விதமாகவெண்சாம முத்திவிட்டு, விட்டப்பா வாரியபின்னுடைத்துப்பாருவிதமானபற்பமதையெடுத்துக்கொள்ளே, (௱௫௧)

கொள்ளப்பாநாலுபல மெடுத்துக்கொண்டு குறிப்பானபற்பமதுபலநால்தூக்கி, நள்ளப்பாபொடிசெய்து வெற்றிலையின்சாறுநலமாக விட்டதிலே ரவியுலர்த்து, விள்ளப்பா பெருவிலே யனைவாசிபோட்டு விருதான வாலுகையி லடுப்பிலேற்றி,கள்ளப்பா முத்தீயுஞ் சாமமெட்டு கசகாம லெடுத்தாறிப் பின்னுடைத் துப்பாரே. (௱௫௨)

பாரப்பாமுன்போலேபத்துத் தொந்தம் பரிவாகவெடுத்தெடுத்துப் பதனம்பண்ணி, சாரப்பாபணவெடைதா னெய்தேனிற்றுன்சார்வாக மண்டலங் கால் கொண்டா யானல், சேரப்பா சூலை பதினெட்டுங் தீரும் திறமான கிரந்திபுண் புரைகள் தீரும், வேரப்பா மேலூற லஸ்திரண மெல்லாம் வெவ்வேறாய்த் தீருமடா வின்னங்கேளே. (௱௫௩)

காரீயச்செந்தூரம்.

கேளப்பாகூரீயச்செந்தூரந்தான் செடியானகாரீயம் பலந்தானுலு, நாளப்பா பழச்சாற்றிலுருக்கிச்சாய்த்து நலமானநல்லெண்ணெய் கோமயத்திலேழு, தாளப்பா கோசலத்திற் கொள்ளுச் சாற்றில் தளமான காடியிலே யுருக்கிச் சாய்த்து, ஆளப்பா வகையொன்றுக் கேழுதரஞ் சாய்த்து அப்பனே பலநாற் சட்டி யிலே வையே. (௱௫௪)

வைத்தப்பாரசமதுதான்கால்தான்கூட்டி வளமாகவுருக்கையிராவாரைப்பஞ்சாங்கம்,தைத்திலேநறுக்கியேபிடித்துக்கொண்டு தளமாகப்போட்டதிலேவறுப்பாயப்பா, நைத்திலேநாற்சாமம்வறுத்தாயானல் நலமானசெந்தூர மருணன்போலாம், பைத்ததிலே செந்தூரமெடுத்துக் கொண்டு பத்தியமாய்ச்சீசா விற்பதமதாமே (௱௫௫)

ஆமப்பாநாற்சாமமருத்துபோட்டு அப்பனேகாற்சாமம்சும்மாய்வறுத்து,தாமப்பாசெந்தூரமெடுத்துக்கொண்டு,தளமானதேனெய்யில் பணந்தானுண்ணப், போமப்பாபிரமியநோய் பெரும்பாடெல்லாம்பொல்லாதகிரிச்சனங்கள்போருஞ்சொன்னேன், காமப்பாநீரிழிவுகட்டேலேபுக்கும் கலங்காதேகல்லடைப்பு தெறிக்கும்பாரே. ( )

பூரணச்சந்திரோதயம்.

பாரப்பா பூரணச்சந்திரோதயமென்றால் பறக்குமடாவியாதியெல்லாஞ்சொல்லக்கேளு, தாரப்பாரசமிரண்டுசிலையனாக்கால்தவறாமல்மால்தேவியனையுங்கூட்டி, வேரப்பாலிங்கமனை செந்தூரமனை தான் வெகு சுருக்காய்ரேக்கதுவும் பலந்தானென்று, காரப்பா சரக்கெல்லாங் கல்வத்திட்டு கசகாமற் பொடித்துமன மொன்றுபட்டே. (௩௫௭)

ஒன்றைப்பா வரைப்புக்குச்சாறுகேளு, உத்தமனேபழச்சாற்றிற்செம்பரத்தம்பூபோட்டு கன்றப்பாவெளுத்ததிலேகாள்தான்சென்றால்கலங்காதேபிழிந்தெறிந்துமருந்தில்விட்டு,வின்றப்பாசாமமேயிருபதாகும் வேளாதபொற்கையாணிருபத்தொன்றும், சென்றப்பாவரைக்கையிலேதுருசுகுருகேளு சிறமாக பணவெடைதான் கூட்டப்போடே. (௩௫௮)

போட்டப்பா ரவிலுயர்த்திப் பொடிதான்செய்து புகழான மேருவிலேயனைவாசிபோட்டு, காட்டப்பா சீலேயோரேழுசெய்து கனமானவாலுகையி லடுப்பிலேற்றி நீட்டப்பா தீபமோரொட்டுச்சாமந்திலேயானகமலவன்னியெட்டுச்சாமம், ஆட்டப்பாகடாக்கினியாறுசாமம் அப்பனேசலாகையிட்டுக்கிண்டிப்பாரே. (௩௫௯)

பாரப்பாசலாகைமுகங் கறுப்புகண்டால் பக்குவமென்றே தீயையாற்றிப்போட்டு; சேரப்பாபூரணச்சந்திரனைப்போலேதிறமாகக்காந்தியா யிருக்கும் பாரு, வாரப்பா வுடைத்தெடுத்து மலமேதூங்கி வகையாகப் பொடிசெய்து கஸ்தூரிகேளு, ஆரப்பா கழஞ்சியொன்றுகூடப்போட்டு அப்பனேகோரோசினைத்தான் கழஞ்சியாமே, (௩௬0)

ஆரப்பா கூடவிட்டுப் பொடிதான்செய்து அப்பனே பரணிதனிலடைத்துக்கொண்டு, சேமப்பாபணவெடைதான்தேனிற்கொள்ள திராதசன்னியென்றமூலந்தீரும், வேமப்பாதோஷமென்றதேழுந்தீரும்வெருளாதசேத்துமநோய்தொண்ணூற்றாறும், வாமப்பாகீழ் நோக்கிவலியுந்தேகம் வளமான குப்பிவைத்து தியானஞ்செய்யே, (௩௬௧)

செய்யவேபூரணசந்திரோதயமென்றால் திடுக்கிடுமேசுரமென்றதறுபத்தினாலு; கையவேகாச மெட்டுங்கடலேபுக்கும் கனமான ரோகநோயிருபத்தொன்றும்,பையவேபிரமியங்க ளகன்றுபோகும் பாரப்பா தேகமது சிவந்துமின்னும், வையவேவருட மொன்று பணவெடைதான் கொள்ள மகத்தான தேகமது சந்திரன் போலாமே. (௩௬௨)

ஆமப்பாகோங்கின்பூசூரணமேசெய்து அப்பனேபூரணச்சந்திரோதயம்வைத்து, நாமப்பாமண்டலந்தான்மூன்றுசென்றால் நலமானதேகமேயருணன்போலாம், போமப்பாசரஸ்வதிதானிருத்தஞ் செய்வாள் புகழானசுபமெல்லா பாட்லாங்கேள், காமப்பாவிறு குமடா சையோகத்தில் கருவான விந்துவது வீழாதென்னே. (௫௬௫)

என்னவேபத்தியங்தான்பாலுஞ்சோறும்இதமானவாவிநெய்சிறுகீரையாகும், பன்னவேபொன்னாங்காணி புளியாரையாகும்பக்குவமாய்த்தேனேடு சர்க்கரையுமாகும், கன்னவே மிளகு சீரகமுமாகும்கறியொன்றால்முள்ளித்தூதுளையுமாகும், தன்னவேபருப்புக்குள்பாசிபயறுமாகும் தளமானசந்தனதித்தயிலமூழ்கே, (௫௬௫)

முழுகவேவியாதியெல்லாங்கடலேபுக்கும்முக்கியமாய்அகஸ்த்தியர்குச்செபந்தான்பண்ணு, நெகிழவே தியானமெங்நேரமுமாய்ப்பண்ணுநோாகத்தேவியைத்தான் தியானம்பண்ணு, திகழவே சிவன் தனையே பூசைபண்ணு தீராத வியாதியெல்லாந்தவறுண்டேபோம் மகிழவே வயித்தியஞ்செய் தானகில் வையகத்லீசனவனுகு முற்றே. (௫௬௪)

வயித்தியரத்தினச்சுருக்கம்

முற்றிற்று.

———*———

உ

சிவமயம்.

அகஸ்தியமுனிவரருளிய

வயித்தியரத்தினச்சுருக்கத்து

மருந்தின் தலைப்புகளின்-அகராதி

—(*)—

பக்கம்.	பெயர்.	பாடற்றொகை,	பக்கம்.	பெயர்,	பாடற்றொகை,
௰௭	அக்கினிசூரணம்	௱௨௫	௪௪	காளகண்டமேகநாராயணசெந்தூரம்	௩௪௰
௰௮	அசுவகெந்திசூரணம்	௱௨௯			
௨௧	அசுவகெந்திபலராட்சததைலம்	௱௫௧	௨௫	கீழ்க்காய்நெல்லித்தைலம்	௱௮௫
௩௭	அப்பிரோகசெந்தூரம்	௨௮௨	௨௨	குமரித்தைலம்	௱௯௧
௩௫	அயக்காந்தச்செந்தூ	௨௯௯	௰௪	கூழ்மாண்டலேகியம்	௯௪
௯	அர்த்தநாரீஸ்வரம	௯௰	௨௮	கூழ்மாண்டகிருதம்	௨௱௰௧
௩௩	ஆக்கிராணநசியம்	௨௫௫	௪௩	கெந்திசெந்தூரம்	௩௩௰
௨௫	ஆதண்டத்தைலம்	௱௮௭	௨௨	கொம்பரக்குதைலம்	௱௯௫
௭	இதுவுமொருவகை	௪௧	௯	கோரேசினைக் குளிகை	௫௫
௮	இரசசிந்தாமணி	௫௰	௨௰	சஞ்சீவிசூரணம்	௱௪௫
௩௮	இரசபற்பம்	௨௮௯	௨௩	சந்தநாதித்தைலம்	௱௭௩
௬	இரசானந்தவைரவம்	௩௫	௰௪	சரபங்கவில்வாதிலேகிய	௯௭
௨௰	ஏலாதிசூரணம்	௱௪௯	௰௭	சவுபாக்கியசுண்டி	௱௰௯
௨௯	கணத்தெண்ணெய்	௨௨௩	௫	சித்தாநந்தவைரவம்	௩௩
௰௧	கண்டாத்திரிலேகியம்	௭௩	௰	சிலோதாரிமணி	௬௪
௰௨	கண்டங்கத்திரிலேகியம்	௮௰	௰௨	சிந்தாதிலேகியம்	௮௩
௰௫	கண்டங்கத்திரிலேகிய	௱௩	௩௩	சுகசீதபேதியெண்	௨௪௯
௨௯	கண்டங்கத்திரிகிருத	௨0௰௯	௬	சுயமக்கினி	௩௯
௰௮	கண்டாத்திரிசூரணம்	௱௩௧	௩௪	சூரணங்களின்சுத்தி	௨௫௯
௩௪	கண்டாவிழ்தம்	௨௫௭	௩௪	செந்தூரவைப்புக்குக்குரு	௨௬௧
௭	கபாடமாத்திரை	௪௩			
௰௫	கபாடலேகியம்	௱௮	௪௨	சேத்துமசுரக்கியாழ	௩௨௪
௩௰	கரப்பானெண்ணெய்	௨௨௭	௪௰	தங்கபற்பம்	௩௱௪
௰	கரிசாலைஇலேகியம்	௬௬	௩௯	தாம்பிரபற்பம்	௩௱
௩௨	கலிங்காதியெண்ணெ	௨௪௧	௩௮	தாளகபற்பம்	௨௯௨
௪௨	சன்னி பதின்மூன்றுக்கும்பெயர்	௩௨௭	௰௮	தாளிசப்பத்திரிசூரண	௱௩௪
			௰௬	திப்பிரசாயனம்	௱௰௨
௪௬	காரீயச்செந்தூரம்	௩௫௪	௰௭	திரிசாட்சதசூரணம்	௱௨௯

மருந்தின்தலைப்புகளின் அகராதி.

பக்கம்.	பெயர்.	பாடற்றொகை,
௩௫	திரிலோகச்செந்தூரம்	௨௪௧
௩௭	துருசுகுரு	௨௮௮
௨௮	தூதுளைக்கிருதம்	௨௱௰௫
௪௩	தோஷமேழுக்கும் பெயர்	௩௨௮
௫	ஸ்திரீ புருடர்களுக்கு நாடிபார்க்கும்வகை	௩௰
௩௪	நசியம்	௨௫௬
௩௯	நாகபர்பம்	௨௯௭
௨	நாடிநிதானம்.	௧
௩	நாடிபார்க்குங் காலம்	௰௩
,,	நாடிஇலக்கணம்	௰௪
௫	நாடிபார்க்கும்மாதவகை	௩
௨௬	நிலப்பனைக்கிருதம்	௱௯௬
௰௯	நிலவாகைச்சூரணம்	௱௩௯
௰௧	பஞ்சதீபாக்கினி இலேகியம்	௭௭
௰௯	பஞ்சதீபாக்கினிசூரண	௧௩௭
௩௬	பஞ்சலோகசெந்தூர	௨௭௫
௨௫	பதின்மூன்று சன்னிக்குத்தைலம்	௱௯௰
௪௧	பவளபற்பம்	௩௱௰௩
௩௩	பழத்தெண்ணெய்	௨௫௧
௪௨	பித்தசுரக்கியாழம்	௩௨௰
௨௭	புளியாரைக்கிருதம்	௨௱௪
௭	பூபதிகுளிகை	௪௬
௯	பூமணிக்குளிகை	௫௮
௪௭	பூரணச்சந்திரோதய	௩௫௭
௨௪	பொன்னாங்காணித்தயிலம்	௱௮௩
௨௭	பொன்னாங்காணிக்கிருதம்	௨௱௧
௰௩	மகாவில்வாதிலேகியம்	௮௮
௩௭	மண்டூரச்செந்தூரம்	௨௭௮
௰௬	மல்துமிரசாயனம்	௱௰௪
௩௰	மாந்தஎண்ணெய்	௨௩௰
௨௩	மிருகாமலத்தைலம்	௱௯௯
௩௰	மேகத்தெண்ணெய்	௨௩௨
௪௫	ரசகற்பூரபற்பம்	௩௪௯
௪௫	ரசலோகசெந்தூரம்	௩௪௫
௩௪	லோகசெந்தூரம்	௨௬௨
௩௮	வங்கபற்பம்	௨௯௪
௰௯	வல்லாரைச்சூரணம்	௱௪௨
௨௭	வல்லாரைக்கிருதம்	௨௱௭
௪௧	வாதசுரக்கியாழம்	௩௱௰௬
௩௨	வாதஎண்ணெய்	௨௪௬
௬	வாதராட்சகன்	௩௬
௨௧	வில்வாதிதைலம்	௱௫௭
௩௧	விழுதிஎண்ணெய்	௨௩௬
௩௩	வீரபத்திரகலிக்கம்	௨௫௪
௪௰	வெண்காரஞ் சிலசத்துகலக்கொம் புகல்நார்பற்பம்	௩௱௮
௩௯	வெள்ளிபற்பம்	௩௱௨

அகராதிமுற்றிற்று.